Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா  செய்தி: 021 493 0000  விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35  கதிர் : 112  பங்குனி 07ஆம் நாள் வெள்ளிக்கிழமை 20 மார்ச் 2020  வள்ளுவர் ஆண்டு 2051

புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

உள்ளே


## அரச துறையினருக்கு மார்ச் 23இல் சம்பளம்

கொழும்பு, மார்ச் 20

அனைத்து அரச துறையின ருக்குமான மார்ச் மாதச் சம்ப ளத்தை 23ஆம் திகதி வழங்கு மாறு திறைசேரி செயலர் பணித் துள்ளார்.

கொரோனா வைரஸ் பரம்ப லைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டுள்ளது. எதிர்வரும் ஒரு வாரம் வீட்டிலிருந்தவாறே அரச அலுவலர்கள் பணி 06

முச்சந்தி முரளி



"கோடுமேய்ச்சாலும் கோர்ஸ்மேந்தில மேய்க்கோணும். இப்ப கொரோனா வந்து வீட்டுலையும் மேய்க்கலாம் பாருங்கோ..."

## வீட்டுக்குள் அரச பணி

கொழும்பு, மார்ச் 20

இன்று 20ஆம் திகதி முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரையான காலப்பகுதி அரச, தனியார் துறைகளுக்கு வீட்டிலிருந்து வேலை செய்யும் வாரமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று மாலை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

'கொரோனா வைரஸ் இலங்கையினுள் பரவுவ தைத் தவிர்ப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கை களையும் எடுத்துள்ளது. அது ஒரு தொற்று நோய் நிலைமையாக மாறுவதைத் தவிர்ப்ப 25

# தள்ளிப்போனது தேர்தல்

## கொரோனாத் தாக்கத்தைப் பொறுத்து புதிய திகதி என்று தேசப்பிரிய அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 20

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதாக தேர் தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்றுத் தெரிவித்தார். 25

## ஞானசாரர் நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 20

ஞானசாரதேரரின் வேட் புமனுநிராகரிக்கப்பட்டுள் ளது.

பொதுபல சேனாவின் பொதுச்செயலர் கல கொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான அபே ஜன பல கட்சியி னால் குருநாகல் மாவட் டத்தில் போட்டியிடுவதற் காக தாக்கல் செய்யப் பட்ட வேட்பு மனு நிராக ரிக்கப்பட்டுள்ளது. (ம)

## சிறிதரனுக்கு கொரோனா தொற்றில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பி 06

## கொரோனாவுக்கு 60 பேர் பாதிப்பு

நேற்று மட்டும் 10 பேர்

கொழும்பு, மார்ச் 20

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் நேற்று மாலை வரை 60 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது, சுகாதார 06

## 'கொரோனா' ஒழிப்புக்கு 500 மில்லியன் ரூபா நிதி

அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸ் தொற்று ஒழிப்புக்காக 500 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கிடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கொரோனா தொற்றுக் காரணமாக பொருளாதா ரத்துக்கு ஏற் 25

## 38ஆயிரம் வெளிநாட்டவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்!

கொழும்பு, மார்ச் 20

இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை மீள அவர்க ளது நாட்டுக்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் விடுக்கப்பட்ட அறி விப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாட்டில் சுமார் 38 ஆயிரம் வெளி நாட்டவர்கள் தங்கியுள்ளனர். அவர்களை, அவர்களின் சொந்த நாட்டிற்கு அனுப்புவதற்கான நட வடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படும். கொரோனா வைரஸ் பரவலையடுத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப டுகின்றன - என்றுள்ளது. (ம)

## கொரோனா பலி 10,000!

பீஜிங், மார்ச் 20

கொரோனா வைரஸின் தாக்கத்தால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தொட் டுள்ளது. 06

## நாகர்கோவிலில் நேற்று இராணுவம் அத்துமீறல்!

பெண்கள், சிறுவர்களையும் தாக்கினர் என குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணம் நாகர்கோவில் பகுதியில், இராணுவ சீருடை மற்றும் சிவில் உடையில் ஆயுதங்களுடன் வந்த படையினர் இளைஞர் ஒருவரை கைது செய்ய முயற்சித்துள்ளதுடன் அந்தப் பகுதியில் 06




அவசரத் தேவைகளுக்கு பணம் வேண்டுமெனில் வீட்டில் இருக்கும் தங்க நகைகளை எடுத்துக்கொண்டு DFCC வங்கிக்கு வாருங்கள்.

மறைமுகக் கட்டணங்கள் ஏதுமின்றி 1.17% குறைந்தபட்ச மாதாந்த வட்டியுடன் முன்னறிவித்தல் இன்றி தங்க நகைகளை மீட்கும் வசதியுடன், 24 கரட் பவுணுக்கு ரூபா. 55,000/- அதிகபட்ச முற்பணத் தொகை.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# கொரோனாவுக்குப் பயந்து நோயாளியாகி விடாதீர்கள்

## மருத்துவமனைக்குச் செல்வது அவசியம் என போதனா மருத்துவர்கள் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 20

கொரோனா தாக்கம் ஏற்படும் என்று பயந்து சாதாரண நோய் நிலைமைகளுக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டிய தேவையையும், கிளினிக் நோயாளிகள் மருத்துவமனைக்கு செல்வதையும் தவிர்க்க வேண்டாம் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கொரோனா தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுவதற்கு தன்னார்வ விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபடவுள்ள இளையோருக்கான தெளிவூட்டல் நிகழ்வு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே மருத்துவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வயது வந்தவர்களையே அதிகம் தாக்குகிறது. இருதய நோய், நீரிழிவு, குருதி அமுக்கம், நீண்ட காலம் நுரையீரல் நோய் உள்ளவர்கள் கொரோனாவால் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களையும் கொரோனா இலகுவில் தாக்குகின்றது. ஆகவே இந்த நோய் உள்ளவர்கள் கிளினிக் சென்று ஒழுங்கு முறையில் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுகொள்ள வேண்டும். வேறு நோய் நிலைமைகள் உள்ளவர்கள் தாம் மருத்துவமனைக்குச் சென்றால் தமக்கும் கொரோனாத்தொற்று ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தில் உள்ளனர். இப்படியான மனநிலை வேண்டாம் என்றனர்.

(ம-7)

# டெனீஸ்வரனின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது நேற்று!

வவுனியா, மார்ச் 20

விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக முன்னாள் வடமாகாண அமைச்சர் ப.டெனீஸ்வரன் சுயேச்சைகுழு சார்பாக நேற்றயதினம் வேட்புமனுவினை தாக்கல் செய்திருந்தார். இந்த நிலையில் அவரது வேட்புமனு தேர்தல் திணைக்களத்தால் நிராகரிக்கப் பட்டது.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கான இறுதிநாளான நேற்று விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையின் சார்பில் போட்டியிடுவதற்காக முன்னாள் மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் ஏனைய வேட்பாளர்கள் வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு நேற்று வருகைதந்து வேட்புமனுவினை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த நிலையில் கட்சியின் பொதுச் செயலர் கையொப்பம் இடவேண்டிய இடத்தில் கையொப்பம் இடாமையினால் அவர்களது விண்ணப்பம் தேர்தல் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து அவர் கவலையுடன் மாவட்டச் செயலகத்தில் இருந்து வெளியேறினார்.

(ம-110)

# முகக் கவசங்கள் தொடர்பில் அரசு அதிரடித் தீர்மானங்கள்

கொழும்பு, மார்ச் 20

அதிக விலைக்கு முகக் கவசங்களை விற்பனை செய்யும் அல்லது பதுக்கும் நபர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


மீளப் பயன்படுத்த முடியாத சாதாரண முகக் கவசம் 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. 'என் 95' வகை முகக் கவசத்துக்கு 325 ரூபா உச்சபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த விலைகளைவிட அதிகரித்த விலையில் முகக் கவசங்களை விற்பனை செய்யும் மருந்தகங்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும் என தேசிய மருந்தகங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

முகக்கவசங்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் அல்லது அவற்றை பதுக்கும் நபர்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி மருத்துவர் கமல் ஜயசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் முகக்கவசங்கள், தொற்று நீக்கிகள் உள்ளிட்ட கிருமி நீக்கிகள் அனைத்துக்கும் விதிக்கப்பட்ட அனைத்து வரிகளும் நீக்கப்படுவதாக நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. குறித்த இறக்குமதிப் பொருட்கள் விசேட வர்த்தகப் பொருள் வரிச் சட்டத்தின் கீழ் உட்படுத்தப்பட்டுள்ளன என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

(ம-22)

# மட்டக்களப்பில் தீ 3 கடைகள் நாசம்



மட்டக்களப்பு, மார்ச் 20

மட்டக்களப்பு, கல்லடியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று மாலை ஏற்பட்ட தீ காரணமாக மூன்று வர்த்தக நிலையங்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் உள்ள ஹாட்வெயார் கடை ஒன்றில் ஏற்பட்ட தீ காரணமாகவே இந்தத் தீப் பரவல் இடம்பெற்றது. இதுதொடர்பாக மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கையை முன்னெடுத்தது.

(ம)

# இலங்கையர்களின் விசாக்களை நீடிக்குமாறு அரசு வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 20

இலங்கையர்களின் விசாக்களை நீடிக்குமாறு வெளிநாடுகளிடம் அரசு கோரிக்கை விடுத்துள்ளது. மேற்குலக நாடுகளின் தூதுவர்களை சந்தித்த வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத்த ஆரியசிங்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதன்போது நாட்டிலுள்ள வெளிநாட்டவர்களின் விசா காலத்தை நீடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பில் தூதுவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். இலங்கையில் கண்காணிப்பு மத்திய நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்களின் நிலை தொடர்பிலும் அவர்கள் நாடு திரும்புவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(ம-22)

## சேர்த்து வாசிக்கவும்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரம் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. அதில் கனகரட்ணம் சுகாசின் பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது. அதை சேர்த்து வாசிக்கவும்.

# கொரோனா தொடர்பில் முன்னேற்பாடுகள் தேவை

## யாழ். மாநகர முதல்வர் ஆளுநரிடம் கோரிக்கை

கொரோனா வைரஸால் இதுவரை வடக்கு மாகாணத்தில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்ற சிந்தனை யோடு, எவ்வித முன்னெச்சரிக்கையும், முன்னேற்பாடு களுமின்றி அசமந்த போக்கில் இருக்கின்றோம் என எண்ணத் தோன்றுகின்றது. எனவே இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும் என்று யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் வடக்கு மாகாண ஆளுநரைக் கோரியுள்ளார்.

இது தொடர்பில் மாநகர முதல்வர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது;

கடந்த செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண சுகாதார அமைச்சில் கொரோனா வைரஸ் கட்டுப்பாடு தொடர்பாக வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், சுகாதாரப் பணிப்பாளர்கள், சுகாதார அமைச்சின் பிரதிநிதிகள், வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களினதும் மாவட்ட செயலர்கள், வடமாகாண அனைத்துப் பிரதேச செயலர்கள், சுகாதாரத்துறை உயர் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக கொரோனா வைரஸ் நோய் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் கூடிய கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் விதமாக எதிர்வரும் இரு வாரங்களுக்கு பொது மக்களின் தேவையற்ற நடமாட்டங்களை யாழ் நகர்ப்பகுதியில் மட்டுப்படுத்தும் விதமாக மக்களின் அத்தியவசிய தேவைகளை நிறைவு செய்யும் பலசரக்கு வியாபார நிலையங்கள், உணவகங்கள், மருந்தகங்கள் தவிர்ந்த ஏனைய அத்தியாவசியமற்ற வியாபார நிலையங்களை மூட உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுதவுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ் வைரஸ் நோயை கட்டுப்படுத்தும் நோக்கிலே பாடசாலைகள், தனியார் வகுப்புக்கள் உள்ளிட்டவற்றிற்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அதிகளவில் மக்கள் ஒன்று கூடுவதை தவிர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இந் நிலையில் குறித்த நோய்த்தாக்கத்தின் பின்னரும் யாழ்ப்பாண நகர் பகுதியில் அதிகளவான மக்கள் கூடுவதை நாம் கடந்த ஓரிரு நாள்களாக அவதானிக்க முடிகின்றது. அத்துடன் வெளிநாட்டவர்களின் நடமாட்டங்களையும் அதிகளவில் காணக்கூடியதாகவுள்ளது. திறந்த வெளியில் உணவு பரிமாற்றங்களை மேற்கொள்ளும் கடைகள், உணவகங்கள், குளிர்பானசாலைகள், மதுபானசாலைகள், சிகை மற்றும் ஒப்பனை நிலையங்கள் என்பவற்றை அடுத்த இரு வாரங்களுக்கு மூடுவதற்கான அறிவுறுத்தல்களை உரிய தரப்பினர்களுக்கு வழங்கியுதவுமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.என்றுள்ளது.

(ஐ)

கொரோனா தகவல்களைப் பெற

# 24 மணி நேர கோல் சென்ரர்

முல்லைத்தீவு,மார்ச் 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா தொற்றுத் தொடர்பில் மக்களிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், தகவல்களை வழங்குவதற்கும் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் 24 மணிநேரம் இயங்கு கோல் சென்ரர் நேற்றுத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சுகந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை மேற்கொள்ளும் நோக்கில், மாவட்டத்தில் அனைத்து திணைக்களத்துடன் இணைந்து பணி செய்ய வேண்டும் என்பதற்காக 24 மணிநேர தொலைபேசி இணைப்பு பிராந்திய சுகாதார பணிமனையினரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது மக்கள் மத்தியில் களவேலையில் பிராந்திய சுகாதார பணிமனையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களே ஈடுபட்டுள்ளனர். ஆளணி தேவை மேலும் ஏற்படும் போது உளவள உத்தியோகத்தர்களையும் ஈடுபடுத்தவுள்ளோம். மாவட்டச் செயலகத்தின் ஊடாக களவேலை செய்யும் உத்தியோகத்தர்களும் தகவலை திரட்டிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே அனைத்து பிரிவினருடனும் இணைந்து வேலை செய்ய வேண்டிய தேவை உள்ளதால், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் 24 மணிநேரமும் கோல் சென்ரர் இயங்கும். அதன் தொலைபேசி இலக்கம் 0212290102.

இந்த இலக்கத்துக்கு கொரோனா தொடர்பான தகவல்களை எந்த நேரத்திலும் வழங்க முடியும். சுகாதார பணிமனை ஊடாக பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய தகவல்களும், ஏனைய திணைக்களங்களுக்கும் தெரிவிக்க வேண்டிய தகவல்களும் இந்த தொலைபேசி ஊடாகத் தெரிவிக்கப்படும். என்றார். (க-19)



கொரோனா விழிப்பு;

# நோட்டீஸ்வழங்கியது வாழ்வுரிமைஇயக்கம்

மன்னார், மார்ச் 20

கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்கள் மத்தியில் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தும் வகையில் மன்னாரில் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கம் துண்டுப்பிரசுரங்களை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 5 மணியளவில் மன்னார் பஸார் பகுதியில் மக்களுக்கு துண்டுப்பிரசுரங்களை அந்த அமைப்பு வழங்கியது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் தலைமையில், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் உற்பட இளைஞர்கள் இணைந்து குறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரத்தை மக்களுக்கு வழங்கினர். விழிப்புணர்வு பதாகைகளையும் அவர்கள் காட்சிப்படுத்தினர். (ப-56)

# ஆலயத்துக்கு செல்லாது வீட்டில் வழிபடுங்கள்

## இந்துசமயப் பேரவைத் தலைவர் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம்,மார்ச் 20**

**கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கு மருத்துவர்கள் பல்வேறுபட்ட வழிமுறைகளை வெளியிட்டு வருகின்றனர். இதனை அனைத்து மக்களுக்கும் பின்பற்ற வேண்டும். இந்துக்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதை விடுத்து, முடிந்தவரை வீடுகளில் வழிபாடுகளை மேற்கொள்ளலாம் என்று இந்து சமயப் பேரவைத் தலைவர் ஈ.சக்திகிரீவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

பலவித தொற்றுக்களால் ஏற்படும் அழிவுகளும் நம் கண்முன்காணக் கூடியதாகவிருக்கிறது. இவ்வழிவுகளுக்கு காரணம் யாதென்று சிந்திப்போர் மிகச்சிலரே. நாம் துன்பத்தில் அமிழாதிருப்பதற்கு வேதசிவாகமங்கள் நாம் எதைச்செய்யவேண்டும். எதைச் செய்யக்கூடாதென்று விதித்திருக்கின்றன. அவற்றை நாம் பின்பற்ற வேண்டும்.

கொரோனா வைரஸ் நம்மைத் தாக்க போகிறதென்பதற்காக பல கட்டுப்பாடுகளைப் பேண வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அரசு கூறுவது போல் ஆலயங்களுக்குச் செல்வதை நிறுத்தி வீட்டு வழிபாடுகளைத் தொடர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# விலை கூட்டி விற்றால் சட்டநடவடிக்கைதான்

## பதுக்கினாலும் தப்பமாட்டீர் என்று பாவனையாளர் சபை எச்சரிக்கை

மன்னார், மார்ச் 20

பொருள்களைப் பதுக்கி வைத்தல், விற்க மறுத்தல், கட்டுப்பாட்டு விலையைவிட அதிகரித்த விலையில் விற்றல் போன்ற சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்தது.

நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில், ஜனாதிபதி அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகளைக் குறைத்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் சில வர்த்தகர்கள் பொருள்களை இன்னும் விலைக் குறைப்புச் செய்யாது முன்னைய (அதிகரித்த) விலையிலேயே விற்பனை செய்கின்றனர் என்றும், அதேநேரம் பொருள்களை அதிக விலையில் விற்பனை செய்கின்றனர் என்றும் மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் பாதிக்கப்பட்ட மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையிலேயே, மேற்கண்ட எச்சரிக்கையை அதிகார சபை விடுத்துள்ளது.

அதுமட்டுமன்றி, இவ்வாறான சம்பவங்களால் மக்கள் பாதிக்கப்படும் பட்சத்தில் மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு 023225 1977 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தெரியப்படுத்துமாறும் சபை அறிவுறுத்தியுள்ளது. (க-56)

# 7 கட்சிகள், 6 சுயேச்சைகள் மட்டக்களப்பில் வேட்புமனு

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில், நேற்றுமுன்தினம் 6 சுயேச்சைக் குழுக்களும் 7 அரசியல் கட்சிகளும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன என்று மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆர். சசீலன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் கட்சிச்செயலாளர்கிருஷ்ணபிள்ளை துரைராஜசிங்கம் தலைமையிலான குழு வேட்புமனுத் தாக்கல் செய்தது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் சதாசிவம் வியாழேந்திரன் குழு வேட்புமனுத் தாக்கல் செய்தது.

ஈழவர் ஜனநாயக முன்னணி சார்பில் இராஜநாதன் பிரபாகரன் தலைமையிலான குழு வேட்புமனுத் தாக்கல் செய்தது. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையிலான குழு வேட்பு மனுத் தாக்கல் செய்தது.

தவிர, இரம்ழான் முகம்மது இம்ரான் தலைமையிலான சுயேச்சைக் குழு, முகம்மது இப்றாகிம் முகம்மது நியாஸ் தலைமையிலான சுயேச்சைக் குழு என்பனவும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன. (த-150)

# வத்தளை, யா எல பகுதிகளில் ஊரடங்கு

கொழும்பு, மார்ச் 20

வத்தளை மற்றும் ஜாஎல பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன்படி குறித்த பகுதிகளில் நேற்று இரவு 10 மணி தொடக்கம் மறுஅறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# ஏல விற்பனை பிற்போடல்

யாழ்ப்பாணம், மார்ச் 20

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக சாவகச்சேரி மற்றும் முல்லைத்தீவு நீதிமன்றங்களில் நடைபெறவிருந்த ஏல விற்பனைகள் பிற்போடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த பகிரங்க ஏல விற்பனைகள் பிற்போடப்பட்டுள்ளன.

ஏலவிற்பனைகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# மட்டக்களப்பில் நேற்று மு.காங். வேட்புமனு

மட்டக்களப்பு, மார்ச் 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுகின்றது. நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்தது. (த-46)



# 'கிளினிக்' செல்பவர்களுக்கு வீடு தேடி வரும் மருந்துகள்

முல்லைத்தீவு,மார்ச் 20
கொரோனாத் தொற்று என்னும் ஒரு பதற்றமான சூழ்நிலை காணப்படுவதால், கிளினிக் மருத்துவ சேவைக்கென வைத்தியசாலைக்குச்செல்பவர்களைக் குறைக்க, நோயாளர்களுடைய மருந்துகளை வைத்தியசாலைப் பணியாளர்களின் ஊடாக, நோயாளர்களின் வீடுகளுக்குச் சென்று வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர்.எஸ். சுகந்தன்தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கொரோனாத் தொற்றைத் தடுப்பது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கிளினிக் நோயாளர்கள் தொடர்பில் துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளர் கேள்வி எழுப்பினார்.
அதற்குப் பதிலளித்த பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போதைய சூழ்நிலையில் ஒரு சிலர் கிளினிக் மருத்துவ சேவைகளைப் பெறுவதற்காக வருகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் வயது முதிர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். கொரோனா அச்சம் காரணமாக அந்தந்த பிரதேச வைத்தியசாலையில் பணிபுரிகின்றவர்களினூடாக, நோயாளர்களுடைய வீடுகளுக்கு மருந்துகளை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்திருக்கின்றோம்.
நோயாளர்களுடைய வீடுகள் மிகவும் தூரமாக இருப்பின் அல்லது அவர்களுடைய முகவரி யைக் கண்டுபிடிக்க முடியாத சூழல் காணப்பட்டால், நோயாளர்களுடைய உறவினர்கள், கிளினிக் மருத்துவ சேவைகளைப் பெறுகின்றநோயாளர்களின்பதிவேட்டை வைத்தியசாலையில் வழங்கி, நோயாளர்களுக்குரிய மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இதுவே எமது திட்டமாக இருக்கின்றது-என்றார்.(சு-246)

# விமர்சிக்கமாட்டேன்!

## பதவி விலகல் கடிதத்தை கையளித்து ஹர்ஷ டி சில்வா உருக்கம்

கொழும்பு, மார்ச் 20
**தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நான் ஒருபோதும் விமர்சித்தது இல்லை இனியும் தாக்கிப் பேசும் எண்ணம் இல்லை என்று கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய தேசியக்கட்சியின் பொருளாளர்பதவியை வகிக்கும்ஹர்ஷ டி சில்வா, சஜித் பிரேமதாசவுடன் இணைந்து தொலைபேசிச்சின்னத்தில் தேர்தலில் போட்டியிடவுள்ளார். வேட்புமனுவில் கையொப்பமிடுவதற்கு முன்னர் நேற்றுக் காலை ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். பொருளாளர்பதவியைதுறப்பதற்கான கடிதத்தையும் அவர் கையளித்துள்ளார்.
இது தொடர்பில் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளதாவது:
பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின்கீழ் போட்டியிடத் தீர்மா னித்துள்ளேன். எனது இந்த முடிவை தலைவரைச் சந்தித்துத் தெரியப்படுத்தினேன். பதவி வில கல் கடிதத்தையும் கையளித்தேன்.
அதற்கு தலைவர் உடன்படவில்லை. ஹர்ஷ எங்கும் போக வேண்டாம்,எமது அணியிலேயே போட்டியிடுங்கள் என அவர் கூறினார். வேறு வழியில்லை சஜித் அணியில் போட்டியிடும் முடிவை அறிவித்தேன்.
தலைவரை நான் ஒருபோதும் விமர்சித்தது கிடையாது. இனியும் அந்தச் செயலில் ஈடுபடமாட்டேன். அவர் மீதான மதிப்பு அப்படியே இருக்கும். எமக்கிடையில் தனிப்பட்ட ரீதியில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை- என்றார். (எ-44)

# பௌஸியும் களத்தில்!

## முஜிபுரும் இணங்கினார்; இறுதி நேரத்தில் அதிரடி

கொழும்பு, மார்ச்.20
மூத்த அரசியல்வாதி ஏ. எச். எம். பௌஸி நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் தொலைபேசி சின்னத்தில் போட்டி யிடுகின்றார்.
நேற்று வியாழக்கிழமை அதிகாலை அவர் வேட்புமனுவில் கையொப்பம் இட்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் உடனிருந்தார்.
அப்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானும் அங்கு வந்து, பௌஸி களமிறங்குவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.
அதேவேளை, பௌஸிக்கு தேசியப் பட்டியல் வழங்கப்படவுள்ளது என ஏற்கனவே தகவல் வெளியாகியிருந்தது. (எ-22)

# பொதுக் கூட்டம் பிற்போடல்

கொடிகாமம்,மார்ச் 20
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பிற் போடப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் பொ.நடேசலிங்கம் அறிவித்துள்ளார்.
பொதுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.
இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக் காரணமாக கூட்டம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அதிபர் தெரிவித்தார். (ஐ-159)



# அன்னை பூபதி நினைவு தினம்

மட்டக்களப்பு,மார்ச் 20
அன்னை பூபதியின் 32 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பில் கடைப்பிடிக்கப்பட்டது.
ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு வெல்லாவெளியில் அமைந்துள்ள காரியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில், ஜனநாயகக் கட்சியின் உப தலைவர் நா.நகுலேஸ், கொள்கை பரப்புச் செயலாளர் க.சாந்தன் மற்றும் மகளிர் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.
அன்னை பூபதியின் உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஈகச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-46)

# இலங்கையர்களின் வீசாக்களை நீடிக்கவும்

## வெளிநாட்டு அரசுகளிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 20
பயணங்கள் மேற்கொள்ளும் இலங்கையர்களின் வருகை தரு வீசாக்களை நீடிக்குமாறு வெளிநாட்டு அரசுகளிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.
தற்போது தமது நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் மற்றும் 'கொவிட் 19' மீதான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள பயணத் தடை காரணமாக இலங்கைக்கு நாடு திரும்புவதில் இலங்கையர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இலங்கையர்களுக்கு வீசாக்களை நீடிப்பதற்காக வசதிகளை மேற்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க வெளிநாட்டு அரசுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
தற்போது நாட்டிலுள்ள வெளிநாட்டவர்களின் அனைத்து வகையான வீசாக்களையும் அவர்களின் தற்போதைய வீசாக்கள் காலாவதியாகும் திகதியிலிருந்து ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கு இலங்கை அரசு கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (த)

மாவட்டச் செயலகம் முன்பாக

# நகர சபையினரும் பொலிஸாரும் கருத்து முரண்பாடு

வவுனியா, மார்ச் 20
வவுனியா மாவட்டச் செயலகம் முன்பாக பொலிஸாருக்கும் நகர சபைத் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும் இடையே நேற்றுத் தர்க்கம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.



மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள பண்டார வன்னியன் சிலைக்குப்பின் அமைக்கும் பணி வவுனியா நகரசபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இதுபற்றி ஆராய நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன், உப தவிசாளர் சு.குமாரசாமி, நகர சபை உறுப்பினர் ச.மோகன் ஆகியோர் முற்பகல் 10 மணியளவில் அங்கு சென்றனர்.
தேர்தல் பணிகளுக்காக மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அலுவலர்கள் நகர சபைத் தவிசாளரிடம் இந்த இடத்தில் ஏன் நிற்கின்றீர்கள் என்று கேட்டு முரண்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் இருதரப்பினருக்கும் இடையே சிறிதுநேரம் முரண்பாடு நிலவியது.
தான் நகரசபைத் தவிசாளர் என்று தெரிவித்தும் முறையற்ற விதத்தில் பொலிஸார் நடந்து கொண்டனர் என்று தவிசாளர் குற்றஞ்சாட்டினார். (த-110)

# அசாத் சாலியும் சஜித் அணியில்!

கொழும்பு, மார்ச் 20
சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன், அசாத் சாலி தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி சங்கமித்துள்ளது.
கொழும்பு மாவட்ட பரப்புரைச் செயலாளர்களுள் ஒருவராக அசாத் சாலி நியமிக்கப்பட்டுள்ளதுடன், தேசியப் பட்டியல் உறுதிமொழியும் வழங்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.
கொழும்பு அல்லது கண்டி மாவட்டத்தில் போட்டியிட வாய்ப்பளிக்குமாறு அசாத் சாலி கோரிக்கை விடுத்த போதிலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.
அதையடுத்தே அவருக்கு தேசியப்பட்டியல் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், கொழும்பு மாவட்டத்தின் பரப்புரைச் செயலாளர் நியமனமும் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. (எ-44)



# கொரோனா தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கை

## வேட்புமனுத் தாக்கலின் பின்னர் யாழில் சஜித் அணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தெரிவித்தது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு அந்தக் கட்சி நேற்றுக் காலை வேட்பு மனுத் தாக்கல் செய்தது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த கணேஸ்வேலாயுதம்,-

இப்போது அரசியல் பேசுவது சரியானதல்ல. நாடு முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அரசியல் பேசமுடியாது. மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம், - என்றார். (ஒ-5)

# இயல்பு வாழ்க்கைக்கு விரைவில் திரும்பவேண்டும்

## ஐங்கரநேசன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20

நாடு முழுவதும் மக்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து மக்கள் மீளவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை சுயேச்சையாக அவர் தாக்கல் செய்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சூழல் பாதுகாப்பை முதன்மைப்படுத்தி தமிழ்த் தேசிய அரசியலில் எமது கட்சி போட்டியிடுகின்றது. நாடாளுமன்றத் தேர்தலில் முதல் தடவையாகப் போட்டியிடுகின்றோம். நல்லூர் பிரதேச சபைக்கான தேர்தலில் பரீட்சார்த்தமாகப் போட்டியிட்டு இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளோம். நாடாளுமன்றத் தேர்தலிலும் வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

துரதிஷ்டவசமாக கொரோனாவால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவேண்டும். தேர்தல் சுமுகமாக நடத்தப்பட வேண்டும், - என்றார். (ஒ.5)



கொரோனா அச்சம்;

# வெளிமாவட்டத்துக்கு செல்லும் பேருந்துகளை நிறுத்த திட்டம்

யாழ்ப்பாணம் , மார்ச் 20.

**கொரோனா தொடர்பான அச்ச நிலை நீடித்தால், வெளிமாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளை முழுமையாக நிறுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது என்று பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கண்ணன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பிற மாவட்டங்களுக்கான சேவையில் முன்னர் நாள் ஒன்றுக்கு சராசரியாக 80 சேவைகள் இடம்பெற்றன. அது தற்போது 40ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு குறைக்கப்பட்ட சேவையை மேலும் கட்டுப்படுத்துவது அல்லது முழுமையாக நிறுத்துவது தொடர்பில் ஆராய்கின்றோம். அதன் பிரகாரம் நாளை முதல் கண்டிப்பாக 20 சேவைகளை மிஞ்சாத வகையிலேயே எமது சேவைகள் இடம்பெறவுள்ளன. அதேநேரம் இந்த 20 சேவைக்கான பேருந்துகளின் சாரதிகள், நடத்துநர்கள் சேவையில் ஈடுபட வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள். அதனால் அச்சேவையினையும் திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக முழுமையாக நிறுத்தவே எண்ணுகின்றோம். எனவே நாட்டின் நிலைமை சீரடையாது விடின் எதிர் வரும் திங் கட்கிழமையுடன் எமது சேவைகள் முழுமையாக நிறுத்தப்படும் - என்றார். (ப-105)




எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி கட்சி வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை வேட்பு மனுவைத் தாக்கல் செய்தது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வன்னிக்கான முதன்மை வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தலைமையில் வவுனியா மாவட்டசெயலகத்துக்கு வருகை தந்த வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

உணைஷ் பாருக், ம.தயாநந்தன், த.பகீரதன், ம.குரூஷ், க.றொகான், க.செய்யுதீன், பு.கருணதாஷ், ரூபசிங்க ரசிக்கா, பிரியதர்சினி ஆகியோர் வேட்பாளர்களாகக் களமிறக்கப்பட்டுள்ளனர். (ப-110)

# குடும்ப நிகழ்வுகளை பிற்போடுங்கள்

## சுகாதாரப் பணிமனை கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 20

குடும்ப நிகழ்வுகளை முடிந்தவரை பிற்போடுங்கள் என்று சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மக்களைக் கேட்டுள்ளது.

நாட்டில் கொரோனா தாக்கம் ஏற்பட்டுள்ளதை அடுத்து, வைரஸ் பரம்பலைத் தடுக்கும் நோக்கில் சுகாதாரப் பிரிவினர் வழங்கும் அறிவுறுத்தலை மக்கள் பின்பற்ற வேண்டும். நிகழ்வுகளை முடிந்தளவு தள்ளி வையுங்கள். நிகழ்வுகளைப் பிற்போட முடியாத சந்தர்ப்பங்களில் குடும்பத்தினர் மாத்திரம் 20பேரைக் கொண்டதாக நிகழ்வுகளை நடத்துங்கள் என்றும் மக்களிடம் கோரப்பட்டுள்ளது. (க-7)

# பிற்பகல் 2.30 மணியுடன் சில கடைகளுக்குப் பூட்டு

## யாழ்.வணிகர் சங்கம் அறிவிப்பு

கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்டிருக்கும் அவசர நிலையைக் கருத்தில் கொண்டு, அத்தியாவசியத் தேவையான உணவகங்கள், மருந்தகங்கள், பலசரக்கு வியாபார நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களை பிற்பகல் 2 மணியுடன் பூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று யாழ் வணிகர் சங்கம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் காரணமாக நேற்று வியாழக்கிழமை நடந்த அவசர நிர்வாக சபைக் கூட்டத்தில், எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக சங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

*வர்த்தக நிலையங்களுக்கு வரும் பொதுமக்கள் தங்களின் அவசர தேவைக்காக மட்டும் ஓரிருவர் வந்து பொருள்களைக் கொள்வனவு செய்தல் சிறந்தது.

*பொருள்கள் கொள்வனவுக்கு வரும் பொதுமக்களை வர்த்தக நிலையங்களில் அதிக நேரம் தாமதப்படுத்துவதைத் தவிர்ப்பதோடு, பொதுமக்களை அதிகளவில் வர்த்தக நிலையங்களில் கூடுவதையும், தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*உணவகங்களில் உணவுகளை திறந்த வெளியில் பரிமாறுவதைத் தவிர்ப்பதோடு, தேநீர், நீர் மற்றும் பதார்த்தங்களை வாடிக்கையாளர்களுக்கு பரிமாறும் போது வன்டே கப் ஐ பயன்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

*வர்த்தக நிலையக் கதவின் கைபிடிகள் உட்பட வர்த்தக நிலையங்களை கிருமியகற்றும் பதார்த்தங்களைப் பயன்படுத்தி அடிக்கடி சுத்தப்படுத்தி அதிஉச்ச சுகாதாரத்தைப் பேணுவதுடன், தண்ணீரில் சவர்க்காரமிட்டு கைகளை அடிக்கடி கழுவுதல், இருமல் அல்லது தும்மல் ஏற்படும் போது உங்கள் வாய் மற்றும் மூக்கை கைக்குட்டையால் மூடுதல், உடல்நிலை சரியில்லாத நபர்களுடன் பழகுவதை தவிர்த்தல், மக்கள் கூடுதலாக ஒன்றுகூடும் இடங்களைத் தவிர்த்தல், கைகள் சுத்தமாக இல்லாவிட்டால் கண்கள், மூக்கு, வாய், அல்லது முகத்தைத் தொடாதிருத்தல், ஒவ்வொரு நபரிடமிருந்தும் முடிந்தவரை ஒரு மீற்றர் தொலைவில் இருந்து உரையாடுதல், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க விற்றமின் சி, நோய் எதிர்ப்பு மருந்துகள் மற்றும் உணவுமுறைகளைப் பின்பற்றுதல் போன்ற ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு தங்களை கேட்டுக்கொள்கின்றோம். என்றுள்ளது. (க)

# இந்தியா முழுதும் நாளைமறுதினம் ஊரடங்கு!!!

புதுடெல்லி, மார்ச் 20

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுக்கும் வகையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் 'ஜனதா ஊரடங்கு' பிறப்பிக்கப்படுகிறது. மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று பிரதமர் மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் மோடி மேலும் தெரிவித்ததாவது:

"உலகம் முழுவதும் கோவிட்19 நோய் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்டுள்ள மிகப்பெரிய மக்கள்தொகையைக் கொண்டுள்ள எமக்கு கொரோனா வைரஸ் மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. இது சாதாரண சூழல் இல்லை. கொரோனா வைரஸ் பரவுவது குறித்துத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்.

இப்போது வரை கொரோனா வைரஸைத் தடுக்க அறிவியலில் எந்தத் தடுப்பு மருந்தும் முறையாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுபோன்ற சூழலில் இயற்கை கவலைக்குள்ளாகியுள்ளது. உலகப் பெருந்தொற்று நோயான கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடத் தீர்மானமும், எதிர்த்துப் போராடும் தீரமும் இருப்பது அவசியம். மாநில அரசுகளும், மத்திய அரசும் அறிவுறுத்தும் வழிகளை மக்கள் செவி கொடுத்துக் கேட்டு அதன்படி வழிநடப்பது அவசியமானதாகும்.

22ஆம் திகதி காலை 7 மணியிலிருந்து இரவு 9 மணி வரை நாடு முழுவதும் மக்கள் ஊரடங்கு கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஊரடங்கு உத்தரவுக்கு மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அத்தியாவசியத் தேவைகளைத் தவிர மற்ற எதற்கும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் - என்றார். (ம)

## நாகர்...

நின்ற வயதானவர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தைப்பொங்கல் தினத்தன்று இராணுவத்தினருக்கும் இளைஞர்கள் சிலருக்கும் இடையில் நடந்ததாகக் கூறப்படும் தர்க்கத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான ஐங்கரன் என்ற இளைஞனை இராணுவத்தினர் தேடிவந்தனர். இந்த நிலையில் குறித்த இளைஞனை, நாகர் கோவில் கிழக்கு கடற்கரையில் நேற்று முன்தினம் காலை இராணுவப் புலனாய்வாளர்கள் கைது செய்ய முயற்சித்துள்ளனர். எனினும், அவர் கடலில் குதித்து நீந்தி தப்பிச் சென்ற நிலையில், கரையோரத்தில் கரைவலைப்பாடுகளில் நின்றவர்கள்மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர் என்று தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் கைதுசெய்ய முயற்சித்தனர் என்று கூறப்படும் ஐங்கரன் என்பவரின் மனைவி ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது' எனது கணவனை தேடவில்லை என நீதிமன்றில் கூறப்பட்டிருக்கின்றது. ஆனாலும் நேற்றுக் காலை தொழிலுக்காக கடற்கரையில் நின்ற கணவனை இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பலர் சுற்றிவளைத்து கைது செய்ய முயற்சித்தனர். இதையடுத்து அவர் கடலில் குதித்து எங்கோ சென்றுவிட்டார். இதையடுத்து, கரைவலைப்பாட்டுக்கு நாங்கள் சென்றபோது அங்கே எங்களுடைய அலைபேசிகள் அனைத்தும் பறிக்கப்பட்டதுடன், முதியவர்கள், சிறுவர்கள், பெண்கள் என பாக்காமல், சகலரது மீதும் இராணுவம் தாக்குதல் நடத்தியது - என்றார். (ம)

## சிறிதரனுக்கு...

னர் சி.சிறிதரனுக்கு கொரோனா தொற்று இல்லை என்று யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை தெரிவித்தது.

சிறிதரன் ஐ.நாவில் நடைபெற்ற இலங்கை தொடர்பான மனித உரிமைகள் கூட்டத்தொடரில் பங்குபற்றி கடந்த 2ஆம் திகதி நாடு திரும்பியிருந்தார். இந்தநிலையில், அவர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு நேற்றுச் சோதனைக்காகச் சென்றுள்ளார்.

"தனக்குக் 'கொரோனா' அறிகுறி உள்ளதா என்பது பற்றி பரிசோதனைசெய்ய அவர் (சிறிதரன்) வந்திருந்தார். அவருக்கு ஆரம்பப் பரிசோதனை நடத்தப்பட்டது. எனினும், அவருக்குக் கொரோனா தொற்று இல்லை என்பது தெரியவந்தது. அதனையடுத்து அவர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்" என்று யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

"எனக்குத் தொண்டைக் கரகரப்பு ஏற்பட்டிருந்தது. மக்கள் சந்திப்புக்களை அடிக்கடி நடத்துவதால் அது ஏற்படும். எனினும், ஆலோசனை கேட்க கிளிநொச்சி மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். ஜெனிவாவுக்குச் சென்றுவந்திருந்தேன் என்பதால், உடல்நிலை பற்றித் தெளிவுபெற யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். பரிசோதனையின் பின்னர் கொரோனா தொற்று இல்லை என்று மருத்துவர்கள் கூறினர். அதனால் வீடு திரும்பிவிட்டேன், நலமாக இருக்கின்றேன்." என்று சிறிதரன் தெரிவித்தார்.

"ஒவ்வொரு மனிதர்களுக்கும் சமூக பொறுப்புண்டு. அரசியல் பிரமுகர் எனும் வகையில், நாங்கள் அந்த சமூக பொறுப்பை சரியான பாதையில் செய்ய வேண்டும். அதற்கான முயற்சியையே நான் முன்னெடுத்திருந்தேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-37)

## கொரோனா...

சீனாவின் வுகான் மாகாணத்தில் தோற்றம்பெற்ற கொரோனா, சீனாவில் தற்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டாலும் சீனாவுக்கு வெளியில் மிகத் தீவிரமாகப் பரவத் தொடங்கியுள்ளது.

இத்தாலி, தென்கொரியா, அமெரிக்கா, ஈரான், ஸ்பெயின், கனடா ஆகிய நாடுகளில் கொரோனாவின் தாக்கம் மிகைப்பட்டுள்ளது. இதையடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை கிடுகிடுவென அதிகரித்து வருகின்றது. உலக அளவில் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தொட்டுள்ளது. (ம)

## கொரோனாவுக்கு...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் சிறப்பு வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கொரோனாவை ஒழிப்பு மத்திய நிலையத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் இரவு வரை 50 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் நேற்று மேலும் 10 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 60ஆக அதிகரித்துள்ளது. பாதிக்கப்பட்ட அனைவரும் கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-22)

## அரச...

யாற்றவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்களுக்கான சம்பளத்தை மார்ச் 23ஆம் திகதி வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

விற்பனைக்கு

கிணறு மூடுவதற்கான G.I பைப்பினால் தயாரிக்கப்பட்ட மூடி விற்பனைக்குண்டு.

075 597 2565

வேலையாள் தேவை

மொத்த சில்லறை வியாபாரம் நடைபெறும் மருதனார்மடம், நெல்லியடி கடை ஒன்றுக்கு சிட்டை எழுதுபவர், விற்பனை உதவியாளர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

077 983 5705

வாடகைக்கு

இராசவீதியில் (கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகில்) சகல வசதிகளுடன் கூடிய இரண்டு கடைத்தொகுதிகள் வாடகைக்குண்டு. (கம்பனிகளுக்கு / நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு : 077 774 3240
076 164 0401

தேவை

நன்கு வெட்டித் தைக்கத் தெரிந்த பெண் தையலாளி தேவை. கோண்டாவில்.

தொடர்புகளுக்கு : 076 164 0401

Sai Auto Service
சாய் ஆட்டோ சேவை
24 மணிநேர சேவை
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
நீங்கள் விரும்பிய இடங்களுக்கு
குறைந்த கட்டணத்தில் செல்ல முடியும்
தொடர்புகளுக்கு: 0768377205
CS 32014 (10)

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச்சங்கம்
பங்குதாரர்களுக்கான
முக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தின் 75ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 2020 மார்ச் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. நாட்டில் நிலவியுள்ள அசாதாரண சில காரணங்களினால் மேற்படி கூட்டம் காலவரையன்றி பிற்போடப்பட்டுள்ளது. மீண்டும் பொதுக்கூட்டத்துக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும். பங்குதாரர்களுக்கு இதனால் ஏற்படும் சிரமங்களுக்கு வருந்துகின்றோம்.

பணிப்பாளர் சபை,
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச்சங்கம்,
530, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:- 021 222 9979

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் விஸ்வலிங்கம் கதிரவேலு
(சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்)

தோற்றம்
09 . 04 . 1951

மறைவு
02 . 04 . 2019



திதி:- அபரபக்க துவாதசி

அன்பின் இலக்கணமாய் ஆண்டவனின் திருவுருவாய் இல்லத்தின் ஒளிவிளக்காய் ஈகையில் வள்ளலாய் உள்ளத்தில் உத்தமராய் ஊக்கத்தில் சிற்றெறும்பாய் எண்ணத்தில் உயர்ந்தவராய் ஏற்போருக்கு அமுதசுரபியாய் வாழ்ந்த எங்கள் குடும்பத்துக் குல விளக்கு மறைந்து ஆண்டு ஒன்று ஆனதுவோ? எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஆறுமா உங்கள் நினைவு.

நுணாவில் மேற்கு,
மட்டுவில் சந்தி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# வெளிநாடுகளிலிருந்துவந்தோரால் உள்ளூர்மக்களுக்கு பெரும் அச்சம்

சாவகச்சேரி, மார்ச் 20

புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளபலர்சுதந்திரமாகபொதுஇடங்களில் நடமாடித் திரிவதால், உள்ளூர் மக்கள் அச்சமடைந்துள்ளனர். புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் 14 நாள்கள் சுகாதார திணைக்களத்தினரின் கண்காணிப்பில் இருக்க வேண்டுமெனவலியுறுத்தப்பட்டுள்ளது. எனினும்சிலர்மக்கள்கூடும் சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் நடமாடித் திரிவதை அவதானிக்க முடிந்துள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியிடம் தொடர்பு கொண்டுகேட்ட போது,

கடந்த பெப்ரவரி மாதம் தமது சொந்த இடங்களுக்கு வந்துள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட கண்காணிப்பு காலம் முடிவடைந்த பின்னர் அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் சான்றிதழுடனேயே மக்கள் நடமாடும் இடங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மக்களுக்குச் சந்தேகம் ஏற்படின், அவர்களிடம் மருத்துவச்சான்றிதழ் உள்ளதா என பரிசோதித்து அவ்வாறு இல்லாத பட்சத்தில் சுகாதாரப் பகுதியினருக்கு அறிவிக்குமாறு தெரிவித்தார். புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்தவர்கள் தாமாக முன்வந்து பதிவுகளை மேற்கொண்டு கொரோனா வைரஸ் தொடர்பான ஒத்துழைப்பை வழங்குவதால், சான்றிதழ் உள்ளவர்கள் வெளியில் நடமாட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகை தந்துகண்காணிப்புகாலம்முடிவடையாதவர்கள் வெளியில் நடமாடினால் மக்கள்அறிவிக்கலாம். கொரோனாதாக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்றும் நோக்கில் அரசாங்கம் விடுமுறைகள் அறிவித்து, போக்குவரத்துச் சேவைகளையும் மட்டுப்படுத்தியுள்ளது.

யாழ். மாவட்ட மக்கள் விழிப்புணர்வு இன்றி நடமாடுவது ஒன்று கூடுவது ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

குறிப்பாகமதுபானவிற்பனைநிலையங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் விற்பனை நிலையம், குளிர்பான நிலையங்களில் நிறைந்து காணப்படுகின்றனர். பொருள்கள்வாங்கச்செல்வோர்நெருக்கடிகளைத் தவிர்த்து குறைந்தது 6 அடி தூர இடைவெளியில் நின்று பொருள்களைக் கொள்வனவு செய்யவும் - என்றார். (சு-9)

# எழுத்தாளனாக மட்டும் வாழ்ந்துவிட முடியாது!

## நூலாசிரியர் கருத்து



வடமராட்சி, மார்ச் 20

எழுத்துத் துறையில் உள்ளவர்கள், இங்கு எழுத்தாளனாக மட்டும் வாழமுடியாது. ஆனால் இளைய தலைமுறையினர் எழுதவும் வாசிக்கவும் முன் வர வேண்டும். எம் காலத்தையும் மனிதர்களையும் ஆவணப்படுத்தவேண்டும்.

இவ்வாறு எழுத்தாளர் த. அஜந்தகுமார் தெரிவித்தார்.

அவர் எழுதிய 'இனிப்புக் கதைகள்', 'மழலை ஓவியங்கள்' ஆகிய இரு நூல்கள் கரவெட்டி பிரதேச செயலகத்தில் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் த. அஜந்தகுமார் வழங்கினார். அதன்போது மேலும் தெரிவித்ததாவது:

இனிப்புக்கதைகள் என்ற இந்த நூல் உருவாகியதற்கு முதன்மையான காரணம் ஊடக ஆசிரியர் நண்பன் த. பிரபாகரன். ஓர் எழுத்தாளனுக்கு முக்கியமானது சுதந்திரம். இந்தப் படைப்புக்களை நான்கு மாதங்கள் தொடர்ச்சியாக எழுதினேன். இங்கு எழுத்தாளனாக மட்டும் வாழமுடியாது. ஆனால் இளைய தலைமுறையினர் எழுதவும் வாசிக்கவும் முன் வரவேண்டும். எம் காலத்தையும் மனிதர்களையும் ஆவணப்படுத்தவேண்டும். என்றார்.

மங்கள விளக்கேற்றலை அடுத்த வரவேற்புரையை ஆத்மிகா அஜந்தகுமார் மழலை மொழியில் வழங்கினார்.

பிரதேச செயலாளர் ஈ. தயாரூபன் வாழ்த்துரை வழங்கினார்.

"இன்றைய காலத்தில் வாசிப்பு அருகிவரும் சூழலையும் வாசிப்பு அற்ற கற்ற சமூகத்தினரின் அவலநிலையையும் பல எடுத்துக்காட்டுக்களோடு பேசினார். படைப்பாற்றலை மேம்படுத்துவதற்குத் தமது செயலகம் முன்னெடுக்க இருக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறினார்.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையுரை ஆற்றுகையில், அஜந்தகுமார் பேச்சுமொழியைப் பயன்படுத்தும் முறை அலாதியானது. மழலை ஓவியங்கள் அவரின் குழந்தை மனதையும் ஆழ்ந்த கவியுள்ளத்தையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றன என்று தெரிவித்தார்.

'ஜீவநதி' ஆசிரியர் க. பரணிதரன், கவிஞர் சோ. பத்மநாதன், எழுத்தாளர் உடுவில் அரவிந்தன் ஆகியோர் நயப்புரை வழங்கினர். (த-173)

# ஈ.பி.டி.பியினது மட்டக்களப்பு வேட்புமனு நிராகரிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 20

நாடாளுமன்றத் தேர்தலுக்காக ஈ.பி.டி.பி மட்டக்களப்பு மாவட்டத்தில் தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வேட்புமனுவில் கையொப்பம் இடாத காரணத்தாலேயே அந்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-105)

# ஜனாதிபதியின் கரத்தை பலப்படுத்த கோரிக்கை!

## துமிந்த திஸநாயக்க விடுத்தார்

கொழும்பு, மார்ச் 20

ஜனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தாருங்கள் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்நேவையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொதுத் தேர்தல் சம்பந்தமான மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது வெற்றி இப்போதே உறுதியாகிவிட்டது. 113 உறுப்பினர்களை பெற்றால் எம்மால் ஆட்சியமைக்க முடியும். தற்போது எம்மால் மிக இலகுவாக 125 உறுப்பினர்களைப் பெறமுடியும். என்றாலும் புதிய விடயங்களைச் சேர்த்துக் கொள்ளவும் நாட்டுக்குத் தேவையற்ற விடயங்களை நீக்கவும் ஜனாதிபதியின் கொள்கைத் திட்டங்களை எவ்வித பிரச்சினைகளுமின்றி நடைமுறைப்படுத்தவும் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை. அதற்கு நாம் 150 உறுப்பினர்களை பெற்றுக் கொள்ள வேண்டும் - என்றார். (ம)

# தலைவர் காட்டித்தந்த அரசியல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே!

## சகலரும் அதற்கே வாக்களியுங்கள் என்று புலிகளின் முன்னாள் சிறப்புத் தளபதி வலியுறுத்து

மன்னார், மார்ச் 19

தலைவர் காட்டித் தந்த அரசியல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு. எனவே தமிழ் மக்களாகிய நீங்கள் இந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் என்று விடுதலைப் புலிகளின் முன்னாள் சிறப்புத் தளபதி அச்சுதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

தலைவரால் வளர்க்கப்பட்ட நாங்கள் உட்பட தலைவரின் கட்டமைப்பை விட்டு யாருமே விலக முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒவ்வொரு தமிழனுக்குமான உரித்து.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் எங்களுக்கு வேண்டப்பாதவர்களும் உள்ளனர். எங்களை விற்றுப் பிழைக்கின்ற கூட்டங்களும் இருக்கின்றன.

எனவே தமிழ் மக்களாகிய நீங்கள் இந்த முறை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள். தலைவர் காட்டித்தந்த அரசியல் என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

வாழ்வாதாரம் என்றால் வர்த்தகம், விவசாயம், கடற்றொழில்.

நான்கு மதமும் சேர்ந்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆனால்



இந்த மூன்று விடயங்களுக்குமான கட்டமைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சீரமைத்துத் தரவில்லை என்றால் நாங்கள் அவர்களுக்கு எதிராகப் போராடியே ஆக வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான எமது வீட்டை நாங்கள் உடைத்தோமாக இருந்தால் அந்த வீட்டுக்கு யாருமே உரிமை கோர முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய அனைவரிடமும் கூறினேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுச் செல்வது பிழை. தலைவரின் கட்டமைப்பை அனைவரும் சேர்ந்து வழி நடத்துங்கள்.

தமிழர்கள் அனைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும் - என்றார். (த-56)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

### கந்தசாமி ரவீந்திரகுமார்



ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்கு, காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும் உடுவில், அம்பலவாணர் வீதி, காளிகோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ரவீந்திரகுமார் நேற்று (19.03.2020) வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் அழகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும் லீலாராணியின் அன்புக் கணவரும் பானுயா, வித்தியன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோப்பிரசாத்தின் மாமாவும் விஜயகுமார் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற நந்தகுமார், சாந்தகுமார் (லண்டன்), மோகனதாஸ் (கனடா), இராஜ்குமார் (பிரான்ஸ்), கார்த்தியாயினி (லண்டன்), உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சித்திராதேவி, சாவித்திரி, சுசிலா, கிரிஜா, கிளாரா, கனகராஜன் ராஜமணி, இந்துராணி, விஸ்வநாதன், காலஞ்சென்ற தேவன், தனஞ்சயன் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2020) வெள்ளிக்கிழமை மு.ப.11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோவிலடி, அம்பலவாணர் வீதி, உடுவில், சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர். 021 224 0945

# வன்னியில் இம்முறையும் அதிக ஆசனங்கள் கூட்டமைப்புக்கு

## ஆதரவாளர்கள் நம்பிக்கை

மன்னார், மார்ச், 20

நடைபெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் வன்னி மாவட்டத்தில் இம்முறையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெறும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வன்னி மாவட்டத்துக்குரிய வேட்பு மனுக்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்களால் நேற்று புதன்கிழமை வவுனியா மாவட்டச் செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது. வேட்புமனுத் தாக்கலின் பின்னர் கூட்டமைப்பின் ஆதரவாளர்களால் இந்த கருத்து முன்வைக்கப்பட்டது.

"நிச்சயமாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலை விட இந்த முறை நடைபெற இருக்கும் தேர்தலில் அதிக ஆசனங்களை வன்னியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும் என்று நம்பிக்கை உள்ளது. சில சுய நல அரசியல்வாதிகள்தான் மாறியுள்ளார்களே தவிர மக்களது மனநிலையில் மாற்றமில்லை. மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேலும் மேலும் பலப்படுத்துவார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எம்முடன் தமிழ்த் தேசியம் பேசி நின்ற பலர் இன்று மாற்றுக் கட்சிகளில் வேட்பாளர்களாக நின்று கூட்டமைப்புடன் நிற்கும் எம்மை விமர்சிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அரசியலில் இருந்து விரைவில் காணாமல் போய்விடுவார்கள் அவ்வாறானவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள்.

இன்றைய தினம் (புதன்கிழமை) வன்னி மாவட்டத்தில் வேட்பு மனுதாக்கல் செய்வதற்கு பாரிய எழுச்சியை காட்டும் வண்ணம் திட்டம் தீட்டி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ்தொற்று காரணமாக அவற்றை கைவிட்டு அமைதியான முறையில் வன்னியின் வெற்றி வேட்பாளர்களாக போட்டியிடுவதற்கு வேட்புமனுதாக்கல் செய்யும் எமது வேட்பாளர்களுக்கு ஆதரவைக் கொடுத்துள்ளோம்" என்று ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

(ப-213)




# ஆகம வழிபாடுகளை கைவிட வேண்டாம்

## இந்து இளைஞர் பேரவை கோரிக்கை

வவுனியா,மார்ச் 20

ஆலயங்களில் நடப்பது ஆகம வழிபாடே. அவை தொடர்ந்து நடந்தே ஆக வேண்டும் என்று சர்வதேச இந்து இளைஞர் பேரவை தலைவர் சிவஸ்ரீ. ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அனைவரும் அறிவோம். அதனால் ஒவ்வொருவரும் தங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. அதற்கான முன்னேற்பாடுகளை நாம் செய்ய வேண்டும். அதற்காக ஆலய வழிபாடுகளைத் தடுக்கவோ, அவற்றை நிறுத்தவோ முடியாது.

ஆலயங்கள் ஆகம வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டவை. அதனால் அவை காலாகாலமாக அவ்வாறே நடந்தும் வருகின்றது. நித்திய பூசைகள், நைமித்திய பூசைகள் என்பன தவறாது நடைபெற வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

இதற்கு முன்னரும் கொலறா, மலேரியா போன்ற கொடிய நோய்கள் எம்மைத்தாக்கிய போதும், ஆலய வழிபாடுகளில் எந்த மாற்றங்களும் வரவில்லை.

ஆனால் தற்போது கொரோனா வைரஸின் தாக்கத்தால் பலர் ஒன்று கூடுவதைத் தவிர்க்குமாறு கூறி வருகின்றனர்.

அவ்வாறு ஒன்று கூடுவதால் மக்களுக்கு நோய்த்தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. அவை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவையே. ஆனால் அதற்கான பாதுகாப்பைத் தேடவேண்டியவர்கள் நாங்களே. அதனை விடுத்து ஆலயக்கிரியை முறைகளைத் தடுக்கவோ அல்லது செய்யாது இடைநிறுத்தவோ முடியாது. அவை நியமத்தின் படி நடந்தே ஆக வேண்டும்.

நேரகாலங்களை குறுகிய உள்ளடங்கலுடன் ஆலய விழாக்கள் இடம்பெற வேண்டும். காலாகாலமாக செய்து வந்தவை செய்யப்பட வேண்டும். அநேக ஆலயங்களில் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் விழாக்கள் ஆரம்பிக்கின்றன. எனவே ஆலயம் சார்ந்தோரும், ஏனையவர்களும் அவற்றை அமைதியான முறையில் செய்வதே உசிதமாகும்.

ஆலயங்களில் மகோற்சவம் செய்யாது விடுதல் பாலஸ்தாப காலத்தில் மற்றும் அனர்த்தங்கள் வந்து ஊரோடு அனைவரும் வெளியேறும் காலங்களில் மாத்திரமே. ஏனைய காலங்களில் அதற்கான பிராயச்சித்தங்கள் செய்யப்பட்டு விழாக்கள் தொடரும். ஆகவே பெரும் எடுப்பிலே அல்லாமல் அமைதியான முறையில் மகோற்சவங்களை முன்னெடுக்கவும் - என்றார். (க-110)

# பெரமுனவில் ராகவன்

கொழும்பு, மார்ச் 20

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசியப் பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட உள்ளவர்கள் தொடர்பாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி பட்டியலொன்றை வெளியிட்டுள்ளது. அதில் வடமாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவனுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், துறைசார் நிபுணர்கள், தொழிற்துறையினர், சமூக ஆர்வலர்கள் என்ற அடிப்படையில் 29 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பட்டியலில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி மொஹமட் அலி சப்ரி, சமூக ஆர்வலர் கெவிது குமாரதுங்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் ரோஹன் லக்ஷ்மன் பியதாச, ஓய்வுப்பெற்ற கிரிக்கெட் வீரர் டில்சான் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். (ம)

## 19 கட்சிகள், 25 சுயேச்சைகள் மட்டக்களப்பில் வேட்புமனு

பொதுத் தேர்தலுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 25 சுயேச்சைக் குழுக்களும், 19 அரசியல் கட்சிகளுமாக 44 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமட்டும் 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 19 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

அருண்மொழிவர்மன் வேற்கரதீசன் மாணிக்கம் தம்பிமுத்து தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, ம.புவிதரன் தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி, சோ.கணேசமூர்த்தி தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டனி, த.கிருபாகரன் தலைமையிலான முன்னிலை சோசலிசக் கட்சி, பசீர் சேகுதாவூத் தலைமையிலான ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, சா.ஆசைத்தம்பி தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சொலமன் பெசில் சில்வஸ்டர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, அலி ஸாஹிர் மௌலானா தலைமையிலான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அமீர்அலி சிஹாப்தீன் தலைமையிலான ஐக்கிய மக்கள் சத்தி, உசனார் முகமட் றபாய் தலைமையிலான மௌபிம ஜனதா பக்ஸ, செய்யித் முஃசின் பர்ஹான் சக்காப் மௌலானா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய முன்னணி, டெவோன் பிவால ஜெயகொடி தலைமையிலான அபே ஜனபல ஆகிய அரசியல் கட்சிகளும் மற்றும் சுயேச்சைக் குழுக்களும் இவ்வாறு வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன. (த-46)

# கொரோனாவிலிருந்து தப்ப ஒரே வழி சுத்தமே



நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் கிருமிகள் அதிகம் பரவும் இடங்கள் எவை, அவற்றை எப்படிச் சுத்தம் செய்வது மற்றும் வீட்டை எப்படிச் சுத்தமாக வைத்துக் கொள்வது உள்ளிட்ட பல கேள்விகளுக்கு விளக்கமளித்து சில பரிந்துரைகளையும் பகிர்ந்துள்ளன.

எவ்வளவுதான் கொரோனா வைரஸின் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ஏராளமான வழிமுறைகள் சொன்னாலும், அவற்றை அலட்சியப்படுத்தும் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறதே தவிர, அதன் தீவிரத்தை உணர்ந்தவர்கள் மிகவும் குறைவு.

**கைகள் மட்டுமல்ல**

தற்போதுள்ள சூழ்நிலைகளில் கைகளை மட்டுமல்ல, தங்களின் உடைமைகள் மற்றும் இருப்பிடங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்வது மிகவும் அவசியம்.

ஏனென்றால், கொவிட்19 வைரஸ் இருமல் மற்றும் தும்மலின் போது வெளிப்படும் நீர்த்துளிகள் வழியாக மட்டுமல்ல, அசுத்தமான மேற்பரப்புகளிலும் பல மணிநேரம் செயல்பட்டு அதன்மூலமாகவும் பரவும் என நம்பப்படுகிறது.

இந்நிலையில் 'சுத்தம்' மட்டுமே நமக்குக் கைகொடுக்கும் என்பதை அனைவரும் உணர்ந்து செயல்படுகின்றமை அவசியம்.

**கிருமி நீக்கம்**

ஒரு பொருளின் மேற்பரப்பில் கிருமிகள் மற்றும் பிற அசுத்தங்களை அகற்றுவது சுத்தம் செய்வது.

இரசாயனங்கள் பயன்படுத்தி கிருமிகளை வேரோடு அழிப்பது, கிருமி நீக்கம். இது பெரும்பாலும் சுத்தம் செய்தபின் பின்பற்றவேண்டிய மிக முக்கியமான செயல். மேலும், இது நோய்த்தொற்று பரவும் அபாயத்தைக் கணிசமாகக் குறைக்கும்.

**சுத்தம் செய்ய வேண்டியவை**

நாம் அடிக்கடி உபயோகிக்கும் தளபாடங்கள், கதவுகள், அறைகள், ஸ்விட்ச்சுகள், குழாய்கள் உள்ளிட்டவற்றைச் சுத்தம் செய்வது மிகவும் முக்கியம். சில பொருள்களை உபயோகிப்பதற்கு முன், கைகளில் கையுறை அணிந்து கொள்வது அவசியம். மேலும், சுத்தம் செய்வதற்கு முன் கையுறைகள் அணிவதும், சுத்தம் செய்தபின் கைகளை நன்கு கழுவுவதும் முக்கியம்.

**நினைவில் வைத்திருங்கள்**

உடல்நிலை சரியில்லாமல் இருப்பவரின் அறை மற்றும் குளியலறையை அடிக்கடி சுத்தம் செய்யக்கூடாது. அடிக்கடி சுத்தம் செய்வதனால் மற்ற நபர்களுக்கும் நோய்த்தொற்று பரவும் வாய்ப்பிருக்கிறது.

சுத்தம் செய்யும் வேளையில் முகக் கவசம் அணிவது அவசியம். சுத்தம் செய்த பின் கைகால்களை நன்கு கழுவ வேண்டும்.

முடிந்தவரை அந்த நபர் அவருடைய அறையைவிட்டு வெளியே வராமல் இருப்பது சிறந்தது.

மேலும், வீட்டின் மற்ற ஆரோக்கியமான உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டாம். தனிப்பட்ட இடம் ஒதுக்க முடியாமல் இருக்கும் நிலையில், அவரை கவனித்துக் கொள்ளும் நபர், அவர் உபயோகித்த பொருள்களை அவ்வப்போது பாதுகாப்போடு சுத்தம் செய்து வைப்பது அவசியம்.

**சுத்தம் மற்றும் கிருமி நீக்கம்**

எந்த ஒரு பொருளையும் சுத்தம் செய்வதற்குமுன் கையுறைகள் அணிய வேண்டும். கிருமி நீக்கம் செய்வதற்கு முன் சவர்க்காரம் மற்றும் கிருமி நீக்கி கொண்டு, தண்ணீரைப் பயன்படுத்தி மேற்பரப்புகளைச் சுத்தம் செய்யவும். தரைவிரிப்புகள் போன்ற மென்மையான துணிவகைகளைச் சுத்தம் செய்யும்போது, முதலில் அவற்றின் மேற்பரப்பிலிருக்கும் துகள்களை அகற்றி, பின்னர் பொருத்தமான கிளீனர்களைப் பயன்படுத்தி கிருமிகளை அழிக்கவும். சலவை செய்வதற்கு முன், கையுறைகளை அணிந்து சலவை செய்யவேண்டும். குறிப்பாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டவர்களின் துணிகளை அலசும் போது நிச்சயம் கையுறை இல்லாமல் சலவை செய்யக்கூடாது.

அப்படி கையுறைகள் பயன்படுத்த முடியாத நிலையில், முகத்தைக் கைகளிலிருந்து விலக்கி வைத்துக் கொள்ளுங்கள். சலவை செய்து முடித்தபின், கைகளை நன்கு கழுவுவது முக்கியம்.

**கைச்சுகாதாரம்**

கொரோனா மட்டுமல்ல, எந்தவிதமான நோய்த்தொற்றிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ள கைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியம். அப்படிச் சில விடயங்களைச் செய்த பிறகும், செய்வதற்கு முன்பும் கைகளைச் சுத்தம் செய்ய வேண்டும். இருமல், தும்மலுக்குப் பிறகும் மூக்கைச் சுத்தம் செய்தபின்பும் கைகளை நன்கு சுத்தம் செய்யுங்கள். படுக்கையறையை நன்கு சுத்தம் செய்ய வேண்டும். குறிப்பாக பொதுப் படுக்கையறை என்றால் நிச்சயமாகக் கிருமிநாசினிகள் கொண்டு இடத்தைச் சுத்தம் செய்யவேண்டும். சுத்தம் செய்தபிறகு கைகளை நன்கு கழுவ வேண்டும். சமைக்கும்போதும், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் கைகளைக் கழுவவேண்டும். செல்லப்பிராணிகளுடன் விளையாடிய பிறகு கைகளை நன்கு சுத்தம் செய்யுங்கள். உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பியதும் கைகளை நன்கு சுத்தம் செய்யுங்கள்.

கழிவறை சென்றுவிட்டு வரும்போதெல்லாம் கைகளை நன்கு கழுவுவது அவசியம். மீண்டும் மீண்டும் சொல்லப்படுவது போல, தனிநபர் சுகாதாரம் மிகவும் முக்கியம். சவர்க்காரம் மற்றும் தண்ணீரால் கைகளை அடிக்கடி சுத்தம் செய்து நோய்த்தொற்றுகளிலிருந்து தற்காத்துக்கொள்ளுங்கள். ■

# தாக்குப்பிடிக்குமா இலங்கை?

■ மதுசுதன்

இலங்கையில் கொரோனா வைரஸின் தொற்றுக் குள்ளானவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. வல்லாதிக்க நாடுகள் கூட வைரஸ் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குத் தள்ளாடும் நிலையில் இலங்கையில் ஏற்படப்போகும் பாதிப்பை நினைத்துப் பார்க்க முடியாது. சீன தேசத்தில் இருக்கிற தொழில்நுட்பத்தின் பிரகாரம் ஒரு நாளில் எத்தனையோ மாடிக் கட்டடங்கள் கொண்ட வைத்தியசாலைகள் கட்டவும், வளங்களை நகர்த்தியும் , மருத்துவ ஆளணிகளைக் கொண்டும் கொரோனாவைக் கட்டுப்படுத்தி சாதித்து காட்டியுள்ளனர். அவ்வளவு தொழில்நுட்பம் அவர்களிடம் இருக்கின்றது. வளங்கள் இருக்கின்றன. ஆனால் இலங்கை ஒரு சிறிய நாடு. இங்கு இருக்கிற மருத்துவ வசதி திருப்திகரமாக இருந்தாலும், அது பொதுச்சுகாதாரம் சம்பந்தமான மருத்துவ வசதியாகவே காணப்படுகிறது. இவ்வாறான வைரஸ் உயிர்கொல்லி தொற்றுக்களை இதுவரை சந்தித்திராத நாடு.

சார்ள்ஸ், எபோலா, பன்றிக்காய்ச்சல், பறவைக்காய்ச்சல் போன்ற பாதிப்புகளில் இருந்து தூரவிலகி இருந்த நாட்டுக்குள், கொரோனா வைரஸ் காவி கொண்டு வரப்பட்டுள்ளது என்பது ஒரு துர்ப்பாக்கி யமான விடயம்.

எங்களிடம் இருக்கின்ற மருத்துவ வசதிகள் ,தொழில்நுட்ப வசதிகள் இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, இந்த வைரஸின் தாக்கம் கட்டுக்கடங்காத வீரியம் கொண்டு பரவுமாக இருந்தால், நிலைமைகள் தலைகீழாக மாறக்கூடும்.'

ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்க தேசங்களும் இவற்றுக்காக பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிற நேரத்தில், இலங்கையில் பெரும் இழப்பை எதிர்கொள்ள நேரிடும்.

ஆகவே அனைத்து தரப்புக்களும் பொதுமக்களும் இதைப் பொறுப்புணர்வுடன் அணுகவேண்டும். மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும். புலம்பெயர் தேசங்களில் இருந்து வருபவர்கள் தொற்றுக்காவிகளாக இங்கு வரக்கூடாது.தொற்றுக்கள் இனம் காணப்பட்ட நாடுகளிலிருந்து, இங்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அறிகுறிகள் தென்படும் மக்கள் உடனடியாக மருத்துவமனைகளை நாட வேண்டும். அவர்களுக்கு போதிய விழிப்புணர்வுகளை வழங்க வேண்டும் என்ற பல விடயங்களை நாங்கள் ஒன்றுபட்டு யாக கூட்டாகச் செயற்பட்டால், இந்த நோயிலிருந்து விடுபடலாம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# சரியான பொறிமுறையல்ல

இன்று முதல் எதிர்வரும் மார்ச் 27 ஆம் திகதி வரை ' "வீட்டில் இருந்து வேலை செய்யும் வாரம்'' அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.இக்காலப்பகுதி அரச விடுமுறை நாட்களாக கருதப்பட மாட்டாது.

"மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கையாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சட்டவாக்க நிறுவனங்கள் உள்ளார்ந்த முறைமை ஒன்றினை பின்பற்றி இக்காலப் பகுதியில் தமது அலுவலக பணிகளை மேற்கொள்ள வேண்டும்.மக்கள் வாழ்க்கையை வழமையான முறையில் பேணுவதற்குத் தேவையான சுகாதார, உள்ளூராட்சி, போக்குவரத்து, வங்கி, உணவு, நீர், மின்சாரம் ஆகிய வழங்கல் சேவைகளும் உர விநியோகம், நெல் கொள்வனவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இவையெல்லாம் கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஹர்த்தால் என்றால் கூட அதை விடுமுறை நாள் கொண்டாட்டமாகக் கருதும் பொதுப்புத்தியே நம்மில் பலருக்கும் உள்ளது. இந்த நிலையில் ஒருவாரகாலம் வீட்டில் இருந்து பணி செய்யச் சொன்னால்,அது நடக்குமென நம்பினால் அதைவிட அபத்தம் வேறொன்றும் இருக்கப்போவதில்லை. இதற்கு , 'எப்போது லீவு கிடைக்கும், எப்போது வீட்டில் இருக்கலாம்' என்ற எண்ணப்போக்கு மட்டும் காரணம் அல்ல. இவ்வாறான 'வீட்டில் இருந்தபடி பணி' என்ற பொறிமுறை அவர்களுக்கு மிகப் புதியது. எவ்வித வழிகாட்டல்களோ, முன் அனுபமோ, தொழிநுட்ப வசதிகளோ இந்த விடயத்தில் இலங்கையில் உள்ள அரச ஊழியர்களுக்கு இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

மேற்கத்தைய நாடுகளில் 'கண்ணுக்குப் புலனாகாத அலுவலங்கள்' நிறையவே உண்டு. இணைய வசதியோடு ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளில் இருந்தபடியே அலுவலக நேரத்தில் இணைந்து பணி செய்வார்கள். அதற்கு சரியான வழிகாட்டலும், பயிற்சியும், திட்டமிடலும் அவசியம். ஆனால் இவை எதுவுமே இல்லாமல் திடீரென வீட்டில் இருந்து வேலை செய்யுங்கள் என்று அரசு உத்தரவிட்டுள்ளதால், சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்ததைப் போன்ற நிலைக்கு அரச ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். வேண்டுமானால் குறுகியப் பயிற்சி ஒன்றை வழங்கி,உரிய திட்டமிடலுடன் பணிப் பிரிப்புச் செய்து, தேவையான தொழிநுட்ப வசதிகளைப் பெற்றுக் கொடுத்தபின் இத்தகைய வீட்டில் இருந்தபடி வேலை என்ற பிரகடனத்தைச் செய்திருந்தால், அரச நிர்வாக இயந்திரம் பிசிறின்றி இயங்கியிருக்கும்.

ஆனால் ஒரு குழப்பகரமான சூழலில், அறிவிக்கப்பட்டுள்ள இந்த வீட்டில் இருந்தபடி வேலை என்ற திட்டம், ஓரளவுக்கேனும் பணி செய்து கொண்டிருப்பவர்களைக் கூட அதனைச் செய்யவிடாமல் ஆக்கிவிடும். உதாரணமாக மேலதிகாரி ஒருவர் ஒரு முக்கிய பணி தொடர்பான அவசர முடிவொன்றை எடுப்பதற்காக தனக்கு கீழ் பணி புரியும் இரண்டாம் நிலை அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள வேண்டும். ஆனால் அவர்களில் பலர் இதுதான் சாட்டென்று, தமது தொலைபேசிகளை இயக்கமற்ற நிலைக்கு கொண்டு சென்றுவிட்டு, 'ஹாயாக' வீட்டில் ஓய்வெடுத்தால் எப்படித் தொடர்பு கொள்வது ? எப்படி முடிவெடுப்பது ? இல்லாவிட்டால் 'வீட்டில் தான் இருக்கிறேன்' என்று தொலைபேசியில் சொல்லிவிட்டு, குடும்பத்தோடு சுற்றுலாக்கள் செல்லவும் கூடும். இப்படியான நிறையச் சிக்கல்கள் 'வீட்டில் இருந்து வேலை' செய்யும் போது ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

ஆகவே வீட்டில் இருந்து வேலை என்பதை விடவும் , பேசாமல் பொதுவிடுமுறையாக அறிவிப்பதோ அல்லது நாட்டை ஒட்டுமொத்தமாக முடக்குவதே , கொரோனாவுக்கு எதிரான சரியான தடுப்பு நடவடிக்கையாக இருக்கும்.

### கொரோனா பரிசோதனைக்கு

# தனியார் மருத்துவமனை 6,000 ரூபாவே அறவிடலாம்

கொழும்பு, மார்ச் 20



**தனியார் மருத்துவமனைகள் விசேட மருத்துவரின் பொறுப்பில்தான் 'கொரோனா' எனச் சந்தேகிக்கப்படும் நோயாளர்களை பரிசோனைக்கு உட்படுத்தவேண்டும். இதற்கு 6 ஆயிரம் ரூபா பணம் மட்டுமே அறவிடப்படவேண்டும் என்று தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், இதை விட 3 நிபந்தனைகளையும் விதித்துள்ளார்.**

கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமாயின் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றை கண்டறிவதற்கான பி.சி.ஆர் பரிசேதனையை தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அந்த 3 நிபந்தனைகளும்,

1. இது ஸ்கீரீன் ரெஸ்ட் அல்ல.
2. மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டவர்கள் மாத்திரமே இந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும்.
3. நோயை அடையாளம் கண்டு அது தொடர்பான அறிக்கையை அரசின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அது மாத்திரமன்றி பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளோரின் விவரங்களை பரிசோதனைக்கு முன்னர் எமது பிரிவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். பரிசோதனை நிறைவடைந்த பின்னர் முழுமையன அறிக்கையை எமது பிரிவுக்கு அறிவிக்க வேண்டும் என்பனவே.

24 மணித்தியாலங்களில் பரிசோதனை தொடர்பான அறிக்கையை நோயாளிக்கு வழங்க வேண்டும். இந்தத் துறையைச் சேர்ந்த விசேட மருத்துவரின் பொறுப்பில்தான் 'கொரோனா' என்று சந்தேகிக்கப்படும் நோயாளர்களை பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும்.

நோயாளியின் சளி எமது ஆய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். இந்தப் பரிசோதனைக்காக 6ஆயிரம் ரூபா மாத்திரமே அறவிடப்படவேண்டும். இந்த நிபந்தனைகளுக்கு அமைவாகச் செயற்படாத தனியார் மருத்துவமனைகளுக்கான அனுமதி மறுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (த)

## மக்கள் நடமாட்டம் ஏதுமின்றி வெறிச்சோடின செயலகங்கள்

சாவகச்சேரி, மார்ச் 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், கடந்த இரண்டு நாள்களாக மக்களுடைய நடமாட்டங்கள் ஏதுமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பாக அரசால் அறிவிக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலேயே மக்களுடைய நடமாட்டம் பிரதேச செயலகங்களில் குறைந்துள்ளது.

அரச அறிவிப்பையடுத்து சாவகச்சேரி நகரசபை, பொது நூலகம், வலயக் கல்வி அலுவலகம். நீதிமன்றம் போன்றவை அலுவலர்களின்றிக் காணப்பட்டன. பிரதேச செயலகம் மற்றும் மருத்துவமனை. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் போன்றவை திறந்திருந்த போதிலும் மக்கள் நடமாட்டம் மிகக் குறைந்த நிலையில் காணப்பட்டது. பிரதேசசெயலகம்நேற்று முன்தினம் அலுவலக தினமென்பதால் கிராம அலுவலர்கள் உட்பட அனைத்து அலுவலர்களும், சமுகமளித்திருந்தனர். ஆனால் பொதுமக்கள் வரவின்றி செயலகம் வெறிச்சோடிக் காணப்பட்டது. (ஐ-9)

### கொரோனா அச்சம்;

## இ.போ.ச. ஊழியருக்கு லீவு! வீதியில் மக்கள் பரிதவிப்பு!

சாவகச்சேரி. மார்ச் 20.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கும், அரசு இரண்டு நாள்கள் விடுமுறை வழங்கியது. இதனால் நேற்று அரச பேருந்துகளின் போக்குவரத்துச் செயற்பாடுகள் இடம் பெறவில்லை. பல தேவைகளுக்காக பேருந்துகளில் பயணிப்பவர்கள் பேருந்துக்காக வீதிகளில் காத்திருந்து பெரும் சிரமங்களைச் சந்தித்தமையை அவதானிக்க முடிந்தது.

பேருந்துகளில் பயணிக்கும், அரச அலுவலர்கள், நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் வெயிலில் கால் கடுக்கக் காத்திருந்தனர்.

ஏ-9 முதன்மை வீதியில் யாழ்ப்பாணம், கொடிகாமம் தனியார் பேருந்துகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்தப்பட்டன. கொடிகாமத்துக்கு அப்பால் தூர இடங்களுக்கான பேருந்துச் சேவைகள் மிகக் குறைந்த அளவில் இடம்பெற்றமையால் பயணிகள் பேருந்து நிலையங்களிலும், தரிப்பிடங்களிலும் நீண்ட நேரம் காத்திருந்தனர், மக்கள் ஒன்றுகூடுவதைதடுக்க அரசு திட்டங்களை வகுத்தபோதும், இ.போ.ச ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கியதால் மக்கள் மேலும் கூட்டம் கூட்டமாகவே வீதிகளில் காத்திருந்தனர். நெரிசலுடனேயே பயணங்களைத் தொடர்ந்தனர். (ப-9)

## மக்களுக்கு விழிப்பூட்டல்

முள்ளியவளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான விழிப்புணர்வு ஊட்டும் அறிவிப்பு நடவடிக்கைகளில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் கண்டிப்பாக மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளவும். கொரோனா தொற்று இல்லை என்பதை மருத்துவ அறிக்கை ஊடாக உறுதிப்படுத்திக்கொள்ளவும். பரிசோதனைக்கு உட்படாமல் இருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். பிரதேசங்களில் இருந்து வேறு மாவட்டங்களுக்குச் சென்று வருபவர்கள் வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்ட பொது மருத்துவமனை களில் பரி சோதனையை மேற்கொள்ளலாம் என்று பொலிஸார் அறிவிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். (க-19)


## அதிமதுரத்துக்கு சாவகச்சேரியில் தட்டுப்பாடு

சாவகச்சேரி, மார்ச் 20

சாவகச்சேரி ஆயுர்வேத மருந்தகங்களில் 'அதிமதுரம்' பட்டைக்கு தட்டுப்பாடு நிலவுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

'கொரோனா' வைரஸ் தாக்கம் ஏற்படாமல் தடுக்கும் ஆற்றல் அதிமதுரம் பட்டை நீருக்குள் உள்ளதாக தெரிவிக்கப்படுவதையடுத்து அதனைக் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டியுள்ளனர். அதனால் கடைகளில் நீண்ட நாள்களாக வைக்கப்பட்டிருந்த அதிமதுரம் பட்டை ஓரிரு நாள்களில் விற்பனையாகிவிட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (து-9)

# கொரோனாவும் சில கேள்விகளும்



**கொரோனா தொற்றுஏற்பட்ட நபர் நடந்த பாதையில் குறுக்கிட்டால் எனக்கும் தொற்று ஏற்படுமா?**
நெரிசல் மிகுந்த கடைப் பகுதியொன்றுக்கு நீங்கள் செல்கிறீர்கள். அங்கே வரும் வாடிக்கையாளர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருக்கிறது. அந்த நபரால் உங்களுக்கு எது தொற்றை ஏற்படுத்தும்? எவ்வளவு நெருக்கமாக நீங்கள் செல்கிறீர்கள், எவ்வளவு நேரம் அந்த நபருக்கு அருகில் இருக்கிறீர்கள், கொரோனாவைக் கொண்டிருக்கும் அந்த நபரின் வைரஸ் துளி ஏதாவது உங்கள் மீது பட்டிருக்கிறதா, உங்கள் முகத்தை எந்த அளவுக்கு நீங்கள் தொடுகிறீர்கள். இவைதான் அந்த முக்கியமான காரணிகள். கூடவே உங்கள் வயதும், உடல்நலமும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.



**வைரஸ் துளி என்றால் என்ன?**
உடலிலிருந்து வெளிப்படக்கூடிய திரவத் துளிகள் வைரஸ் கிருமிகளைக் கொண்டிருந்தால், அவை வைரஸ் துளிகள் என்றழைக்கப்படுகின்றன. வைரஸ் என்பது சார்ந்து வாழக்கூடிய மிக நுண்ணிய கிருமி. அது ஒரு செல்லுடன் தன்னை இணைத்துக் கொண்டு பல்கிப் பெருகுகிறது. பிறகு அடுத்த ஓம்புயிரியை (host) நோக்கி நகர்கிறது. இதுதான் அதன் வாழ்க்கைச் சுழற்சி என்கிறார் அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கேரி விட்டேக்கர். "வெற்று வைரஸால் எங்குமே செல்ல முடியாது. அது சளித் துளியிலோ, எச்சில் துளியிலோ தொற்றிக்கொண்டால் மட்டுமே அதனால் எங்கும் செல்ல முடியும்" என்கிறார் ஹொங்கொங்கில் உள்ள சீனப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கின்ஆன் க்வோக்.

இந்த சளித் துளிகளும், எச்சில் துளிகளும் நாம் இருமும்போதும், தும்மும்போதும் சிரிக்கும்போதும், பாடும்போதும், சுவாசிக்கும்போதும், பேசும்போதும் வாயிலிருந்து வெளிப்படுகின்றன. அப்படி வெளிப்பட்டுக் காற்றில் பயணிக்கும் துளிகளின் குறுக்கே ஏதும் வராவிட்டால் தரையில் போய்த் தஞ்சமடைகின்றன.
நம் செல்களுக்குள் செல்ல வேண்டும் என்றால் அந்த வைரஸ் துளிகள் நம் வாய், மூக்கு, கண்கள் வழியாகத்தான் நுழைய வேண்டும். தும்மலும், இருமலும்தான் கொரோனா பரவுவதன் முக்கியமான காரணிகள் என்று சில நிபுணர்கள் கருதுகிறார்கள். ஒருவருக்கொருவர் முகத்துக்கு எதிராகப் பேசுவதும் உணவைப் பங்கிட்டுக் கொள்வதும் கூட அபாயம் தான் என்கிறார் க்வோக்.
"ஒருவர் மதியம் என்ன சாப்பிட்டார் என்பதை அவர் வாய் வாசனையிலிருந்து நீங்கள் உணர்கிறீர்கள் என்றால் அவர் வெளியில் விட்ட மூச்சுக் காற்றை நீங்கள் சுவாசிக்கி றீர்கள் என்று அர்த்தம். அவர்கள் மூச்சில் உள்ள வைரஸையும் சேர்த்துதான் நீங்கள் சுவாசிக்கிறீர்கள்" என்கிறார் இங்கிலாந்தின் லீசெஸ்டர் பல்கலைக்கழகப் பேராசிரியரும் கரோனா வைரஸைப் பற்றி ஆய்வு செய்பவருமான ஜூலியன் டேங்.

**தொற்று கொண்டோருடன் நெருக்கம் என்பது எவ்வளவு தொலைவு?**
நோயாளியிடமிருந்து மூன்று அடிகள் விலகியிருப்பது நல்லது என்கிறார் உலக சுகாதார நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கிறிஸ்டியன் லிண்ட்மீயர். ஆனால், வேறு சில நிபுணர்கள் ஆறு அடித் தொலைவில் நின்றாலும் ஆபத்தே என்று அச்சுறுத்துகிறார்கள்.

**நோய்த் தொற்று கொண்டவருடன் எவ்வளவு நேரம் இருந்தால் நமக்குத் தொற்றும்?**
அதுகுறித்து இன்னும் தெளிவில்லை. ஆனாலும், நாம் அதிக நேரம் இருக்க இருக்க நோய்த் தொற்றின் சாத்தியம் மிகவும் அதிகம் என்று நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

**ஒருவர் கொரோனா தொற்றைக் கொண்டிருக்கிறாரா என்பதைப் பார்த்தே கண்டுபிடிக்க முடியுமா?**
அவ்வளவு எளிதில் கண்டுபிடித்துவிட முடியாது. நீங்கள் நோய்த் தொற்றுக்கு உள்ளானீர்கள் என்றால் தடிமன், ஃப்ளூ காய்ச்சல் போன்ற பெரும்பாலும் சிறிய அளவிலான அறிகுறிகளேதென்படும். கொரோனா தொற்றுக்குள்ளான இன்னும் சிலர் நல்ல உடல்நலத்துடனே காணப்படலாம். இதில் பாதகமான அம்சம் என்னவென்றால் கொரோனா வைரஸைப் பரப்புவோர் யார் என்று கண்டுபிடிப்பது சிரமம் என்பதுதான். ஏனெனில், கொரோனா தொற்று கொண்ட, ஆனால் அறிகுறிகள் ஏதும் இல்லாதவர்கள் மற்றவர்களுக்கு அந்தத் தொற்றைப் பரப்புவது அதிகரித்துக் கொண்டே வருகிறது.

**பஸ்ஸில் உள்ள கம்பி, செல்பேசி முதலிய சாதனங்களின் தொடுதிரை, பிற பரப்புகள் போன்றவற்றில் வைரஸ் நீடிக்குமா?**
ஆமாம்! ஹொங்கொங்கில் உள்ள புத்த கோயிலுக்குச் சென்றுவந்த பலரும் உடல்நலம் குன்றியதை அடுத்து அந்த நகரத்தின் 'சுகாதாரப் பாதுகாப்பு மையம்' அந்தக் கோயிலிலிருந்து மாதிரிப் பொருள்களை எடுத்துச் சென்று ஆய்வுசெய்தது. அந்தக் கோயிலின் கழிப்பறைக் குழாய்கள், புத்த நூல்களின் துணி அட்டைகள் போன்றவற்றில் கொரோனா வைரஸ் இருப்பது தெரியவந்தது. உலோகம், கண்ணாடி, பிளாஸ்ரிக் போன்றவற்றிலும் இரண்டு மணி நேரத்திலிருந்து ஒன்பது நாள்கள் வரை கொரோனா வைரஸ் ஒட்டியிருந்து தாக்குப்பிடிக்கக்கூடியவை என்பதை மற்றுமொரு ஆய்வு தெரிவிக்கிறது.
ஒரு பரப்பு சுத்தமாக இருக்கிறதா, அசுத்தமாக இருக்கிறதா என்பதெல்லாம் பிரச்சினை இல்லை. நோய்த் தொற்று கொண்ட ஒருவர் தும்மி, அந்தத் தும்மலில் வெளிப்பட்ட துளிகள் ஒரு பரப்பில் விழுந்து, அந்தப் பரப்பை வேறு ஒருவர் தொட்டால் அவருக்குத் தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.
கொரோனா வைரஸ்களை அழிப்பது ஓரளவுக்கு எளிது என்கிறார் பேராசிரியர் விட்டேக்கர். நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் கிருமிநாசினி, சவர்க்காரம் போன்றவற்றைக் கொண்டு ஒரு பரப்பைத் துடைத்தால் அந்த வைரஸை மூடியிருக்கும் நுட்பமான உறை உடைந்துவிடும்.
அதற்குப் பிறகு அந்த வைரஸால் ஒன்றும் செய்ய முடியாது. வாய், மூக்கு, கண் போன்ற உறுப்புகளைத் தொடுவதற்கு முன்பு நாம் கைகளைக் கழுவியிருந்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை.
ஏனெனில், தோலை ஊடுருவிக் கொண்டு வைரஸ் துளிகளால் செல்ல முடியாது.
கொரோனா பாதிக்கப்பட்ட நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பொருளொன்றில் யாராவது நோயாளி தும்மி, நோய்க் கிருமிகள் அதில் ஒட்டியிருக்கும் என்று நீங்கள் அச்சப்படலாம். சீனாவிலிருந்து பொருள்கள் மூலமாக நம் ஊருக்கு வரும் வரை பெரும்பாலும் கொரோனா வைரஸால் தாக்குப்பிடிக்க முடியாது. அப்படியே உங்களுக்கு அச்சம் இருந்தால் கிருமி நாசினியைக் கொண்டு அந்தப் பொருளைத் துடைத்துவிடுங்கள்.

**சவர்க்காரம் எந்தத் தயாரிப்பை நாம் பயன்படுத்துகிறோம் என்பது முக்கியமா?**
அப்படி ஏதும் இல்லை என்றே பெரும்பாலான வல்லுநர்கள் கூறுகிறார்கள். நாம் பயன்படுத்தும் எந்த சவர்க்காரத்தைக் கொண்டும் கைகளைக் கழுவிக்கொள்ளலாம்.

**என்னுடைய அண்டை வீட்டார் இருமுகிறார். அது குறித்து நான் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமா?**
வைரஸ் கிருமி சுவர்கள் வழியாகவும், கண்ணாடி வழியாகவும் ஊடுருவும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்கிறார் ஹார்வார்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆஷிஷ் கே. ஜா. சுற்றுச்சுவர் மீது அண்டை வீட்டார் தும்மி, அந்த இடத்தை நாம் தொடநேரிடும்போது தான்கொரோனா பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**முத்தமிடுதல் மூலம் எனக்கு கொரோனா தொற்று வருமா?**
முத்தமிடுவதன் மூலம் கொரோனா பரவுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்றே வல்லுநர்கள் கருதுகிறார்கள்.
அதே நேரத்தில், உடலுறவு மூலம் கொரோனா பரவும் என்பதற்கு இது வரை எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்கிறார்கள்.

**கொரோனா தொற்று கொண்டவர்கள் இருக்கும் இடத்தில் உணவுஉண்டால்நமக்கும்தொற்று ஏற்படுமா?**
நோய்த் தொற்று கொண்டவர்கள் உணவு பரிமாறும்போதும், அதிக அளவிலானோர் பஃபேயில் (buffet) கலந்துகொள்ளும் போதும் ஆபத்து அதிகம். ஆனால், உணவைச் சூடாக்கினால் உணவில் உள்ள கொரோனா வைரஸ் அழிந்துவிடும் என்கிறார் பேராசிரியர் விட்டேக்கர்.

நன்றி – நியூயோர்க் டைம்ஸ்





## விளையாட்டுப் போட்டி

கொடிகாமம்,மார்ச் 20

மிருசுவில் வடக்கு பாரதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் மிருசுவில் அ.த.க பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் எஸ்.மயூரன், சிறப்பு விருந்தினர்களாக மிருசுவில் அ.த.க பாடசாலை அதிபர் க.கஜேந்திரன், மன்னன் குறிச்சி நெல்லி கிணற்றடி தான்தோன்றி கந்த சுவாமியார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தில்லையம்பலம் குருக்கள் ,கௌரவ விருந்தினர்களாக பளை பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.கிருபாகரன், கொடிகா மம் பனை தென்னை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.மகாலிங்கம், மிருசுவில் பொது நூலக நூலகர் சி.சிவாஜினி, முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பல்வேறு விளையாட்டுக்கள் நடைபெற்றமையுடன் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-159)



## விழிப்புணர்வு கலந்துரையாடல்

கொடிகாமம்,மார்ச் 20

“கொரோனாவை அடித்துத் துரத்துவோம்” என்ற தொனிப்பொருளில் சிறப்பு விழிப்புணர்வுக் கலந்துரையாடல் முல்லைத்தீவு மாமுலை கிருஷ்ணர் ஆலய திருமண மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

செரண்டிப் சிறுவர் இல்லத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் சுய பாதுகாப்பு, தனிநபர் சுத்தம் மற்றும் நோய் எதிர்பாற்றலை இலகுவாக வளர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் போன்றன தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

நிகழ்வில் வளவாளராக பிரணவம் யோகா மையத்தின் நிறுவுநர் பு.பிரணவன் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார்.

நிகழ்வில் செரண்டிப் நிலையத்தில் கல்வி கற்கும் சிறுவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)

### கொரோனாவைப் பரிசோதிக்க

# முழு வீச்சில் களமிறங்குகிறது வடக்கு சுகாதார திணைக்களம்

யாழ்ப்பாணம், மார்ச்,20

**கொரோனா தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும், அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம், எந்த நேரத்திலும் தயாராகவே உள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

நாட்டில் கொரோனா தொற்றுத் தொடர்பான தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பல நடவடிக்கைகளைச் செயல்படுத்த முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். வடக்கு மாகாணத்தில் மட்டுப்படுத்தப்பட்ட மனித வளங்களுடன் செயல்படுவதால், உங்கள் கோரிக்கையின் பேரில் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் கொரோனாத் தொற்று தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஆற்றுவதற்கு எங்கள் உறுப்பினர்கள் தயாராக உள்ளனர். எங்கள் உறுப்பினர்கள் கொரோனா தடுப்புத் தொடர்பான சுகாதார, கல்வி நடவடிக்கைகளைச் சாத்தியமான வழிகளில் செய்வார்கள். நோய்க் கண்காணிப்பு நடவடிக்கைகளில் அனைத்து பொது சுகாதார ஊழியர்களுக்கும் எங்கள் உறுப்பினர்கள் ஆதரவளிப்பார்கள். எனவே மக்கள் அது தொடர்பாக விழிப்புணர்வுடன் செயற்பட்டு, தகவல்களை வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப)



## இலங்கையர் ஐவருக்கு சாதனைப்பெண் விருது

வவுனியா,மார்ச் 20

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்தியாவின் நந்தவனம் பவுண்டேசன் பல்துறைகளிலும் சாதித்துக் கொண்டிருக்கும் பெண்களை இனங்கண்டு, அவர்களைக் கௌரவப்படுத்தும் விருதுகளை அண்மையில் வழங்கியது.

இதில் வடமாகாணத்தின் சார்பாக வவுனியாவைச் சேர்ந்த ஜீவ்ராணி றஜி குமார் உட்பட இலங்கையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஐவர் ‘சாதனைப் பெண்கள் 2020’ எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கையைச் சேர்ந்த ஜீவராணி றஜிகுமார் (வடமாகாணம்) பாத்திமா ஸிமாறா அலி (கொழும்பு), பாத்திமா றிஸ்வானா (பண்டாரவளை), காயத்திரி யோசப் நகுலன் (மட்டக்களப்பு), புஸ்பராணி சந்தியா (கொழும்பு) ஆகியோருக்குவிருதுகள்வழங்கப்பட்டன.

9 நாடுகளைச் சேர்ந்த 24 பெண்களுக்கு நிகழ்வில் விருதுகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

## சு.க வின் கழுத்தறுத்த பொது ஜன பெரமுன

### தயாசிறி ஜயசேகர கவலை

கொழும்பு, மார்ச் 20

வழங்கியவாக்குறுதிகளைஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கடைசிநேரத்தில் மீறிவிட்டது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

“ ஜனாதிபதி தேர்தலின்போது கோத்தாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். பொதுத்தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடவும், ஆசன ஒதுக்கீடுகள் சம்பந்தமாகவும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன. எனினும், தற்போது அந்த உறுதிமொழி மீறப்பட்டுள்ளதாகவே உணர்கின்றோம். நாம் கோரியபடி ஆசன ஒதுக்கீடு வழங்கப்பட



வில்லை. இதனால் நாம் நொந்து போகவில்லை என்பதுடன், இது இறுதியான தேர்தலும் அல்ல என்பதைக்கூறிவைக்கவிரும்புகின்றேன். எனவே, கட்சி ஆதரவாளர்களை தைரியமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.” என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்தார். (ப-44)

## இணக்க சபை ஒத்திவைப்பு

யாழ்.பிரதேங்களில் ஏற்படும் சிறுசிறு பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காக உருவாக்கப்பட்ட் 246 ஆம் இலக்க யாழ்.பிரதேச இணக்க சபை அமர்வு, எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற மாட்டாது என்று இணக்க சபைத் தவிசாளர் மனோகரன் மேர்சி சுஜந்தினி அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெற்று வரும் அமர்வு நாட்டின் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நிலைமை சீரடைந்ததும் இணக்க சபை செயற்படும் என்றும் தவிசாளர் அறிவித்துள்ளார். (க-69)

## பொது அறிவுப் போட்டி பிற்போடல்

யாழ்ப்பாணம்,மார்ச் 20

வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்படவிருந்த பொது அறிவுப் போட்டி நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அலமச்சின் அனுமதியுடன், யாழ்ப்பாணம் பெனின்சுலா றோட்டறக்ட் கழகத்தால் ரட்ணம் பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையில் இந்தப் போட்டி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ஐ)

## மகா யாகம்

யாழ்ப்பாணம்,மார்ச் 20

உலக மக்களின் நன்மைக்காக நோய் நீங்கி, நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டி மகா யாகம் துன்னாலை கோவிற்கடவை ஐயப்பன் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு கணபதி ஹோமத்துடன் யாகம் ஆரம்பமாகும். யாகத்தில் பக்தர்கள் அதிகளவு கூடாமல் வீட்டிலிருந்தவாறு பிரார்த்தனையில் ஈடுபடுமாறு ஆலயத்தினர் கேட்டுள்ளனர். (க)

# முல்லைத்தீவுக்கு வரும் வெளிமாவட்ட மீனவரை திருப்பி அனுப்ப நடவடிக்கை



முல்லைத்தீவு, மார்ச்,20

**சீசன் தொழிலுக்காக முல்லைத்தீவுக்கு படையெடுக்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களை அவர்களுடைய மாவட்டங்களுக்கே திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

முல்லை மாவட்டச் செயலர், சுகாதார சேவைகள் பணிப்பாளர், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம், கரையோர மீனவ சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகள், முப்படையினர் கிராம அலுவலர்கள், அரச உத்தியோகத்தர்களுக்கிடையில், கரைதுறைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற கொரோனா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடலில் இந்த விடயம் ஆராயப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோர பிரதேசங்களான கொக்குளாய், நாயாறு, சாலை, நீராவிப்பிட்டி போன்ற பகுதிகளில் நீர்கொழும்பு, வென்னப்புவ, கறுக்குப்பனை, புத்தளம் பகுதியில் இருந்து கடற்றொழில் நடவடிக்கைக்காக மீனவர்கள் வருகைதந்துள்ளார்கள். இவர்களால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதாக அச்சம் வெளியிடப்பட்ட நிலையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இது தொடர்பில் முல்லைத்தீவு, மாவட்டச் செயலர், ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு மாவட்ட கரையோரப் பகுதிகளில் சட்டத்துக்கு முரணான முறையில் வருகின்றவர்களை தடுத்து அவர்களின் மாவட்டத்துக்கே திருப்பி அனுப்புவதாகவும், வந்துள்ளவர்களுக்கு சுகாதார ஆலோசனைகள் வழங்கி ஒரு மாதத்துக்கு இவ்வாறானவர்கள் வருவதைத் தடுக்க வேண்டும். புத்தளம், சிலாபம் போன்ற பிரதேசங்களில் உள்ள வெளிநாட்டவர்கள் பலர் வைரஸ் தொற்றில் பாதிக்கப்பட்டுள்ளமையால் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்நியில் தெற்கில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையேரங்களுக்கு மீனவர்கள் வருகிறார்கள் என தகவல் கிடைத்தள்ளது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். கரையோரங்களில் மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற காரணத்தால், மீனவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி மாவட்டத்துக்குள் வருகின்றவர்களை இயன்றளவுவராமல் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்து வந்தவர்களை தனிமைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இதேபோல் முல்லைத்தீவுமாவட்டத்தில் பிடிக்கப்படும் மீன்களை, வியா பாரம் செய்யும் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மீன் வியாபார போக்குவரத்துச் சங்கம் ஊடாகவே வெளிமாவட்டங்களுக்கு அவற்றைக் கொண்டு செல்லவேண்டும்-என்றார். (ப-19)

## மாயமாகினர் என்று கூறப்பட்டவர்கள் மன்னாருக்கு வந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 20

புத்தளம் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதும் மாயமாகின என்று கூறப்பட்ட 3 முஸ்லிம் குடும்பங்கள் மன்னார் நகரில் வந்திறங்கின என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு வீடு ஒன்றுக்கு வந்துள்ளோம் என்று அந்தக் குடும்பத்தினர் கூறுகின்றனர்.

குறித்த தொகை எண்ணிக்கையானவர்கள் மன்னாருக்கு வந்து தங்கிநிற்கின்ற விடயம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மாவட்டச் செயலக அதிகாரிகள் கிராம அலுவலர் சகிதம் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணையில் ஈடுபட்டனர்.

தாங்கள் புத்தளத்தில் வசிக்கின்றோம் என்றும் இறப்பு நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ள வந்துள்ளோம் என்றும் தெரிவித்தனர்.

இருப்பினும் அவர்களின் தேசிய அடையாள அட்டைகளின் முகவரியில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று காணப்படுகின்றது.

அதனால் மாவட்டச் செயலகத்தினர் இந்த விடயத்தைப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுசென்றுள்ளனர். (த-105)

## பெறுபேறு வெளியிடுவதில் தாமதம் வரலாம்

கொழும்பு, மார்ச் 20

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு வெளியிடுவதில் தாமதம் ஏற்படக்கூடும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளை எதிர்வரும் 28 ஆம் திகதி வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது: இருப்பினும் அரசு அறிவித்துள்ள விஷேட விடுமுறை காரணமாக பெறுபேறுகளை வெளியிடுவதில் கால தாமதம் ஏற்படக்கூடும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

## வெளிநாட்டவர்கள் 250 பேர் தென்மராட்சியில் பதிவு

சாவகச்சேரி, மார்ச் 20

புலம்பெயர் நாடுகளிலிருந்து தென்மராட்சி பிரதேசத்துக்கு வருகை தந்துள்ளவர்கள் தாமாகவே முன்வந்து கொரோனா வைரஸ் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை தென்மராட்சி பிரதேசத்தில் 250 க்கு மேற்பட்டோர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், பிரிவு கிராம அலுவலர், பொது சுகாதார பரிசோதகர், குடும்ப நல சேவையாளர்கள் போன்றோரிடம் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை படையினரும் புலம்பெயர் நாடுகளிலிருந்து வந்தவர்களின் விவரங்களைப் பதிவு செய்து வருகின்றனர். (ஐ-9)

வற்றாப்பளை கண்ணகியிடம்

## அடுத்த இரு திங்களும் வருவதைத் தவிருங்கள்!



முல்லைத்தீவு, மார்ச் 20

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் அடுத்துவரும் இரண்டு பங்குனித் திங்கள் (வரும்23ஆம், 6ஆம் திகதிகள்) நாள்களில் மக்கள் கூடுவதைத் தவிர்க்குமாறு கோவில் நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் நிர்வாகத்தினர் கோரியுள்ளனர்.

கொரோனா வைரஸ் இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், அரச விடுமுறைகள் வழங்கப்பட்டு பொதுமக்கள் கூடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்தப் பங்குனித் திங்கள் சிறப்பு நாள்களில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் நிர்வாகத்தினருக்கும் மாவட்ட செயலகத்தின் அலுவலர்களுக்கும் இடையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலர், இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் மற்றும் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவில் தலைவர் முருகேசு குகதாசன், நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். கலந்துரையாடலின் இறுதியில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது பற்றி கோவில் தலைவர் குகதாசன் தெரிவித்ததாவது:

வைரஸ் தொற்று விடயத்தில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதன் மூலம் எங்களையும் எங்களுடைய குடும்பத்தையும் எங்களுடைய நாட்டையும் பாதுகாக்கக் கூடியதாக இருக்கும். எங்களுடைய ஆலய நடவடிக்கையில் சில மாற்றங்களை தேவை கருதி எடுத்திருக்கின்றோம்.

வெளியிடங்களிலிருந்து வருபவர்கள் விஷேட பூசைகளை நேர்த்திக்கடன் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் பொதுமக்களை வேண்டிக்கொள்கின்றோம்.

வியாபார நிலையங்கள் அமைக்க அனுமதிகள் எவையும் வழங்கப்படமாட்டா. அதன்பிறகு பதினான்கு நாள்கள் கழிந்து நாட்டு நிலைமையைப் பார்த்து உங்களுக்கு ஓர் அறிவித்தலை விடுப்போம் என்றார். (த-19)

## ஆலய நேர்த்திக்கடன்கள் மறு அறிவித்தல் வரை நிறுத்தம்

மீசாலை சோலை அம்மன் ஆலயத்தில் மறு அறிவித்தல் வரை பக்தர்கள் பொங்கலிடுவது மற்றும் அன்னதானம் வழங்குதல் என்பன நிறுத்தப்பட்டுள்ளன என ஆலய தர்ம கர்த்தா அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை குளிர்த்தி அபிஷேகம், பூசை வழிபாடுகள் வழமை போன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## இறுதிச் சடங்குகள் எதற்காக?

இயேசு எமக்காக மரித்தார் - எளிமையாய் வாழ்ந்த இறைமகனின் இறுதி நிகழ்வும் எழிமையாகவே நடந்தேறியது. தனக்கென்று எதையும் வைத்திருக்காதவரின் உடல்கூட இரவல் கல்லறையில் வைக்கப்படுகின்றது. இன்றைய அடக்கச் சடங்குகள் இறந்தவருக்கு அஞ்சலியாகவா அல்லது வாழ்வோரின் புகழ்பாடலாகவா நடக்கின்றன?




நோய் வேளையிலும் வயோதிபத்திலும் பல்வேறு அடிப்படைத் தேவைகளையும் அன்பையும் அரவணைப்பையும் பராமரிப்பையும் வழங்காது தனிமையிலும் முதியோர் இல்லத்திலும் தள்ளாத வயதில் கவனித்தோரையும் புறந்தள்ளிவிட்டு தங்களது செல்வச்செழிப்பையும் பிரபல்யத்தையும் வெளிப்படுத்தும் ஆடம்பர செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. விலையுயர்ந்த பெட்டிகள், மேளதாள அணி வகுப்புக்கள், கம்பள விரிப்புக்கள் புகழ்பாடும் அறிவித்தல்கள் என பல வடிவங்களில் பணபலத்தை வெளிப்படுத்தும் நாடகங்கள் அரங்கேறுகின்றன.

பந்தபாசங்களை உதறித்தள்ளி பணிவிடைபுரிந்து மகிழ்விக்காது வாழும்போது துன்பத்தில் துவளவிட்டு விட்டு இறந்தபின் கொடுக்கும் வெளிவேட அன்பும், கௌரவமும் யாருக்காக? எமது செயற்பாடுகள் எம்மை வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாக்குகின்றன. வாழும்போது தேவைகளை நிறைவு செய்வதிலும் அன்பை ஆறுதலை பரிமாறுவதிலும் ஈடுபடும்போது எமக்காகத் தம்மைக் கரைத்த முதியோரின் உள்ளம் மகிழ்வுடன் நிறை அமைதி கொள்ளும். துன்பத்திலும் நோயிலும் வயோதிபத்திலும் தனிமையிலும் பெற்றோர் பெரியோருக்கு நம்பிக்கைக் கரங்களாக கைகொடுத்து அவர்களது மகிழ்வில் இறைவனைக் காண்போம்.

**எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை**

# பொலிஸ், இராணுவம் வவுனியாவில் குவிப்பு

வவுனியா, மார்ச் 20
வவுனியா மாவட்டச் செயலகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பெருமளவான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது. இந்த நிலையிலேயே குறித்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸலால் த சில்வா, வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மானவடு ஆகியோரின் தலைமையின் கீழ் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், இலுப்பையடிச் சந்தி, மருத்துவமனை, அஞ்சல் அலுவலகம் போன்றவற்றுக்கு முன்பாக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

(ஜ-18)



# டின்மீன், பருப்புக்கு மக்கள் வரிசையில்!

## வவுனியாவில் இந்த நிலை

வவுனியா, மார்ச் 20
வவுனியாவில் உள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் மக்கள் ரின் மீனைக் கொள்வனவு செய்வதற்கு வரிசையில் நின்றமையை அவதானிக்க முடிகின்றது. அரசால் அறிவிக்கப்பட்ட விலைக்குறைப்பை அடுத்தே மக்கள் இவ்வாறு வர்த்தக நிலையங்களில் வரிசையில் நின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது,



ஒரு கிலோ கிராம் பருப்பு 65 ரூபாவிற்கும், டின்மீன் 100 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்ட விசேட அறிவிப்பினையடுத்து நாடளாவிய ரீதியில் குறித்த பொருள்களுக்கான பொதுமக்களின் கொள்வனவு அதிகரித்துள்ளது. அந்த நிலை வவுனியாவிலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

சில வர்த்தக நிலையங்களில் ரின் மீன் இருப்பு நிறைவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்ற நிலையில், வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் தீடீர் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். மொத்த வியாபார நிலையங்களுக்குச் சென்று சில்லறை வியாபாரிகளுக்கு பொருள்களை விநியோகம் செய்யுமாறும் பணிப்புரை விடுக்கப்படுகின்றது. (ப-18)

# ஆலய விழாக்களுக்கு 15 பேருக்கே அனுமதி

## பொலிஸார் அறிவிப்பு

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் வருடாந்தத் திருவிழாக்களில் 15 பேருக்கு மேல் கலந்து கொள்ளமுடியாது என்ற பொலிஸார் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளனர். அதனால் ஆலய நிர்வாகிகள் குழப்பமடைந்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தையடுத்து, இந்துக்கோவில்களில் வருடாந்தத் திருவிழாக்களும், பொங்கல் உற்சவங்களும். களைகட்டத் தொடங்கியுள்ளன.

கிராமப்புறக் கோவில்களில் திருவிழா அல்லது பொங்கல் உற்சவமெனில் கிராமமே திரள்வது வழமை. ஆனால் இவ்வருடம் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க கோவில்களில் திருவிழாக்கள் மற்றும் பொங்கல் செய்வதாயின் அனுமதி பெறப்படல் வேண்டும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கோவில்களின் நிர்வாகத்தினர் விண்ணப்பித்த போது, உற்சவம் முடியும் வரை 15 பேருக்கு மேல் பங்குபற்ற முடியாது என்று பொலிஸார் கண்டிப்பாக அறிவித்துள்ளனர்.

இதனால் இவ்வருடம் உற்சவங்களை நடத்துவதாக அல்லது கைவிடுவதா என்று முடிவு செய்ய முடியாமல் ஆலய நிர்வாகத்தினர் குழப்பமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## மாவட்டச் செயலகம் முன்

# கோஷம் எழுப்பிய ஈ.பி.டி.பி அமைதி காத்த பொலிஸார்

தேர்தல் விதிமுறைகளை மீறி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்;கு முன்பாக ஈ.பி.டி.பியினர் கோஷம் எழுப்பிய போதும், பொலிஸார் நடவடிக்கை எடுக்காமல் அமைதி காத்தனர்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஈ.பி.டி.பி. நேற்றுத் தாக்கல் செய்தது. அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வேட்பு மனுத் தாக்கல் நேற்றுக் காலை இடம்பெற்றது.

வேட்புமனுத் தாக்கலுக்காக அந்தக் கட்சியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்களுடன் பேரணியாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை வந்தடைந்தனர். வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்குள் வேட்பாளர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் மாவட்டச் செயலகம் முன்பாக காத்திருந்தனர்.

வேட்புமனுத் தாக்கலை முடித்துக் கொண்டு டக்ளஸ் தேவானந்தா வெளியேறினார். இதன்போது அவரையும், அவரது கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களையும் வைத்துக் கொண்டு மாவட்டச் செயலக முன்றிலில் ஆதரவாளர்கள் கோஷம் எழுப்பினர்.

மாவட்டச் செயலகத்திலும், மாவட்டச் செயலக முன்றிலிலும் கடமையிலிருந்த பொலிஸார் மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் அவர்கள் கலைந்து சென்றனர். (ஒ.5)

# வெடி பொருளை வைத்திருந்தாரென

## ராணுவத்தால் கைது

வெடிபொருளை உடைமையில் கொண்டு சென்றார் என்ற குற்றச்சாட்டில் குடும்பத்த்லைவர் கைது செய்யப்பட்டார். அவரை 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை வடக்குப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

வீதியில் சென்றுகொண்டிருந்த அவரை ராணுவத்தினர் சோதனையிட்டனர். அவருடைய பையில் குறித்த வெடிபொருள் காணப்பட்டது என்றும் அதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அவர் விசாரணை மற்றும் சட்டநடவடிக்கைக்காக பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். கிளிநொச்சி நீதிமன்றில் அன்றையதினமே அவரை முற்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்கமன்று உத்தரவிட்டது. (து-6)

# பெரும்போகத்தில் இலாபம் இல்லை!

## மன்னார் விவசாயிகள் கவலை

மன்னார், மார்ச் 20
மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த வருடத்துக்கான பெரும்போக நெற்செய்கை மூலம் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் விவசாய பெருநிலப்பரப்பாக உள்ள மாந்தை, நானாட்டன், மடு, முசலி போன்ற பிரதேசங்களில் பெரும் போகத்துக்கான அறுவடைகள் நிறைவுபெறும்தருவாயில் உள்ளன.

வெள்ளப்பாதிப்பு மற்றும் நோய்த்தாக்கங்களால் இம்முறை விளைச்சல் மிகக்குறைவா கக் கிடைத்துள்ளது. மாந்தையில் ஏக்கருக்கு 30 தொடக்கம் 35 மூடைகளும், நானாட்டானில் 35 தொடக்கம் 40 மூடைகளும் விளைச்சல் கிடைத்துள்ளன.

அரசாங்க நெல் சந்தைப்படுத்தும் சபையால், நெல்கொள்வனவு செய்வதற்காக பலவிதமான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அதனால் பல விவசாயிகள் தனியார் நெல் கொள்வனவாளர்களிடம் அறுவடை முடிந்த கையோடு அடிமட்ட விலைக்கு நெல்லை விற்பனை செய்கின்றனர்.

அதனால் விவசாயிகளுக்கு எதிர்பார்த்த இலாபம் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (க-213)

# ஒன்றுகூடுவதை மக்கள் தவிர்க்கவும்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20

பொது மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று யாழ்ப் பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் சேனாரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண வைரஸ் காரணமாக, யாழ். மாவட்டத்தில் பல்வேறு வித மான முன்னேற்பாடுகள் பொலிஸ் தலைமையகத்தின் அனுசர ணையுடன் முன்னெடுக்கப்படவுள் ளன. தற்போது கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவி வருகி றது. இதற்கமைய ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக, பொலிஸ் மா அதிபர் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இணங்க, பொதுமக்கள் தங்களுடைய பாது காப்பைக் கருத்தில் கொண்டு வீடு களில் இருக்குமாறு வேண்டப்படு கின்றீர்கள்.

குறிப்பாக தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொள்வதன் மூலம் இந்த வைரஸ் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். கைகளைச் சுத்தமாக வைத்திருத்தல், முகக்கவ சங் களைப் பாவித்தல், ஒருவருக்கு ஒருவர் இடைவெளியைப் பின்பற் றுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் தாக்கத்தைக் கட்டுப்படுத்த லாம். குறிப்பாக பொது இடங்களில் ஒன்று கூடுதல், சமய வழிபாடுக ளில் ஈடுபடாமல் தவிர்த்துக் கொள் ளுதல் மற்றும் களியாட்ட நிகழ்வுக ளில் பங்கு கொள்ளாமை போன்ற செயற்பாடுகள் மூலம் இவற்றை நாங்கள் தடுத்துக் கொள்ள முடி யும். என்றார். (க-111)

# பொது மக்களுக்கான பல நலத் திட்டங்கள்



சாவகச்சேரி, மார்ச் 20

கொமர்ஷல் வங்கியின்100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நெல்லியடிக் கிளையால் பொது மக்களுக்கான பல நலத்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன.

நலத்திட்ட நிகழ்வுகள் கடந்தவாரம் கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளை முகாமையாளர் திருமதி. தபோ தினி கஜரூபன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக் கான இலவச மருத்துவ பரிசோதனைகள் இடம்பெற் றன.

உயர் இரத்த அழுத்தப் பரிசோதனை, கண் பரிசோ தனை, நீரிழிவுப் பரிசோதனை என்பன நடைபெற் றன. கொமர்ஷல் வங்கியினூடாக ஓய்வூதியர் இலகு கடன் வசதிகளை எப்படிப் பெற்றுக் கொள்ளலாம் மற்றும் பெற்ற கடனை மீளவும் எவ்வாறு இலகு வாகச் செலுத்தலாம் என்பவை தொடர்பாக கொமர் ஷல் வங்கியின் கடன் வழங்கல் பிரிவுப் பொறுப்பா ளர் எஸ். குசேலன் விளக்கமளித்தார்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு தென்னங் கன்று, பலாக்கன்று என்பன வழங்கப்பட்டன.

(ஜ-131)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய டிப்பர் கைப்பற்று

பளை, மார்ச் 20

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகு தியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்ந்து ஏற்றிய, டிப்பர் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

ரயில் திணைக்களத்துக்குச் சொந்தமான டிப்பரே மணல் ஏற்றப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மேலதிக விசா ரணையின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். டிப்பர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட் டுள்ளது. நீதிமன்றில் பாரப்படுத்துவதற்கான நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-6)

# வெலிகந்தை மருத்துவமனையில் கொரோனா விசேட சிகிச்சை பிரிவு



கொழும்பு, மார்ச் 20

கொரோனா சிறப்பு சிகிச்சை பிரிவொன்று வெலிகந்தை மருத்துவமனையில் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட் டுள்ள நோயாளர்களுக்கு, தடை யின்றி சிகிச்சை வழங்குவ தற்குத்தேவையான அனைத்து வசதிகளும் இந்தப் பிரிவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளானோர் அனுமதிக்கப்பட் டுள்ள அங்கொடை தொற்று நோயியல் பிரிவில், இட வசதிக ளுக்கு பற்றாக்குறை ஏற்படுமா யின், தொற்றுக்குள்ளானோ ருக்கு சிகிச்சை வழங்குவதற் காக வெலிகந்த ஆதார மருத் துவமனையில் இந்த சிறப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைக ளுக்காக வடக்கில் சில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று சுன்னா கம் இலங்கை மின்சார சபையின் மின்வ ழங்கல் கட்டுப்பாட்டு நிலையத் தின் மின்பொ றியிலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். நாளை சனிக்கிழமை காலை 8 மணி யிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதே சத்தில்** நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, மற வன்புலவு, தனங்களப்பு, அறுகு வெளி, லிங்ரெடி மிக்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், மாவடி ஒரு பகுதி, மூளாய், K.M.K. Sea Foods பிறைவேற் லிமிற் ரெட் ஆகிய இடங்களிலும், **கிளி நொச்சிப் பிரதேசத்தில்** அம்பகா மம், புழுமச்சி னாதிக்குளம் ஆகிய இடங்களிலும், **மன்னார் பிரதேசத் தில்** தள்ளாடி, சாந்திபுரம், தரவன் கோட்டை, கடலேரி வீதி, Sunny Villagey இல் இருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், தலைமன்னார் Palmyra house, கூல்மென் ஐஸ் தொழிற் சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கைப் போக் குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், அரசாங்க அதி பர் அலுவலகம், பூட் சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிர தேசங்களில் மின் தடைப்படும் என்று அறிவித்துள்ளார். (க)

# போக்குவரத்துத் தடை சீர்; மக்களின் சிரமம் நீங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பாசையூர் மீன்சந்தை மற்றும் மரக்கறிச் சந்தைப் பகுதி வீதிகள் மக்களின் போக்குவரத் துக்குத் தடையின்றி ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன. சந்தைப் பகுதிகளுக்கு வாகனத் தரிப்பிடம் இல்லாத காரணத் தால், வீதியோரங்களில் மக்கள் வாக னங்களை நிறுத்தி விட்டு, தமது தேவை களை நிறைவேற்றினர். அதனால் பாதசாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

பாசையூர் கடற்றொழில் சங்கம் வாக னங்களின் பாதுகாப்புக்காக தனியிடங் களை ஒழுங்கு செய்துள்ளது. வீதியோ ரங்களில் வாகனங்களை நிறுத்த வேண்டாம் எனவும் அறிவித்துள்ள னர். இதனால் வீதியால் பயணிப்போர் எதிர்கொண்ட சிரமங்களுக்குத் தீர்வு கிடைத்துள்ளது. சங்கத்தின் முன்மாதி ரியான செயற்பாட்டை பிரதேச மக்கள் பாராட்டியுள்ளனர். (க-69)

# கிறிஸ்தவ கூடுகைகளை தவிர்க்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20

அரச திணைக்களத்தின் அறிவுறுத் தலுக்கு அமைவாக, அனைத்து மக்களின் நலன் கருதி, மேலதிக கிறிஸ்தவ சிறப்புக் கூடுகைகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். கிறிஸ்தவ சபைகள், ஸ்தாபனங்க ளின் ஐக்கியம் அறிவித்துள்ளது. (க)

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு 800 கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு,மார்ச் 20

தேர்தல் நடவடிக்கைகளைக் கையாள்வதற்காக, தேர்தல் ஆணைக்கு முவுக்கு 800 கோடி ரூபா வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மா னித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில், அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரி வித்தார். அவர் மேலும் தெரிவித்தா வது:

நோய்நொடியிலிருந்து ஜனநாயகத் தைப் பாதுகாத்துக் கொள்ள வேண் டும். அதற்காக குறிப்பிட்ட காலப்பகு திக்குள் தேர்தல் நடத்தப்பட வேண் டும். அந்தப் பணிகளுக்காக தேர் தல் ஆணைக்குழுவுக்கு 800 கோடி ரூபா வழங்குவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. நாட்டில் மருந்துத் தட்டுப் பாடு ஏற்படாமல் இருப்பதற்காக, மருந்து விநியோகத்தர்களுக்கு நிலு வையாக உள்ள கொடுப்பனவை வழங்குவதற்கு ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள பொது விடுமுறை நீடிக்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் கொவிட் 19' விவகாரத்தைக் கையாளும் செயலணியே அறிவிப்பு விடுக்கும். அதேவேளை, தேர்தலை ஒத்திவைப்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழு வுக்கே இருக்கின்றது. என்றார். (க-44)

## எதிர்வரும் ஞாயிறு உபவாச, செப தினம்
### ஆயர் மன்றம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 20

எமது நாட்டையும், முழு உலகையும் அழித்து வருகின்ற கொரோனா வைரஸின் கொவிட்19 தொற்று நோயிலி ருந்து மக்களைக் காக்குமாறு இறைவனை வேண்டும் தினமாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையை அனுஷ்டிக்குமாறு இலங்கை கத்தோலிக்க ஆயர் மன் றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அனைத்து இறைமக்களும் அன்றைய தினத்தில், தமது இல்லங்களிலிருந்தவாறு தனியாகவோ, குடும்ப மாகவோ நம்பிக்கையோடு செபிக்கவும். யாழ். மறை மாவட்டம் முழுவதும் வாழும் குருக்கள், துறவியர், பொதுநிலை இறைமக்கள் அனைவரும் இந்த நாளை கருத்துடன் அனுஷ்டிக்கவும். திருப்புகழ் மாலை, வேதா கம வாசிப்பு, தியானம், திருச்செபமாலை, மன்றாட்டு மாலைகள், இறை இரக்கச் செபம், திருச் சிலுவைப் பாதை, வியாகுலபிரசங்கம் போன்ற பக்திச் செயற்பா டுகளை அன்றைய தினத்தில் விசேடமாக மேற்கொள் ளவும். திருப்பலிகள், வழிபாடுகள் இல்லையே என்ற ஆதங்கம் இன்று பல இறைமக்களுக்கு உண்டு. இது ஒரு துரதிஷ்டமான நிலையாகும்.

ஏனெனில் திருப்பலிதான் எமது செப வாழ்வின் ஊற் றும் மையமுமாகும். ஆயினும், திருப்பலிகளில் நாம் தேடிச் செல்லுகின்ற நற்கருணை ஆண்டவரை இன் றைய நாள்களில் நாம் எமது இல்லங்களில் இருந்த வாறே ஆன்மீக ரீதியாகப் பெறமுடியும் என்பதை நாம் மறத்தலாகாது. நிலைமைகள் வழமைக்குத் திரும்பும் போது எவ்விதத்திலும் குறைவுபடாத விசுவாசத்தோடு ஆலயங்களுக்குச் சென்று திருப்பலிகளில் பங்குபற்று வோம்.-என்றுள்ளது. (க)

## ப.தெ.வ.அ. கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் தொழில் பாதிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 20

கொரோனா வைரஸ் தொற்றால், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களின் தொழில்நடவடிக்கைகள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளன. இதனால் அங்கத்தவர் களின் வாழ்வாதாரமும் பாதிப்படைந் துள்ளது என்று வலிகாமம் கொத்தணி யின் தலைவர் எஸ். செல்வராசா தெரி வித்தார். அதனால் அங்கத்தவர்களின் நலன்கருதி அவர்களுக்கு நிவாரணங் களைப் பெற்றுக் கொடுக்க ஆலோசிக் கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித் தார். (க-17)

## மட்டக்களப்பு மாநகர சபை தொற்று நீக்கி விசிறுகின்றது

மட்டக்களப்பு, மார்ச்20

கொரோனா வைரஸ் பரவ லைத் தடுக்க மட்டக்களப்பு மாநகர சபை தொற்று நீக்கி விசிறல் நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளது.

அரச நிறுவனங்களில் மக் கள் கைகளால் தொட்டுப் பயன்படுத்தக்கூடிய இடங் கள், பொருள்கள், அரச வாகனங்கள் மற்றும் பொது இடங்கள் போன்றவற்றில் இந்தத்தொற்றுநீக்கிவிசிறல் நடவடிக்கை மட்டக்களப்பு மாநகர சபை பிரதி மேயர் கே.சத்தியசீலன் மேற்பார்வையில் மாநகர சபை சுகாதாரத் தொழிலா ளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (த-46)



## வர்த்தகர்களுக்கு கடும் எச்சரிக்கை

முல்லைத்தீவு,மார்ச் 20

நாட்டில் தற்போது கொரோனா தொற்று பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், வர்த்தகர்கள் பொருள் களை அதிக விலைக்கு விற்பனை செய்தால், சட் டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றைத் தடுப்பது தொடர்பான கலந்துரையாடல், மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பருப்பின் விலை 65 ரூபாவாகவும், மீன் ரின்னின் விலை 100 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. அதனைவிட அத்தியாவசியப் பொருள்களின் விலைகளிலும் மாற்றமில்லை. அவற்றை மீறி அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய் யும் வர்த்தகர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர். இது தொடர்பாக நுகர்வோர் அதிகார சபைக்கு அறி வித்துள்ளோம். அதற்கான நடவடிக்கைகளை அவர்கள் எடுப்பர். அதேபோன்று கூட்டுறவுத் திணைக்களத்தினருக்கு அத்தியாவசியப் பொருள் களை. எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் அறிவித்தல்களை வழங்கவுள்ளோம். என்றார். (க-246)



பரந்தனைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடைய ஒருவரின் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கையை ஊக்குவிக்கும் வகையில் புன்னகை அமைப்பின் இணைப்பாளரால் துவிச்சக்கர வண்டி மற்றும் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-222)

## கடற்கரையில் தங்கிய 66 பேர் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

கிளிநொச்சியில் கடற்கரையோரம் பொழுதுபோக்குக்காக சில நாள்களாகத் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தவர்கள் பிர தேச செயலகத்தினரால் வெளியேற்றப் பட்டனர். யாழ்ப்பாணம், குருநகர் மற் றும் பாசையூரைச் சேர்ந்த 66 பேர் அங்கு தங்கியிருந்தபோதே வெளியேற் றப்பட்டனர்.

பாலைதீவு திருவிழாவைத் தொடர்ந்து கடற்கரையோரம் கொட்டகை அமைத்து கடந்த 10 தினங்களாக சிலர் தங்கியிருக் கின்றனர் என்று மீனவர்களுக்குத் தக வல் கிடைத்தது.

அது கிராம அலுவலரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

கிராம அலுவலர் அந்தப்பகுதிக்கு நேரில் சென்று நிலைமையை அவதானித்தார். அந்தக் குடும்பங்கள் இந்தியாவிலி ருந்து தப்பி வந்தவர்களா என்றும் ஆராய்ந்தார்.

எனினும், அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், விடுமுறைகாலக் கொண்டாட்டமாகவே ஒன்று கூடியுள்ள னர் என்ற விவரத்தை உறுதி செய்து பிரதேச செயலருக்கு அறிக்கையிட்டார்.

அதை ஆராய்ந்த பிரதேச செயலர் மாவட்டச் செயலர் மற்றும் பொலிஸாரின் ஆலோசனையுடன் அவர்களை வெளி யேற்றினார். (த-105)

## இரத்தத்துக்குத் தட்டுப்பாடு கொடையாளருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 20

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, தேசிய ரீதி யில், ஒழுங்கு செய்யப்பட்ட இரத்த தான முகாம்கள் இடைநிறுத்தப்பட் டுள்ளன.

இதனால் நாட்டிலுள்ள அனைத்து இரத்த வங்கிகளிலும் இரத்தத்துக் குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆகவே இந்த இக்கட்டான நேரத்தில் உங்களின் ஒத்துழைப்பு இன்றிய மையாததாகும். இரத்த வங்கியின் இரத்த தேவையைப் பூர்த்தி செய்ய சுகாதார அமைச்சால் கூறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, நேரடியாக இரத்த வங்கிகளுக்குச் சமூகமளித்து உங்கள் உதிரத்தால் உயிர்களைக் காப்பாற்றுங்கள் என்று கொடையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 9 மணி முதல் 3 மணி வரை தெல்லிப்பழை இரத்த வங்கியில் விரும்பியவர்கள் இரத்த தானம் செய்யலாம்.

அதற்கான போக்குவரத்து ஏற்பாடு கள் கரும்பனை தமிழ்மன்றம் சன சமூக நிலையக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்படும் என்று அறி விக்கப்பட்டுள்ளது. (க-222)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
(சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)

## உதயன் பயிற்சிப் பரீட்சை - 2


பகுதி- I

ஆக்கம்: த.தயானந்தன்
அதிபர், யா/ கீரிமலை நகுலேஸ்வரா ம.வி.


நேரம்: 45 நிமிடங்கள். பெயர்: ............................... . பாடசாலை: ..........................................................

**தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப 01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1,2 ஆகிய வினாக்களில் உள்ள அடைப்புக்களில் கூட்டத்துடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவை தெரிவு செய்க.


1. 
..............





1.  2.  3. 

2. 
..............

1.  2.  3. 



3, 4 ஆகிய வினாக்களில் முதல் உருவுக்குச் சமனான உருவைத் தெரிவு செய்க.

03.  1.  2.  3. 


04.  1.  2.  3. 


05) பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தை தெரிவு செய்க.
1) பழம் நளுவிப் பாலும் விழுந்தது.
2)பழம் நழுவிப் பாலுள் விழுந்தது.
3) பளம் நளுவிப் பாலுள் விழுந்தது.


06) இரு சோடி சமச்சீர்க் கோடுகளை மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவு செய்க.

1.  2.  3. 


வெற்றிடத்துக்குப் பொருத்தமான பெறுமானத்தைத் தெரிவு செய்க.

07. 












1. 25 2. 26 3. 31




08. 





1. 2 2.3 3. 4

அடுத்து வரும் உருவை தெரிவு செய்க.


09.   

1.  2.  3. 

10.   

1.  2.  3. 

11) இவ்வுருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன?



1. 16 2. 13 3, 18

கீறிட்ட இடத்துக்கு பொருத்தமான சொல்லைத்தெரிவு செய்க.

12) நூலகத்துக்கு நூல்கள் போன்று பேருந்துக்கு.....................
1. வியாபாரிகள் 2.நடத்துனர் 3. பயணிகள்

13) குற்றத்துக்கு கண்டிப்பு எனின் வெற்றிக்கு
1. தோல்வி 2. பாராட்டு 3. ஏளனம்

**14, 15 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்தை நன்கு விவரிக்கும் விடையை தெரிவு செய்க.**

14) “வெள்ளம் வருமுன்னே அணைகோல வேண்டும்”
1. அணைக்கட்டினை நன்கு அகலமாகக் கட்ட வேண்டும்.
2. பின்வரப்போகும் அபாயத்தை முன் யோசனையோடு தடுக்க முயல வேண்டும்.
3. வெள்ளம் ஓடுவதற்கு கால்வாயை நன்கு துப்புரவாக்க வேண்டும்.

15) “ஆகுங்காய் பிஞ்சிலே தெரியும்.”
1. ஒருவரின் பிற்காலச் சிறப்பை அவரின் இளமைக்காலத்தே தெரிந்து கொள்ளலாம்.
2. காய் முதிர்ந்து பழமாகும் என்பது பிஞ்சாக இருக்கும் போதே அறியலாம்.
3. ஒருவரின் குணத்தை அறிய அவரின் ஒரு செயலே போதும்.

16) விழாக்களின் கால எல்லைகள் அதிகரித்து செல்லும் ஒழுங்கில் அமைந்த விடை எது?
1. பொன்விழா, பவளவிழா, வைரவிழா, அமுதவிழா
2. வெள்ளிவிழா, அமுதவிழா, மணிவிழா, பொன்விழா
3. வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா, பவளவிழா

17) நிலா தோன்றாத ஒருநாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தை பார்க்கும் போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக்கூட்டத்தை காணலாம் என பூஜா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது. இதற்கு காரணம்
1. இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியை பார்க்க முடியாமை

2. இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை
3. கிளிகள் கூட்டமாய் பறந்து செல்லாமை

18) வினோதினியின் வீடு குமுதாவின் வீட்டுக்கு கிழக்கே உள்ளது. குமுதாவின் வீடு சுகந்தியின் வீட்டுக்கு கிழக்கே உள்ளது. ஆகவே கூறக்கூடியது.
1. வினோதினியின் வீடு சுகந்தியின் வீட்டுக்கு கிழக்கே உள்ளது.
2. சுகந்தியின் வீடு குமுதாவின் வீட்டிலும் பார்க்க வினோதினியின் வீட்டிற்கு அண்மையில் உள்ளது.
3. சுகந்தியின் வீடு வினோதினியின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது.

19) இன்று காலைக்கூட்டத்தின் போது வகுப்பு மாணவன் ஒருவன் மயக்க மடைந்து நிலத்தில் விழுந்து விட்டான் பின்வரும் எக்காரணத்தால் மயக்கம் ஏற்பட்டிருக்கலாம்?
1. நேற்று மாலைவரை விளையாடியமை
2. கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் அவனுக்கு விருப்பமில்லாது இருந்தமை.
3. அவன் காலை உணவை உண்ணாமல் பாடசாலைக்கு வந்தமை

20) 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்களை எழுதும்போது இலக்கம் 1 எத்தனை தடவை எழுதப்படும்?
1. 19 2. 21 3. 20

21) பின்வரும் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தினால் ஒரு சம்பவம் அமையும். அவற்றின் சரியான ஒழுங்கைக் காட்டும் விடை யாது?
A) ஓடிச்சென்று வெளியே பார்த்தேன்
B) கடிதத்தை வாங்கிப் பிரித்து பார்த்தேன்
C) டிங் டிங் மணிச்சத்தம் கேட்டது
D) அம்மாவிடம் வாசித்த விடயங்களைக் கூறினேன்
E) தபாற்காரன் கடிதத்துடன் நின்றான்.
1. CBAED 2.) CADEB 3. CAEBD

22) இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.
1. 4H 63TMW - 4H63TMM
2. 4H3TM6W - 4H63TMW
3. 4H63TMW - 4H63TMW

ரூ.543.20 ஐ குறியீடுகளில் R.TMW.NP எனக் காட்டலாம் எனில்

23. ரூ.50243.55 ஐ எவ்வாறு காட்டலாம்?
1. R.MNPWM.TT 2. R.TPNMW.TT 3.R.PNMWT.TT

25. R.MWTP.MN .னால் காட்டப்படுவது யாது?
1. ரூ. 4350.42 2. ரூ. 3540.42 3. ரூ.4530.24

24. கீழ் உள்ள உருக்களில் முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றம் இன்றித் தோன்றுவது எது?




கீழேயுள்ள தொடர்பினை அவதானித்து விடையினை தெரிவு செய்க.


✱ + ✱ + ✱ = 12
✱ X # = 20
# - ✡ = 2

26. ✱ + ✡ இன் பெறுமானம் யாது?
1. 12 2.7 3. 9

27. ✡ X ✱ இன் பெறுமானம் யாது?
1. 20 2. 12. 3.15

28) புத்தகம் ஒன்றின் 1/3 பகுதியை வாசித்த ஒருவர் இன்னும் 180 பக்கங்களை வாசிக்க வேண்டும் என்கிறார். எனவே அப்புத்தகத்தில் உள்ள மொத்த பக்கங்கள் எத்தனை?
1. 260 2.240 3. 270

29) தாவரம், மரம், இலுப்பை என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டு வதற்கு பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் p இனால் காட்டப்படுவது யாது?
1. தாவரம்
2. மரம்
3. இலுப்பை




30) ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை
1. உயிரும் கருத்தும்
2.எழுத்தும் கருத்தும்
3) மெய்யும், உயிர்க்குறியும்

31) 400 இன் அரைவாசியின் 1/4 உடன் 4ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண் யாது?
1. 204 2. 104 3.54

32) பெட்டியொன்றில் 9 மஞ்சள் நிறப்பந்துகளும், 7 மஞ்சள் நிறமல்லாத பந்துகளும் 4 சிவப்பு நிறப்பந்து களும் உள்ளன அதன்படி அப்பெட்டியில் உள்ள மொத்தப் பந்துகள் எத்தனை?
1. 16 2. 20 3. 13

33) புகையிரதமொன்று 1 மணித்தியாலத்தில் 88km எனும் மாறா வேகத்தில் சென்றால் அப்புகையிரதம் 15 நிமிடத்தில் எத்தனை கிலோமீற்றர் தூரம் சென்றிருக்கும்?
1. 22km 2. 44km 3. 11km

34) தொடரூந்து ஒன்றின் நீளம் 100m ஆகும். பாலமொன்றின் நீளம் 50m ஆகும். தொடரூந்து அப்பாலத்தை முழுமையாகக் கடப்பதற்குப் பயணிக்க வேண்டிய தூரம் எவ்வளவு?
1. 100m 2. 150M 3. 50M

35) ஒரு இரும்புக்கம்பியினை 9 துண்டுகளாக வெட்ட வேண்டும். ஒருதடவை வெட்டுவதற்கு ரூபாய் 30 கொடுக்க வேண்டும் எனில் வெட்டிய துண்டுகளுக்கு எவ்வளவு கூலி கொடுக்க வேண்டும்?
1. ரூ. 270 2. ரூ.240 3.ரூ.300

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றை மூன்றை ஒரு கூட்டமாகவும், இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது எது?


36) வண்ண, கோல, சின்னச்சின்ன , தேடித்தேடி, மெல்ல, சிரித்துச்சிரித்து.
1. கோல 2. தேடித்தேடி 3.மெல்ல

37) வசந்தம், இனிப்பு, வெண்மை, மாரி, ஆடல், நீளம்
1. இனிப்பு 2. ஆடல் 3. வசந்தம்

38) சிறந்த பேச்சாளர் ஒருவர் ஒலிவாங்கி ஒன்றின் முன் 45 நிமிடங்கள் நின்று உரையாற்றுகின்றார். அவ்வுரையினை ஒரே இடத்தில் வைக்கப்பட்ட மூன்று ஒலிவாங்கிகளின் முன் உரையாற்றுவாராயின் எடுக்கும் நேரம் எவ்வளவு?
1. 135 நிமிடங்கள் 2.45 நிமிடங்கள் 3. 48 நிமிடங்கள்

39) முறையே 10 நிமிட, 12 நிமிட, 15 நிமிட இடைவேளைக்கு ஒருமுறை ஒலிக்கும் மூன்று மின்மணிகள் இருக்கின்றன. மு.ப 8 மணிக்கு மூன்று மின்மணிகளும், ஒருமித்து ஒலித்தால் அடுத்து எப்போது மூன்று மணிகளும் ஒருமித்து ஒலிக்கும்?
1. மு.ப 8.50 மணி 2. மு.ப 8.45 மணி 3. மு.ப 9.00 மணி

40) ஒன்றுக்கொன்று சமனான இரண்டு சதுரங்களால் ஆனவுரு அருகே உள்ளது. முழு உருவத்தினதும் சுற்றளவு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்?
1. 6 2. 4 3. 3



பயிற்சி 1 - I, II இற்கான விடைகள் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியாகும்.

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வந்து கொண்டிருக்கும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# 3 அடி தூரத்தில் விலகி இருங்கள்!

## சமுதாய மருத்துவ நிபுணர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 20

கொரோனா நோயாளி இருமும்போது, தும்மும்போது இந்த நோய்க்கிருமிகள் வெளியேறுகின்றமையால் கொரோனா நோயாளி முகக்கவசம் அணிவது கட்டாயம். நோயாளி அல்லது அவ்வாறு சந்தேகிக்கப்படுபவருடன் நேரடியாக 3 அடிக்குட்பட்ட தூரத்தில் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்பவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணியவேண்டும்.

இவ்வாறு, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் சமுதாய மருத்துவ நிபுணர் இ. கேசவன் தெரிவித்துள்ளார்.

இது பற்றி பணியகம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தற்பொழுது கொரோனா நோய் பரவி வருவதால் பொதுமக்கள் முகக் கவசத்தை வாங்குவதற்குத் தேடித் திரிவதனை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

கொரோனா நோயாளியை அல்லது அவ்வாறு சந்தேகிக்கப்படுபவரை பராமரிக்கும் மருத்துவர், தாதிமார் மற்றும் சுகாதார சேவை சம்பந்தப்பட்டவர்கள் முகக்கவசம் அணிதல் வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**உமிழ்நீர்**

நோயாளியின் உமிழ்நீர் துகள்கள் மூலமாக கொரோனா பரவும். உமிழ்நீர் துகள்கள் பெரும்பாலும் நீண்டதூரம் பயணிக்காது. எனவே நோயாளியிடமிருந்து 4 அடிக்கு அப்பால் இருப்பவர்கள் முகக் கவசம் அணியவேண்டிய அவசியம் கிடையாது.

முகக்கவசம் அணிவோரும், அணியத் தேவை இல்லாதோரும் கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டுக் கழுவுதல் அத்தியாவசியமாகும் என்று அதில் அறிவுறுத்தப் பட்டுள்ளது. (த)

# உலக மக்கள் நலம்பெற வேண்டி நயினாதீவில் மகாருத்திரயாகம்

மன்னார், மார்ச் 20

உலகத்தையே ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து உலக மக்கள் நலம்பெற வேண்டி நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் மகாருத்திரயாகம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 2,3 ஆம் திகதிகளில் ஆலய பிரதம நித்திய சிவாச்சாரியார்களால் சிறப்பாக இந்த யாகம் நிகழ்த்தப் படவுள்ளதாக அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

உலக மக்கள் நலன்பெற வேண்டி பக்தர்கள் தங்கள் இல்லங்களில் இருந்தே இறைவனை பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆலய நித்திய பூசைகளைத் தவிர அடியார்களின் நேர்த்திகள். நாகசாந்தி நாகப்பிரதிஷ்டை, சங்காபிஷேகங்கள் ஏனைய அபிஷேகங்கள் யாவும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் ஆலயத்தில் தினந்தோறும் நடைபெறும் அன்னதானமும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன என்று ஆலய அறங்காவலர் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தரமான சேவைகளை வழங்குவதற்கு சமுர்த்தி அலுவலர்கள் முன்வர வேண்டும்

## சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் வேண்டுகோள்

ஏழாலை, மார்ச் 20

நாட்டில் 'கொரோனா வைரஸ்' பரவுவதை தடுப்பதற்கு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் தங்களது சேவைகளை ஆற்ற முன்வரவேண்டும் என்று சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் ஆர்.பீ.பீ. திலகசிறி அறிவித்துள்ளார்.

"மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் தடைப்படாத வகையில் இயன்றளவு தரமான சேவையை வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்கிறது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான கடமைப்பாடு எமக்கு உள்ளது.

சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி வங்கிகளினூடாக முத்திரைக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இதன்போது பயனாளிகள் பெருமளவு கூடுவதை தவிர்ப்பதற்கு முகாமைத்துவ முறையொன்றை உருவாக்கி பின்பற்ற வேண்டும்.

வங்கி கொடுக்கல், வாங்கல்களின் போது வங்கி ஊழியர்களுக்கும். பொது மக்களுக்கும் சரியான பாதுகாப்பு முறை ஒன்றை ஏற்படுத்தல்வேண்டும்.

மேலும் சமுர்த்தி வங்கிகளுக்கு மக்கள் கூடி வருவதை குறைக்கும் பொருட்டு கடன் விண்ணப்பங்களை ஏற்றல். கடன் அளவீடு தொடர்பாக 2020 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை தண்டப் பணம் அறவிடாமல் தயவு காலம் ஒன்றை வழங்கவும்." இவ்வாறு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமையதிபதி பணிப்பாளர் நாயகம் ஆ.பீ. பீ. திலகசிறி சகல மாவட்ட பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் ஆகியோருக்கு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். (ஐ-39)

## கரவெட்டியில் முடங்கியது மத்தியஸ்தர் சபை

கரவெட்டி, மார்ச், 20

கொரோனா பாதிப்பு காரணமாக, பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், கரவெட்டி மத்தியஸ்தர் சபையும் இயங்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பாதுகாப்பு காரணமாக கரவெட்டி மத்தியஸ்தர் சபை 2020.03.22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறமாட்டாது. அன்றைய தினப் பிணக்குகள், 2020. 03.29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என கரவெட்டி மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (ப-38)

## அனைத்து பரீட்சைகளும் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடத்துவதற்குதிட்டமிடப்பட்டிருந்த அனைத்து சுகாதார சேவைகள் பரீட்சைகளும்பிற்போடப்பட்டுள்ளன. நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமை காரணமாக இப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. இந்தப் பரீட்சைகள் நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் அமைச்சின் பரீட்சைகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஏ.எல்.பஸ் நாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

## வீதி விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 20

இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் அவற்றில் பயணித்த பெண் உட்பட இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி பகுதியில் இடம் பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த சாவகச்சேரி மடத்தடியைச் சேர்ந்த 19 வயது பெண்ணும், பளை பெரியபளையைச் சேர்ந்த 46 வயது குடும்பத் தலைவரும் காயமடைந்தனர். இவர்கள் இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். (ஐ-9)



# செஞ்சிலுவை சங்கத்தாலும் கொரோனா விழிப்புணர்வு

கிளிநொச்சி, மார்ச் 20

கொரோனா வைரஸ் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின், கிளிநொச்சி மாவட்டக் கிளையினரால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி, நகரப் பிரதேசங்களில் அவர்கள் இந்தச் செயற்பாட்டை மேற்கொண்டனர்.

கொரோனா தொடர்பான முதல் துண்டுப்பிரசுரம், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனுக்கு விநியோகிக்கப்பட்டு, விழிப்புணர்வு ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், பொதுமக்கள் அதிகமாகக் காணப்படுகின்ற இடங்களில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

மேலதிகமாக கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுப் பிரசார செயற்பாட்டை மேற்கொள்ளவும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது.

துண்டுப்பிரசுரம் வழங்கும் செயற்பாட்டில், இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைவர், செயலாளர், பொருளாளர், கிளை நிறைவேற்று அலுவலர், தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-222)



# மன்னார் பொது இடங்களில் 'கொரோனா' விழிப்புணர்வு

மன்னார், மார்ச் 20

மன்னாரில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பாக இருப்பது எவ்வாறு என்பது பற்றிய விழிப்புணர்வுப் பதாகைகள் காட்சிப்படுத்தப் பட்டு வருகின்றன.

மன்னாரில் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து தரிப்பிடம், சந்தை, மருத்துவமனை, கடைத் தெருக்கள் ஆகிய இடங்களில் இவை காட்சிப்படுத்தப் படுகின்றன.

மன்னார் றோட்டரி கழகத்தினர் நேற்றுமுன்தினம் மாலை இந்தப் பணியில் ஈடுபட்டனர். (த-213)

## வாக்களிப்பு நேரம் இம்முறையும் நீடிப்பு: ஆணைக்குழுவே முடிவு

### தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் அதிகளவு கட்சிகள். சுயேச்சைக்குழுக்கள் வேட்புமனுத் தாக்கல் செய்கின்றமை காரணமாக வாக்குச்சீட்டின் நீளம் அதிகரிக்கும். எனவே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்டதைப் போன்று வாக்களிப்பு நேரம் நீடிக்கப்படுவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவே முடிவு எடுக்கும் என்று யாழ்ப்பாண மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிட்டமை காரணமாக வாக்குச் சீட்டின் நீளம் அதிகமானது. அதனால் வாக்களிப்பு நேரம் நீடிக்கப்பட்டது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் அதிகளவு கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றமை காரணமாக வாக்குச் சீட்டின் நீளம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே ஜனாதிபதித் தேர்தல் போன்று வாக்களிப்பு நேரம் நீடிக்கப்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த தெரிவத்தாட்சி அலுவலர், அது தொடர்பான முடிவை தேர்தல்கள் ஆணைக்குழுவே எடுக்கும் என்றார்.

மேலும், தேர்தல் விதிமுறைகளை மீறி ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை அகற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் உரிய முறையில் முன்னெடுக்கப்படும்- என்றார். (ஒ,5)

# குறைவான ஆள்களுடன் நிகழ்வுகளை நடத்துங்கள்!

## வடக்கு ஆளுநர் செயலகம் அறிவிப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 20*

மக்கள் ஒன்று கூடுவதால் கொரோனா வைரஸின் பரம்பல் அதிகரிக்கலாம் என்று எச்சரிக்கப்பட்டதை தொடர்ந்து தேசிய அளவில் மக்கள் ஒன்றுகூடல்களை முற்றாகத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கின்ற அதேவேளை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா நோய் தொற்று தொடர்பாக வடமாகாண ஆளுநர் செயலகம் பொதுமக்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

திருமண வைபவங்கள் மற்றும் குடும்ப நிகழ்வுகளை நடத்துவதாயின் அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு முன்னறிவித்தல் வழங்கி அவர்களின் ஆலோசனைகளை அறிவுறுத்தல்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

மக்களின் எண்ணிக்கையை பெருமளவில் குறைத்து குறைந்த எண்ணிக்கையானவர்களுடன் நிகழ்வுகளை நடத்துவதனையும் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதனையும் இவற்றுக்கு ஏற்பாடு செய்பவர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும்

தேசிய அளவிலான ஏற்பாடுகளுக்கிணங்க அடுத்து வரும் இரு வார காலபகுதிக்கு ஆலயங்களில் நடைபெறும் அன்னதான வைபவங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடும் சமய வைபவங்கள் எதனையும் மேற்கொள்ளாது இயன்றவரை தவிர்ப்பதை ஆலய நிர்வாக சபையினர் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கால பகுதிகளில் ஆலயங்களில் வருடாந்த திருவிழா மற்றும் முக்கிய சமய நிகழ்வுகள் எதனையும் நடத்த வேண்டி இருப்பின் அதுகுறித்து பொது சுகாதார மருத்துவ அதிகாரி, கிராம அலுவலர் மற்றும் உரிய பிரிவுக்கு பொறுப்புடைய பொலிஸ் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு ஆலோசனை பெற்று அதற்கமைவாக இதனை மேற்கொள்ளல். அவசியம் ஏற்படின் மிகவும் குறைந்த எண்ணிக்கையான மக்களுடன் இந்தச் சமய நிகழ்வுகளை மேற்கொள்வதனை ஆலய நிர்வாக சபையினர் கவனிக்க வேண்டும்.

கொரோனா அச்சுறுத்தல் நீடிக்கும் வரை இயன்றவரை கடைப்பிடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் நோய் தீவிரத்தன்மையை எல்லோரும் நன்கறிந்து வடமாகாணத்தையும் பாதுகாக்க அதாவது வருமுன் காக்க எல்லோரும் பொறுப்புணர்வுடனும், சுய ஒழுக்கத்துடனும் சூழ்நிலைக்கேற்ப ஆரோக்கியமான தற்பாதுகாப்பு பழக்க வழக்கங்களுடனும், சமூகப் பொறுப்புடைய நடைமுறைகளுடனும் நடந்துகொள்ள வேண்டும் எனவும் வடமாகாண ஆளுநர் செயலகம் அனைவருக்கும் அறிவுறுத்தியுள்ளது. (ஒ,5)

## தோட்டத் தொழிலாளருக்கு மானியங்கள் வழங்கவும்

### இராதாகிருஷ்ணன் கோரிக்கை

"கொரோனா" வைரஸ் அச்சுறுத்தலால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மானிய அடிப்படையில் பொருள்களை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கம்பனிகளும் முற்கொடுப்பனவை வழங்கவேண்டும்." என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் கோரிக்கை விடுத்தார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை சடுதியாகக் குறைவடைந்துள்ளது. இதனால் எல்லா பொருள்களின் விலைகளும் குறைவடைந்து வருகின்றன.

அரசு பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. கொரோனா வைரஸ் அச்சுறுத்தலால் வேலை வாய்ப்பு குறைவடைந்து, பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, அவர்களுக்கு மானிய அடிப்படையில் உணவுப்பொருள்களை வழங்க வேண்டும். அதேபோல் கம்பனிகளுடன் பேச்சு நடத்தி முற்கொடுப்பனவு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கம்பனிகளும் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

ஆட்சி அதிகாரம் இல்லாவிட்டாலும், மக்களின் மனத்தில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இடம் பிடித்துவிட்டது. எனவே, பொதுத்தேர்தலில் அவர் தலைமையில் வெற்றி பெறுவோம்."- என்றார். (கு)

## உலக மக்கள் நலம்பெற வேண்டி திருக்கேதீச்சரத்தில் மகாயாகம்

மன்னார், மார்ச் 20

உலகத்தையே ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து உலக மக்கள் நலம் பெற வேண்டி மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தில் மகாயாகம் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை மகாயாகம் நடைபெறவுள்ளதாக ஆலய திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர்.

உலக மக்கள் நலன்பெற வேண்டி பக்தர்கள் தங்கள் இல்லங்களில் இருந்தே இறைவனை பிராத்திக்கும்படி ஆலய திருப்பணிச் சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-60)

## கொரோனா வைரஸ்; குடாநாடெங்கும் முன்னெச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் சுகாதாரப் பிரிவினர் ஒலிபெருக்கி மூலம் இந்த அறிவித்தல்களை வழங்கினர். கொரோனா தொடர்பில் மக்கள் எவ்வாறான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கையாள வேண்டும் என்பது தொடர்பில் அவர்கள் தெளிபடுத்தினர். பொது விடுமுறைதின நாள்களிலும், சுகாதாரப் பிரிவினர் சகல இடங்களிலும் இந்த அறிவிப்பை மேற்கொண்டனர். (பு-17)

## ஐக்கிய மக்கள் சக்தியே நுவரெலியாவில் வெல்லும்

### திகாம்பரம் நம்பிக்கை

நுவரெலியா, மார்ச் 20

நுவரெலியா மாவட்டத்தில் வாழும் அனைத்து இன மக்களும் இம்முறை சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கே வாக்களிப்பார்கள். கடந்த முறைபோல் இம்முறையும் மாவட்டத்தில் எமது அணியே வெற்றி நடைபோடும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

பொதுத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலின் பின்னர் நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;


"நுவ்ரெலியா மாவட்டத்தில் தொலைபேசிச் சின்னத்தின் கீழ் போட்டியிடும் எமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலின்போது இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப்பெற்று இம்மாவட்டத்தில் சஜித் பிரேமதாச வெற்றி பெற்றார். எனவே, பொதுத் தேர்தலிலும் நுவரெலியா மாவட்டத்தில் எமது வெற்றி தொடரும். தமிழ்ப் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்துவிட்டனர். எனவே, வாக்குகளைச் சிதறடிப்பதற்காக சிறு கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுக்கு, மக்கள் வாக்களிக்கமாட்டார்கள். அதேவேளை, நவீன் திஸாநாயக்க என்பவர் எமது மக்களுக்கு துரோகியாவார். டீல்காரர்களே யானை சின்னத்தில் போட்டியிடுகின்றனர். தமிழ் மக்கள் மட்டுமல்ல இம்முறை சிங்கள மக்களும் அவர்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள். நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தோட்டப்பகுதியிலும் இது பரவினால் மோசமான நிலை ஏற்படும். எனவே, தேர்தலை ஒத்திவைக்குமாறு ஜனாதிபதி மற்றும் தேர்தல் ஆணையாளரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்"-என்றார். (பு-44)



## படப்பிடிப்புகள் அனைத்தும் ரத்து

# கொரோனாவால் முடங்கிய திரையுலகம்

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ், பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவிலும் இது பரவி இருக்கிறது. தமிழகத்தில் இருவருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கொரோனாவை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கல்லூரிகளை மூடி உள்ளது. தமிழ்நாடு முழுவதும் உள்ள 990 திரையரங்குகள் மூடப்பட்டு உள்ளன. நேற்று முதல் சினிமா படப்பிடிப்புகளும் ரத்து செய்யப்பட்டன. உள்ளூரிலும், வெளி மாநிலங்களிலும் 36 சினிமா படப்பிடிப்புகளும், 60 டி.வி சீரியல் படப்பிடிப்புகளும் பல்வேறு இடங்களில் நடந்து வந்தன. அவை அனைத்தும் நிறுத்தப்பட்டன. வெளியூர் படப்பிடிப்புகளில் பங்கேற்று நடித்து வந்த நடிகர், நடிகைகள் நாடு திரும்புகின்றனர். இதன்மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து வீட்டில் முடங்கி இருக்கிறார்கள். இதனால் சுமார் 200 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படும் என்று தமிழ் சினிமாவின் மூத்த தயாரிப்பாளர் ஒருவர் கூறினார். இந்த நிலை அடுத்த மாதமும் நீடித்தால் இந்த இழப்பு அதிகரிக்கும் என்று அச்சம் தெரிவித்துள்ளார்.






## twitter

mathimaran@mathimaran

கை கழுவியப் பிறகு அதே செல்போனைத் தானே கைக்கும் வாய்க்கும் பயன்படுத்துகிறோம்; செல்போனை எப்படி சுத்தப்படுத்துவது?

முகமூடி™@mugamoodi11

பெண்களை பேயுடன் ஒப்பிட்டால் கூட சிரித்துவிட்டு போய் விடுவார்கள்..!! ஆனால், இன்னொரு பெண்ணோடு ஒப்பிட்டால் உடனே பேயாக மாறி விடுகிறார்கள்..!!

இதயவன்@Vicky_stirring

அணு ஆயுதங்களும் கை கட்டி நிற்கிறது

கொரானோ கை கொட்டி சிரிக்கிறது..!!!

இதயவன்@Vicky_stirring


யாரும்


இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்யமே...

கொரோனா சொன்னது அதில் அர்த்தம் உள்ளது'




## நெருப்புடா நெருங்குடா!







### மாட்டு சாணம் கொரோனாவை நிறுத்த முடியும். எப்படி?

வெளியே செல்வதற்கு முன் உங்கள் இரு கைகளையும் மாட்டு சாணத்தில் நனைக்கவும். இதனால்

1) உங்கள் கண்கள், மூக்கு, காது அல்லது வாயைத் தொட மாட்டீர்கள்

2) யாரும் உங்களுடன் கைகுலுக்க மாட்டார்கள்

ஐயா,
"நான் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளேன், எனக்கு 20 நாள்களுக்கு ஊதிய விடுப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்...!!"
"இல்லையெனில் நான் எல்லா நாளும் தவறாமல் அலுவலகத்துக்கு வருவேன்..!!"





பேருந்து மூலம் கொரோனோ வைரஸ் மருந்து தெளிக்கும் காட்சி...!!!"



# பங்குனி மாத சிறப்பும் விரதமும்

தெய்வ திருமணங்கள் பலவும் நடந்தேறிய மாதம் பங்குனி மாதம். பார்வதி பரமேஸ்வரன், ஆண்டாள் ஸ்ரீரங்கநாதர், தெய்வானை முருகன் என தெய்வத் திருமணங்கள் அனைத்தும் பங்குனி மாதத்தில் வரும் உத்திர நட்சத்திர நாளில் நடந்துள்ளன என புராணங்கள் கூறுகின்றன. காமாட்சி அன்னை ஊசி முனையில் தவம் இருந்து ஏகாம்பரேஸ்வரரோடு ஐக்கியமானதும் இந்த பங்குனி மாதத்தில்தான்.

ஜோதிடத்தில் சந்திரனை தாயாகவும், சூரியனைத் தந்தை என்றும் உருவகப்படுத்துவார்கள். சந்திரனாகிய தாய், தந்தையாகிய சூரியனுக்கு உரிய நட்சத்திரமான உத்திரத்தில் சஞ்சரித்து பௌர்ணமியைத் தோற்றுவிப்பது பங்குனி மாதத்தில்.

கார்த்திகை மாதத்தைப் போலவே, அம்மையப்பனின் இணைவாக இந்த மாதமும் சிறப்புப் பெறுவதால் சைவ, வைணவ பேதமின்றி அனைத்து ஆலயங்களிலும் தெய்வத் திருமணங்கள் இந்த மாதத்தில் நடைபெறுகின்றன.

நவகிரகங்களின் தலைவனான சூரியன் தனது ஆசிரியரான குருவின் வீட்டில் அதாவது மீனத்தில் சஞ்சரிக்கும் மாதம் இது. ஆண்டு முழுவதும் தான் பெற்ற பயிற்சியை தனது ஆசிரியரிடம் செய்து காட்டி தெளிவு பெறுவதாகக் கொள்ளலாம். பங்குனியில் குருவின் வீட்டில் சஞ்சரித்து முழுமையாக பக்குவம் அடைந்து அடுத்துவரும் சித்திரை மாதத்தில், அதாவது மேஷ ராசியில் சூரியன் முழுமையான உச்ச பலத்தோடு ஒளி வீசுவார்.

உச்ச வலிமை பெறுவதற்கு முன்னதாக ஆசிரியரிடம் பயிற்சி பெற்று பக்குவப்பட வேண்டும் என்பதை இந்தப் பங்குனி மாதம் நமக்கு நன்றாக உணர்த்துகிறது.

அதே போன்று கணக்குத் தணிக்கையாளர் என்று நவகிரகங்களில் குரு பகவானைக் குறிப்பிடுவார்கள். அரசு அலுவலகங்கள், கருவூலங்கள், வங்கிகள் என சூரியன் சார்ந்த அனைத்துத் துறைகளும் கணக்குத் தணிக்கைக்கு உட்படுத்தப்படுவதும் இந்த மாதத்தில்தான் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் அரசன் முதல் ஆண்டி வரை நாம் அனைவரும் செய்யும் தவறுகளைத் திருத்திக் கொள்ளும் மாதமாக குரு பகவானின் ஆதிக்கம் நிறைந்த இந்த பங்குனி மாதம் விளங்குகிறது.



# கியூபா அரசு காட்டிய ‘மனித நேயம்’

பிற கரீபியன் நாடுகள் கொரோனா பாதித்த பயணிகள் அடங்கிய கப்பலை, அனுமதிக்க மறுத்த நிலையில், கியூபா தங்கள் நாட்டில் கப்பலை நிறுத்த அனுமதித்துள்ளது.

உலக மக்களின் உயிரை கொரோனா பறித்துக்கொண்டிருக்கிறது. சொந்த நாட்டு மக்களைக் கூட கொரோனா தாக்கியிருந்தால், அழைத்து வர உலக நாடுகள் தயக்கம் காட்டுகின்றன. ஆனால், கியூபா என்ற நாடு மட்டும் கொரோனா தாக்கிய மக்களைக் கருணையுடன் அணுகி, அரவணைத்துக்கொண்டுள்ளது. ஃபிடல் என்ற மாமனிதன் ஆட்சி செய்த தேசமான கியூபாவில் இதுவரை 4 பேரை மட்டுமே கொரோனா தொற்று தாக்கியுள்ளது.

இதற்கிடையே, பிரிட்டனைச் சேர்ந்த எம்.எஸ்.ப்ரீமர் என்ற கப்பல் 682 சுற்றுலாப் பயணிகள் மற்றும் 381 சிப்பந்திகளுடன் கரீபியன் கடலில் சென்றுகொண்டிருந்தது. அப்போது, கப்பலில் இருந்த 5 பேருக்குக் கொரோனா தொற்று தாக்கியிருப்பது தெரிய வந்தது. இதனால், கப்பலை நிறுத்த பல கரீபியன் நாடுகளிடம் கப்பல் நிர்வாகத்தின் சார்பில் அனுமதி கேட்கப்பட்டது. எந்த நாடும் அனுமதி அளிக்கவில்லை. இந்தநிலையில், கியூபா நாடு ப்ரீமர் கப்பலை தங்கள் நாட்டில் நிறுத்த அனுமதி அளித்துள்ளது. தொடர்ந்து, கியூபாவின் கட்டுப்பாட்டில் உள்ள பஹமாஸ் தீவு துறைமுகத்தில் கப்பல் நங்கூரமிட்டது. கப்பலில் இருந்த சுற்றுலாப்பயணிகள் சோதனைக்குப் பிறகு கியூபாவுக்குள் அனுமதிக்கப்பட்டனர். இந்தக் கப்பலில் இருந்தவர்களில் பெரும்பாலோனோர் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள்.

பிரிட்டன் அரசு கேட்டுக்கொண்டதையடுத்து, மனிதநேயத்தின் அடிப்படையில், கியூபா இந்த உதவியைச் செய்துள்ளது. “கப்பலில் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் நலனைக் கருத்தில்கொண்டும் உலகுக்கு விடுக்கப்பட்டுள்ள பொதுவான சவாலை எதிர்கொள்ள உலக நாடுகள் ஒற்றுமையுடன் இருக்கின்றமை அவசியம் என்ற அடிப்படையிலும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது” என கியூபாவின் வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

கப்பலில் பயணித்தவர்களில் கொரோனா பாதிப்பு இல்லாதவர்கள், மீண்டும் பிரிட்டனுக்கு விமானம் வழியாக அனுப்பப்படுவார்கள். நோய் தாக்கியவர்களுக்கு கியூபாவில் வைத்தே சிகிச்சையளிக்கப்படுகிறது.

## இயல்பு நிலைக்கு திரும்பும் சீனா

# ஒரு புதிய நோயாளி கூட அனுமதிக்கப்படவில்லை



சீனாவின் ஹுபே மாகாண தலைநகர் வுகானில் உள்ள ஓர் இறைச்சி சந்தையிலிருந்து முதன்முதலாகப் பரவியதாகக் கூறப்படும் கொரோனா வைரஸ் தற்போது மொத்த உலக நாடுகளுக்கும் பரவி பொது மக்களை அச்சுறுத்தி வருகிறது.

சீனாவில் மட்டும் 80,894 பேர் வைரஸால் பாதிக்கப்பட்டு 3,237 உயிரிழந்துள்ளனர். தற்போது சீனாவில் வைரஸின் நிலை சற்றே குறைந்துள்ளது. உயிரிழப்பவர்கள் மற்றும் புதிதாகப் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஒற்றை இலக்கமாக வந்துள்ளது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காகவே அங்கு தற்காலிகமாக உருவாக்கப்பட்ட அனைத்து மருத்துவமனைகளும் மூடப்பட்டுவிட்டன. கடந்த இரண்டு மாதங்களாகத் தங்கள் குடும்பங்களை விடுத்து 24 மணி நேரமும் பணியிலிருந்த மருத்துவ பணியாளர்கள் வீடு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் முதன்முதலில் கண்டறியப்பட்ட மற்றும் அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணமாகக் கருதப்படும் ஹுபேயில் ஒரு புதிய வைரஸ் நோயாளி கூட அனுமதிக்கப்படவில்லை என்று அந்நாட்டின் தேசிய சுகாதார ஆணைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

“கொரோனா வைரஸால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாகாணம் ஹுபே. இங்கு உள்ள வுகான் நகரத்துக்கு வெளியே தொடர்ச்சியாகக் கடந்த 13 நாள்களாக முதன்முறையாக எந்தப் புதிய வைரஸ் நோயாளியும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை. இந்த நாள்களில் சுமார் 896 நோயாளிகள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்போது அங்கு மொத்தமாக 7,336 நோயாளிகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 2,077 பேர் சற்று கடுமையான நிலையிலும் 503 பேர் மிகக் கடுமையான நிலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த ஒரு மாதமாக ஹுபே மருத்துவமனைகளில் வேலை செய்த பணியாளர்கள் மெதுவாக வீடு திரும்பி வருகின்றனர்” என்று தெரிவித்துள்ளார்.


# நேர்வழி!



செழியனும், கார்த்திக்கும் நண்பர்கள். செழியன் கடுமையான உழைப் பாளி. மிகவும் நல்ல வன். ஆனால், கார்த் திக்கோ செழியனுக்கு நேர்மாறானவன். உழைக்க மாட்டான். சரி யான சோம்பேறி. அவ னுக்கு பல கெட்ட பழக் கங்களும் இருந்தன.
செழியன் தன் தந்தையி டம் சிறிது பணம் வாங்கி, பத்து கறவை மாடுகளை வாங்கி, பால் கறந்து வீடு வீடாக அந்தப் பாலை ஊற்றி, இரவும், பகலும் கண் விழித்துக் கடுமையாக உழைத்தான். விரை விலேயே அழகான மாளிகையை அவன் கட்டினான். இப்போது அவனிடம் நிறைய கறவைமாடுகள் இருந்தன. அவன் பால் வியாபாரத்தில் கொடிகட் டிப் பறந்தான்.
கார்த்திக்கும் தன் தந்தையிடம் பெரும் பணம் வாங்கினான். அவன் சோம் பேறி என்பதால், அந்தப் பணத்தை ஊதாரித்தனமாகச் செலவிட்டான். இதன்மூலம் அவனுக்கு பல தீய நண்பர்கள் கிடைத்தனர்.
கார்த்திக் தன்னுடைய பணத்தை அவர்களுக்குச் செலவழித்தான். விரை வில் அவன் ஓட்டாண்டி ஆனான். ஊர்மக்கள் அவனையும், அவனுடைய நண்பர்களையும் பழித்துப் பேசினர். மாறாக, செழியனை, கார்த்திக் முன் னரே வாயார புகழ்ந்தனர்.
“செழியனும் உன் நண்பன்தானே, அவன் எப்படி இருக்கிறான். பால் வியாபாரத்தில் அவன்தான் கொடிக்கட்டி பறக்கிறான். ஆனால் நீ, தீய நண்பர்களுடன் சேர்ந்து இப்படி சோம்பேறியாகவும், ஊதாரித் தனமாகவும் இருக்கிறாயே…” என்று ஊர்மக்கள் அவனை ஏளனம் செய்தனர்.
செழியன் மீது கார்த்திக்குக்கு பொறாமை ஏற்பட்டது. ஒரு காலத்தில் தன் னுடன் சுற்றிக் கொண்டிருந்த அவனை, எல்லாரும் இப்படிப் புகழ்கிறார்களே என்று.
“செழியனை ஊர்மக்கள் முன்பு அவமானப்படுத்த வேண்டும்” என்ற தீய எண்ணம் உதித்தது கார்த்திக்குக்கு.
“செழியன் ஊர்மக்களுக்கு விற்கும் பாலில் சரிபாதியாகத் தண்ணீரைக் கலக்குகிறான்” என்ற பொய்யான வதந்தியை தன்னுடைய நண்பர்கள் மூலம் ஊரில் பரப்பினான் கார்த்திக்.
“இதனால் ஊர்மக்கள் கோபமுற்று செழியனை அவமானப்படுத்துவர். அதைக் கண்டு சந்தோஷப்படலாம்” என்று நினைத்தான்.
ஆனால், கார்த்திக்கும் அவனுடைய நண்பர்களும் பரப்பிய பொய் வதந் தியை ஊர்மக்கள் நம்பவில்லை.
“செழியன் மிகவும் நல்லவன். நீ அவன் வளர்ச்சியைக் கண்டு பொறுக்கா மல் அவனைப் பற்றி பொய் வதந்தி பரப்புகிறாய்… இனிமேல் இப்படி செய்யாதே!” என்று கார்த்திக்கை கடுமையாக எச்சரித்தனர் ஊர்மக்கள்.
“தன் திட்டம் இப்படி நொறுங்கி விட்டதே…” என்று அவமானம் தாங்காமல், அந்த ஊரைவிட்டே ஓடிவிட்டான் கார்த்திக்.
நேர்மையாகப் பால் வியாபாரம் செய்து வந்த செழியன் தன் மனைவி, குழந்தைகளுடன் அந்த ஊரில் மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.

## வர்ணம் தீட்டுவோம்





## மாடுகள் ஏன் சிவப்பு நிறத்தைக் கண்டு மிரள்கின்றன?

மாடுகள் சிவப்பு நிறத்தைக் கண்டு மிரள்வதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ஜான்சன்? அப்படி ஒரு காட்சியை நீங்கள் பார்த்திருக்க வாய்ப்பில்லை. தமிழ்த் திரைப்படங்களில்தான் இதுபோன்ற தவறான காட்சிகள் எல்லாம் காண்பிக்கப்படுகின்றன. மாடுகளின் கண்களுக்குச் சிவப்பு, பச்சை என்று நிறங்களை அறிந்துகொள்ளும் சக்தி கிடையாது. வெளிர் நிறங்களைச் சாம்பல் வண்ணமாகவும் அடர் நிறங்களைக் கறுப்பு வண்ணமாகவும் மட்டுமே அறிய முடியும். மாடு மட்டுமல்ல, குதிரை, நாய், பூனை, புலி போன்ற விலங்குகளாலும் நிறங்களைப் பார்க்க முடியாது.





## பொம்மை

சின்ன சின்ன பொம்மையிது
சீருடைய பொம்மை
இது சீருடைய பொம்மை
என்தனது தாயாரு
எனக்கு தந்த பொம்மை
இது எனக்கு தந்த பொம்மை

சட்டையிட்டு, தொப்பியிட்டு
நிற்கும் இந்த பொம்மை
இது நிற்கும் இந்த பொம்மை
பொட்டும் வச்சி, பூவும் வச்சி
நிற்கும் இந்த பொம்மை
இது நிற்கும் இந்த பொம்மை

சாவிகொடுத்தா சிரிக்குமது
மணியடிச்சா தூங்கும்
இது மணியடிச்சா தூங்கும்
நல்ல நல்ல நாட்டியங்கள்
செய்யும் இந்த பொம்மை
இது செய்யும் இந்த பொம்மை

அம்மாதந்த பொம்மையிது
சும்மா தருவேனோ
நான் சும்மா தருவேனோ
சுற்றி சுற்றி வந்தாலுமே
இது சும்மாக்கிடைக்காது




## கூட்டத்தில் ஒன்று தனியாக இருக்கிறது; அது எது?



## புறாவைப் பற்றி தெரியுமா?

புறாக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கின்றன. ஆர்டிக், அண்டார்டிக், சஹாரா பாலைவனம் தவிர, உலகம் முழுவதும் வாழ்கின்றன. இந்தியா, மலேஷியா, ஆஸ்திரே லியாவில் அதிக அளவில் காணப்படுகின்றன. அந்தக் காலத்தில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குத் தகவல் களை அனுப்புவதற்குப் புறாக்க ளைப் பயன்படுத்தியிருக்கிறார் கள்.




புறாக்களை வைத்து பந்தயங்க ளும் நடத்தப்பட்டன. விதைகள், பழங்கள், தானியங்கள் போன் றவை இவற்றின் உணவு. கூட்டமாக வசிக்கக்கூடியவை. பெண் புறா முட்டைகளை இட்டு அடைகாக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்து குஞ்சுகளைக் கவனித்துக்கொள்கின்றன

### கொரோனா அச்சுறுத்தல்

# 50 கோடி மக்கள் வீடுகளில் முடங்கல்

பீஜிங், மார்ச் 20

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக உலக அளவில் 50 கோடி மக்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ளனர். சீனாவில் ஆரம்பமான கொரோனா வைரஸ் ஈரான், தென்கொரியா, இத்தாலி போன்ற நாடுகளில் அதிவேகமாகப் பரவி வருகிறது. தைவான், சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், ஐக்கிய அரபு அமீரகம், குவைத், கனடா, கம்போடியா, இந்தியா, பாகிஸ்தான் என உலகின் பெரும்பாலான நாடுகளில் கொரோனா பரவியுள்ளது.



சமீப நாள்களாக இத்தாலியில் கொரோனா அதி விரைவாகப் பரவி வருவதால், பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக விடுக்கப்பட்ட அவசரநிலை மற்றும் ஊரடங்கு உத்தரவுகளால் சுமார் 50 கோடி மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கொரோனா உயிர்கொல்லி வைரஸ் உலகமெங்கும் பற்றிப் பிடித்துள்ளது. இந்த வைரஸால் மிகப்பெரிய வணிக வளாகங்கள், சினிமா தியேட்டர்கள், மது விடுதிகள், கேளிக்கை அரங்குகள் என்பன மூடப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் பாதிப்பால் உலகம் முழுவதும் சுமார் இரண்டரை கோடி மக்கள் வேலைகளை இழந்துள்ளனர். இதன் எதிரொலியாக 3 கோடியே 40 லட்சம் அமெரிக்க டொலர்கள் அளவுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம)

# போர்த்துக்கலில் அவசர நிலை!

லிஸ்பன், மார்ச் 20

கொரோனா வைரஸ் ஐரோப்பாவில் வேகமெடுக்கத் தொடங்கியதை அடுத்து போர்த்துக்கலில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் போர்த்துக்கல் அதிபர் மேலும் தெரிவித்ததாவது: போர்த்துக்கலில் 600க்கும் மேற்பட்டவர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் போர்த்துக்கல் அரசு இறங்கியுள்ளது. அந்த வகையில் அடுத்த 15 நாட்களுக்கு அவசரநிலை அறிவிக்கப்படுகின்றது. (ம)



# 2.5 கோடி மக்கள் வேலை இழப்பார்கள்



வொஷிங்டன், மார்ச் 20

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக உலக அளவில் 2.5 கோடி மக்கள் வேலைகளை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கொரோனா உயிர்கொல்லி வைரஸ் உலகமெங்கும் பற்றிப் பிடித்துள்ளது. இந்த வைரஸால் மிகப்பெரிய வணிக வளாகங்கள், சினிமா தியேட்டர்கள், மது விடுதிகள், கேளிக்கை அரங்குகள் என்பன மூடப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் பாதிப்பால் உலகம் முழுவதும் சுமார் இரண்டரை கோடி மக்கள் வேலைகளை இழந்துள்ளனர். இதன் எதிரொலியாக 3 கோடியே 40 லட்சம் அமெரிக்க டொலர்கள் அளவுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம)

## இன்றைய நாள்

**மேடம்:** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள். பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். மாற்றினத்தவர்களால் மகிழ்ச்சியான செய்தி வந்து சேரும்.

**இடபம்:** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள். அடுத்தவர் நலனில் அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். அலைபேசி வழியில் ஆச்சரியப்படத்தக்க செய்தி வந்து சேரும். உறவினர்களால் லாபம் கிட்டும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்

**மிதுனம்:** எதிர்பார்த்த சலுகைகள் எளிதில் கிடைக்கும் நாள். புதிய தொழில் தொடங்கும் திட்டத்தை நிறைவேற்றுவீர்கள். வீடு மாற்றம் அல்லது உத்தியோக மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**கடகம்:** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள். குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுவீர்கள். கூட்டுத்தொழில் வெற்றி தரும். சேமிப்பு உயரும். அன்னிய இனத்தவர்களின் ஆதரவோடு புது முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்:** சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக் கும் நாள். தொலை தூரத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். தொழில்ரீதியாக வெளியூர்ப் பயணமொன்றை மேற்கொள் வீர்கள். வரவு திருப்தி தரும்.

**கன்னி:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும் நாள். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். குடும்ப பொறுப்புகள் கூடும். பிள்ளைகள் வழியில் சுபச் செய்தி வந்து சேரும்.

**துலாம்:** சங்கடங்கள் அகன்று சந்தோஷம் கூடும் நாள். புது முயற்சிகளில் வெற்றி கிட்டும். பல வழிகளிலும் பணம் வந்து பையை நிரப்பும். ஆற்றல் மிக்கவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள். வருமானத்தை விடச் செலவு கூடும். வாங்கல்– கொடுக்கல்களில் கவனம் தேவை. மற்றவர்களுக்குப் பொறுப்புகள் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** வெளிவட்டாரப் பழக்கவழக்கம் விரிவடையும் நாள். வளர்ச்சிக்கு வித்திட்டவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களால் ஒரு சில உபத்திரவங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** வருங்கால நலன் கருதி திட்டம் தீட்டும் நாள். எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**கும்பம்:** சுகங்கள் கூடும் நாள். கூட்டுத் தொழிலை தனித் தொழிலாக்கும் முயற்சி பலன்தரும். அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். குடும்பச்சுமை கூடும். உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்புகள் வந்து சேரும்.

**மீனம்:** வளர்ச்சி கூடும் நாள். தொலைதூரத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் விலகுவர். வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும்.

யாழில் அத்தியாவசியத் தேவை தவிர்ந்த

# வர்த்தக நிலையங்கள் பி.ப 3மணியுடன் பூட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணத்தில் உள்ள அத்தியாவசியத் தேவை தொடர்பான வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்களை கொரோனா வைரஸால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைக் கருத்தில்கொண்டு பிற்பகல் மூன்று மணியுடன் பூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய நேற்று நடந்த யாழ். வணிகர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டது.

இதன்படி, அத்தியாவசியத் தேவையான உணவகங்கள், மருந்தகங்கள், பலசரக்கு வியாபார நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களையும்கொரோனா வைரஸால் ஏற்பட்டுள்ள அவசர நிலையைக் கருத்திற்கொண்டு பிற்பகல் மூன்று மணியுடன் பூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள்தங்களின் அவசர தேவைக்காக மட்டும் ஓரிருவர் வந்து பொருட்களை கொள்வனவு செய்தல் சிறந்தது. குடும்பத்துடனோ கூட்டமாகவோ வருவதைத் தவிர்த்தல் வேண்டும் என்று கேட்டுகொள்ளப்பட்டுள்ளது. வர்த்தக கொள்வனவுக்காக வரும் பொதுமக்கள் நெருக்கமாக இருப்பதை தவிர்ப்பதுடன் தமக்கிடையில் இடைவெளியைப் பேணுமாறும் கேட்டுகொள்ளப்பட்டுள்ளது. வர்த்தக நிலையக் கதவின் கைபிடிகள் உள்ளிட்ட பகுதிகளை கிருமியகற்றும் பதார்த்தங்களைப் பயன்படுத்தி அடிக்கடி சுத்தபடுத்தி அதிஉச்ச சுகாதாரத்தைப் பேணுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (ம-7)

# படகு இயந்திரம் களவாடப்பட்டது!

நாகர் கோவில் பகுதியில் கடற்தொழில் செய்யும் தொழிலாளி ஒருவருடைய படகின் வெளியிணைப்பு இயந்திரம் களவாடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பில் முறைப்பாட்டாளர் தெரிவிக்கையில்,

கடற்தொழிலுக்கு செல்வதற்காக இன்று (நேற்று) வியாழக்கிழமை காலை கடற்கரைக்கு சென்றபோது எனது படகில் பொருத்தப்பட்டிருந்த வெளியிணைப்பு இயந்திரம் கலவாடப்பட்டதனை அறிந்து கொண்டேன். பொருளாதார வசதிகளின்றி கஷ்டத்திற்கு மத்தியில் வாழும் நான், வெளியிணைப்பு இயந்திரத்தினை தெரிந்தவர் ஒருவரிடமிருந்து பெற்றே தொழில் செய்து வந்தேன். அந்த இயந்திரமே களவாடப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை கடந்த ஜனவரி மாதம் வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொண்டார் எனும் சந்தேகத்தில் தேடப்பட்டு வரும் பிரதான சந்தேக நபரான ஐங்கரன் என்பவர் நேற்றுமுன் தினம் புதன்கிழமை நாகர் கோவில் கடற்கரை பகுதியில் நடமாடுவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், இராணுவத்தினர் அவ்விடத்திற்கு வந்திருந்தனர்.

இராணுவத்தினரை கண்டதும் சந்தேகநபர் கடலில் குதித்து நீந்தித் தப்பிச் சென்றுள்ளார். இதனால் ஆத்திரமுற்ற இராணுவத்தினர் அப்பகுதியில் நின்ற கடற்தொழிலாளர்கள் மற்றும் மக்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இராணுவத்தினரின் தாக்குதல் காரணமாக கடற்கரையில் நின்ற மக்கள் அங்கிருந்து தப்பியோடியதால், நேற்றுமுன் தினம் தினம் இரவு அவ்விடத்தில் மக்கள் நடமாட்டம் காணப்படவில்லை. இத்தகைய பின்னணியிலேயே படகின் இயந்திரம் களவாடப்பட்டுள்ளது. (ம)

## வவுனியாவில் விபத்து;ஒருவர் சாவு

வவுனியா செட்டிகுளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். துரை வீரசிங்கம் (வயது -68) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் நேற்றயதினம் காலை செட்டிகுளம் பகுதி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது மாட்டுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த முதியவர் செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பயனளிக்காமல் நேற்று மாலை உயிரிழந்தார். (ம-110)

# சீனாவை விட இத்தாலியில் கொரோனா இறப்பு அதிகம்

உரோம், மார்ச் 20

கொரோனாவின் பிறப்பிடமான சீனாவைவிட இத்தாலியில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இத்தாலியில் கொரோனாவின் தாக்கம் மிக மிக அதிகரித்துள்ளது. கொரோனா உலகமயமாவதற்கு இத்தாலியே முதன்மைக் காரணமாக உள்ளது. நேற்று இரவு வரையிலான நிலவரத்தின்படி கொரோனாவால் இத்தாலியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 405ஆக பதிவானது. சீனாவில் கொரோனாவால் இதுவரை 3 ஆயிரத்து 245 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வீட்டுக்குள்...

தற்காகச் செயற்படுவது அனைத்து அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களினதும் பொதுமக்களினதும் பொறுப்பாகும்.

அனைத்து விடயங்களையும் கருத்தில்கொண்டு நாளை (இன்று) 20ஆம் திகதி முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரையான காலப்பகுதி அரச, தனியார் துறைகளுக்கு வீட்டிலிருந்து வேலை செய்யும் வாரமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதி அரச விடுமுறை நாட்களாகக் கருதப்பட மாட்டாது. 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகள் மட்டும் சாதாரண அரச விடுமுறை நாட்களாகக் கருதப்படும்.

பொதுமக்கள் சேவையைத் தொடர்ச்சியாகப் பேணுவது அரசின் பொறுப்பாகும். எனினும், மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கையாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சட்டவாக்க நிறுவனங்கள் உள்ளார்ந்த முறைமையொன்றைப் பின்பற்றி மார்ச் 20 முதல் 27 வரை தமது அலுவலகப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்காலத்தில் தெரிவு செய்யப்பட்ட சில அரச சேவைகளை தொலைமுறைமையின் கீழ் செயற்படுத்த இந்த அனுபவம் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

மக்கள் வாழ்க்கையை வழமையான முறையில் பேணுவதற்குத் தேவையான சுகாதார, உள்ளூராட்சி, போக்குவரத்து, வங்கி, உணவு, நீர், மின்சாரம் ஆகிய வழங்கல் சேவைகளும், உர விநியோகம், நெல் கொள்வனவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட செயலாளர் அலுவலகங்கள், பிரதேச செயலாளர் அலுவலகங்களின் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

தொலைமுறைமையொன்றைப் பயன்படுத்தும்போது குறித்த நிறுவனத் தலைவர்கள் முடியுமானளவு தமது பணிக்குழாமை அலுவலகத்துக்கு வரவழைப்பதை மட்டுப்படுத்த வேண்டும். அதற்காக மின்னஞ்சல், குறுஞ்செய்தி, தொலைபேசி போன்ற தொழிநுட்ப முறைமைகள் போன்ற மாற்று நடைமுறைகளைப் பயன்படுத்த முடியும்.

பொதுமக்கள் அலுவலகங்களில் ஒன்றுகூடுவதைத் தவிர்த்து, பொதுமக்கள் சேவையை உரிய முறையில் தொடர்ச்சியாக முன்னெடுத்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தொழிநுட்ப முறைமைகளைப் பயன்படுத்த வேண்டும்.

இதற்காகத் தனிப்பட்ட தொலைபேசிகளைப் பயன்படுத்தும்போது மேலதிக செலவுகள் ஏற்பட்டால் அதற்கு அரசு தேவையான நிவாரணங்களை வழங்கும். இத்தகைய சந்தர்ப்பங்களின்போது அரசின் அனைத்து அதிகாரிகளும் தொடர்ச்சியாக மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கு உரிய முறைமையைப் பின்பற்றுவார்கள் என்று அரசு எதிர்பார்க்கின்றது.

கொரோனா வைரஸ் தொற்று நோயாகப் பரவுவதை தவிர்ப்பதே முக்கிய நோக்கமாகும். எனவே, பல்வேறு நிறுவனங்களினூடாக வழங்கப்படும் சேவைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை என்பதால் தமது பணிக்குழாமினரை அறிவூட்டி, பணிக்குழாமினரை மட்டுப்படுத்துவதற்காகத் தமது நிறுவனங்களில் எழுத்து மூலமான முறைமையொன்றை ஏற்படுத்திக்கொள்ளல் நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகும்.

தனியார் துறைகளும் மேற்படி முறைமைகளுக்கேற்ப தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்து வர்த்தக சபைகளுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது' என்றுள்ளது. (ம-ஒ-22)

## தள்ளிப்...

இது தொடர்பில் தேசப்பிரிய மேலும் தெரிவித்ததாவது: நாடு முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் எப்போது நடைபெறும் என்ற திகதி எதிர்வரும் 26ஆம் திகதி அறிவிக்கப்படும். கொரோனா வைரஸ் தாக்கத்தைப் பொறுத்தே தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும். மே மாதம் அல்லது ஜூன் மாதம் தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. அந்தத் திகதியை கொரோனாவின் தாக்கமே தீர்மானிக்கும் - என்றார்.

சீனாவின் வுகான் மாகாணத்தில் தோற்றம்பெற்ற கொரோனா இலங்கை உள்ளிட்ட 150 நாடுகளுக்குப் பரவியுள்ளது. நேற்று இரவு வரையிலான நிலவரத்தின்படி இலங்கையில் 60 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா அச்சம் காரணமாகத் தேர்தலை பிற்போட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சஜித் தரப்பு, ரணில் தரப்பு உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன. 'மக்களை வீட்டுக்குள் முடக்கி தேர்தலை நடத்துவது ஜனநாயகமல்ல' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முன்னதாகக் கருத்துத் தெரிவித்திருந்தார். இவ்வாறான பல்வேறு அழுத்தங்களைத் தொடர்ந்து தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சார்க் நாடுகளின் தலைவர்களது வீடியோ கன்பரன்ஸில் இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, 'தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும்' என்று தெரிவித்திருந்தார். (ம-ஒ.5,22)

## கொரோனா...

பட்டுள்ள அச்சுறுத்தலைக் குறைப்பதற்கான முதலீடுகளை வழங்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ எடுத்துள்ள தீர்மானத்துக்கு அமைய அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஒன்றிணைந்த நிதியத்திடம் காணப்படும் நிதியைச் செலவிடுவதற்கான அதிகாரம் திறைசேரியின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஔடத பற்றுச்சீட்டுக்கான மிகுதியை செலுத்துவதற்காக 102 பில்லியன் ரூபாவை வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. உரக் கொள்வனவின் மிகுதியை செலுத்துவதற்கு 3 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் மத்திய தர நிர்மானப் பணிகளுக்கான பற்றுச்சீட்டு மிகுதியை செலுத்த 5 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கொரோனா தொற்றினால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள சுற்றுலா, ஆடைக் கைத்தொழில், வர்த்தகம் உள்ளிட்ட துறைகளுக்கான கடனை மீளச் செலுத்த 6 மாதங்கள் சலுகைக் காலம் வழங்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மேலும் பணி முதலீட்டுக்கு 4 வீத வட்டியின் கீழ் கடனை வழங்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதேவேளை பொதுத் தேர்தலின் செலவுகளுக்காக 8 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கிடுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.


(ம-22)

நிர்பயா பாலியல் வழக்கு

# இன்று அதிகாலையில் நிறைவேறுகிறது தூக்கு

**புதுடெல்லி, மார்ச் 20**

**நிர்பயா பாலியல் வன்கொடுமை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் 4 பேரின் அனைத்து சட்ட வாய்ப்புகளும் முடிந்துவிட்டதால், இன்று அதிகாலை 5.30 மணிக்குள் தூக்கு தண்டனை நிறைவேற்றப்படும் என திஹார் சிறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**



நிர்பயா வழக்கில், தூக்கு தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரி, குற்றவாளிகள் 4 பேரும் டெல்லி விசாரணை நீதிமன்றத்தில் இறுதியாகத் தாக்கல் செய்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டதால் இன்று தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட உள்ளது.

குற்றவாளிகளில் முகேஷ் சிங், பவன் குப்தா, அக்சய் சிங் ஆகியோர் தாக்கல் செய்த இரண்டாவது கருணை மனுக்களையும் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதி பானுமதி தலைமையிலான அமர்வு நேற்று அடுத்தடுத்து தள்ளுபடி செய்தது.

இந்த நிலையில் உச்சநீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் நிலுவையில் இருப்பதால், தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரி டெல்லி விசாரணை நீதிமன்றத்தில் குற்றவாளிகள் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அரசுத் தரப்பு வழக்கறிஞர் இர்பான் அகமது நீதிமன்றத்தில் கூறுகையில், 'குற்றவாளிகள் 4 பேருக்கும் எந்தவிதமான சட்ட வாய்ப்புகளும் நிலுவையில் இல்லை. பவன் குப்தா, அக்சய் ஆகியோரின் 2ஆவது கருணை மனுக்களையும் குடியரசுத் தலைவர் பரிசீலிக்கவில்லை' எனத் தெரிவித்தார்.

நீதிபதி தர்மேந்திர ராணா பிறப்பித்த உத்தரவில், 'குற்றவாளிகள் தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரி தாக்கல் செய்த மனுவில் எந்தவிதமான நியாயமான காரணங்களும் கூறப்படவில்லை. தங்களின் சட்ட வாய்ப்புகள் முடியும் வரை காத்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள். ஆதலால், குற்றவாளிகளின் தண்டனையை நிறுத்தி வைக்க எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. ஆதலால் மனுவைத் தள்ளுபடி செய்கிறேன்' என உத்தரவிட்டார்.

இதைக்கேட்ட குற்றவாளி அக்சய் குமார் சிங்கின் மனைவி நீதிமன்றத்தில் அலறி கண்ணீர் விட்டார். இனி மேல் எவ்வாறு நான் உயிர் வாழ்வேன், என்னையும் தூக்கிலிடுங்கள் என்று கண்ணீர் விட்டதால் நீதிமன்ற வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து குற்றவாளிகள் 4 பேருக்கும் நாளை அதிகாலை 5.30 மணிக்குள் திஹார் சிறையில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்படும் என்பது உறுதியாகிவிட்டதாக திஹார் சிறை நிர்வாகிகள் தெரிவித்தனர். (ம)

# தொடர்ந்தும் கடன் அறவீடு மக்கள் கடும் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் காரணமாக மறு அறிவித்தல் வரை, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வழங்கிய கடன்களை அறவீடு செய்யும் செயற்பாட்டை எதிர்வரும் 6 மாத காலத்துக்கு நிறுத்துமாறு ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும் நுண்நிதிக் கடன் உட்பட வங்கிக் கடன்களை நிதிநிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தொடர்ந்தும் அறவீடு செய்யும் செயற்பாட்டில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டப்படுகிறது. கடன்களை அறவீடு செய்யும் அலுவலர்கள் தமது வீடுகளுக்கு நேற்றும் வருகை தந்ததாகவும், தவணைப் பணத்தைச் செலுத்துமாறு வற்புறுத்துவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வேலைவாய்ப்புகளோ வேறு வருமானமோ இல்லாத நிலையில் தவணைப் பணத்தை எவ்வாறு செலுத்த முடியும் என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும் சில பகுதிகளில் பண அறவீட்டு அலுவலர்கள் பொலிஸாரால் எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரச அலுவலர்களுக்கான சம்பளப் பணம் வங்கியில் வைப்பிலிடப்படுகின்ற போது, கடன் பெற்ற அலுவலர்களின் தவணைப்பணம் கழிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயம் சம்மந்தமாக வங்கிகள் சிலவற்றைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, தமக்கு இன்னமும் உத்தியோகபூர்வ அறிவுறுத்தல் மத்திய வங்கியிடமிருந்து கிடைக்கவில்லை. அதன் பின்னரே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தனர். (ந)

# 7 பேரைத் தெரிவு செய்ய 330 பேர் தேர்தல் களத்தில்

## 5 லட்சத்து 71ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 19 அரசியல் கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களுக்குமாக 33 தரப்புக்களைச் சேர்ந்த 330 பேர் 7 பேரைத் தெரிவு செய்வதற்காகப் போட்டியிடுகின்றனர்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்த 3 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்ப ட்டுள்ளன. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார். நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்த பின்னர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 19 அரசியல் கட்சிகள் வேட்புமனுத் தாக்கல் செய்தன. 21 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியிருந்தன. 17 சுயேச்சைக் குழுக்கள் வேட்புமத் தாக்கல் செய்திருந்தன. அதில் 3 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிரா கரிக்கப்பட்டன. வேட்பாளர் சத்தியப்பிரமாணம் செய்யாமை மற்றும் தேவைப்படுத்தப்பட்ட எண்ணிக்கையை விட அதிகளவான எண்ணிக்கை கொண்ட வேட்பாளர்களின் பெயர்கள் வேட்பு மனுவில் உள்ளடக்கப்பட்டன என்பவற்றால் சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

**அரசியல் கட்சிகள்**

ஜனசெத பெரமுண, சிங்களதீப ஜாதிக பெரமுண, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சோசலிச சமத்துவக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, முன்னிலை சோசலிசக் கட்சி, புதிய ஜனநாயக முன்னணி, ஐக்கிய சோசலிசக் கட்சி, ஈழவர் ஜனநாயக முன்னணி, எங்கள் மக்கள் சக்தி கட்சி.

**சுயேச்சைக் குழுக்கள்**

ஆழ்வாப்பிள்ளை குருகுலன், பழனி குகனேஸ்வரன், சுந்தரலி ங்கம் செல்வகுமார், சுதர்சிங் விஜியக்காந், சந்திரகுமார் முருகேசு, அபீத்த சபுமல் சேனாநாயக்க, லெட்சுமன் பாரதிதாசன், ஐங்கரநேசன் பொன்னுத்துரை, அப்துல் மஜீது கமறுதீன், முருகன் குமாரவேல், கணேசமூர்த்தி பிரதீப ராஜ், சடாசிவம் அருமைத்துரை, மதிமுகராசா விஜயகாந், செபமாலை கண்ணன் ஆகியோர் தலைமையிலான 14 சுயேச்சைக்குழுக்களும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றன.

இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் 4 லட்சத்து 79 ஆயிரத்து 584 வாக்காளர்களும், கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் 92 ஆயிரத்து 264 பேருமாக 5 லட்சத்து 71 ஆயிரத்து 848 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ஒ.5,105)

# எமது பிரச்சினைகளை தீர்ப்பவர்களே தேவை

## உதயராசா கூறுகின்றார்



வவுனியா, மார்ச் 20

தமிழர்களுக்குப் பிரச்சினைகள் இருப்பதாக மாத்திரம் சொல்வதற்கு மக்கள் பிரதிநிதிகள் தேவையில்லை. அதனைத் தீர்ப்பவர்களே தேவை என்று சிறிரெலோ கட்சியின் செயலாளரும் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான கா.உதயராசா தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் வேட்பு மனுத் தாக்கல் செய்தபின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த தேர்தல்களில் தேசிய கட்சிகளில் போட்டியிட்ட நாம் பல சந்தர்ப்பங்களில் வெல்லமுடியாமல் மாற்று இனத்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புகளை வழங்கியிருந்தோம். தற்போது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தனித்துப் போட்டியிடுகின்றோம். 9 தமிழ் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம்.

கடந்த காலங்களில் வன்னிப் பகுதியில் தொடர்ச்சியாக அமைச்சர்களாக இருந்தவர்கள் தமது சமூகத்துக்கு மாத்திரம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். எமது இனம் சார்பாக இருக்கக்கூடிய தேவைகளை அரசுக்குத் தெரியப்படுத்துவதற்குத் தமிழ் அமைச்சர்கள் இல்லாத காரணத்தால் பேரம் பேசக்கூடிய ஒரு சக்தியாக எம்மை முன்னிறுத்துவதற்காகப் போட்டியிடுகின்றோம் - என்றார். (த-110)



ஒலிம்பிக் தொடர் ஜூலை மாதம் 24ஆம் திகதி ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடருக்கான ஒலிம்பிக் தீபம் பாரம்பரிய முறைப்படி கிரீஸில் நேற்று ஏற்றப்பட்டது. பழமைமிக்க எதென்ஸ் அரங்கத்தில் ஒலிவம் இலைகள், எதென்ஸ் பாரம்பரிய உடைகள் உள்ளிட்ட அம்சங்களுடன் இந்தத் தீபம் ஏற்றிவைக்கப்பட்டது. விமானம் மூலம் ஜப்பானுக்குத் தீபம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகி முடிடையும் வரையில் தீபம் அணையாமல் பாதுகாக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# ஒலிம்பிக் தீபத்தைப் பெற கிரீஸ் பறந்தது ஜப்பான்




ஒலிம்பியாவில் பாரம்பரிய முறைப்படி ஏற்றப்பட்ட ஒலிம்பிக் தீபத்தை பெறுவதற்காக ஜப்பானில் இருந்து சிறப்பு விமானம் கிரீஸ் சென்றுள்ளது.

32ஆவது ஒலிம்பிக் விளையாட்டு போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இந்த வருடம் ஜூலை 24 ஆம் திகதி ஆரம்பமாவுள்ளது. கொரோனா வைரஸின் கோரப்பிடி உலகம் முழுவதும். பெரும் கலக்கத்தை உருவாக்கி விட்டதால் ஒலிம்பிக் போட்டி நடக்குமா? நடக்காதா? என்று அவ்வப்போது சர்ச்சை கிளம்புகிறது.

ஆனால், ஒலிம்பிக் போட்டியை திட்டமிட்டப்படி நடத்துவதில் உறுதியுடன் இருக்கிறோம். இன்னும் 4 மாதங்கள் இருப்பதால் இப்போதைக்கு எந்த கடினமான முடிவும் எடுக்கப்போவதில்லை என்று சர்வதேச ஒலிம்பிக் சபை அறிவித்துள்ளது.

ஆனாலும் 56 ஆண்டுகளுக்கு பின்னர் கிடைத்து இருக்கும் ஒலிம்பிக் வாய்ப்பை நழுவ விட்டு விடக்கூடாது என்பதில் ஜப்பான் அரசாங்கமும் எல்லாவிதமான முன்எச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

வழக்கமாக ஒலிம்பிக் ஆரம்பமாவதற்கு முன்பாக ஒலிம்பிக் தீபம் அது பிறந்த நாடான கிரீஸ் நாட்டின் ஒலிம்பியா நகரில் ஏற்றப்படுவது வழக்கம். இதன்படி கடந்த 12ஆம் திகதி ஒலிம்பிக் தீபம் ஒலிம்பியாவில் பாரம்பரிய முறைப்படி ஏற்றப்பட்டது. பிறகு ஒலிம்பிக் தீபம் ஒரு வாரம் கிரீஸ் நாட்டில் தொடர் ஓட்டமாக எடுத்து செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் கொரோனா அச்சத்தால ஒலிம்பிக் தீபத்தின் தொடர் ஓட்டம் ஓரிரு நாட்களுடன் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் ஒலிம்பிக் தீபத்தை பெற்றுக்கொள்வதற்காக ஜப்பானில் இருந்து 'டோக்கியோ 2020' என்ற பெயருடன் சிறப்பு விமானம் நேற்று கிரீஸ் நாட்டுக்கு புறப்பட்டது. முதலில் ஒலிம்பிக் ஒருங்கிணைப்பு சபைத் தலைவர் யோஷிரோ மோரி, ஒலிம்பிக் மந்திரி செய்கோ ஹஷிமோட்டோ மற்றும் முன்னணி நிர்வாகிகள் அங்கு செல்வதாக இருந்தது. ஆனால் கொரோனா பயத்தால் ஒலிம்பிக் குழுவினர் யாரும் செல்லவில்லை. ஏற்கனவே கிரீசுக்கு சென்றிருந்த ஒலிம்பிக் அதிகாரிகள் தீபத்தைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து ஜப்பானுக்கு திரும்புகிறார்கள்.

# ஒலிம்பிக் போட்டியை நடத்த வீர, வீராங்கனைகள் எதிர்ப்பு

கொரோனா வைரஸ் வேகமாக பரவி வரும் நிலையில் ஒலிம்பிக் போட்டியை தள்ளி வைக்க வேண்டும் என்று வீர. வீராங்கனைகள் சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலை வலியுறுத்தி உள்ளனர்.

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் மிகவும் வேகமாக பரவி வருகிறது. இதுவரை 8 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். சுமார் 2 லட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸால் உலகம் முழுக்க பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதேபோல விளையாட்டுத் துறையையும் பெரிய அளவில் பாதித்துள்ளது.

இந்த நிலையில் ஒலிம்பிக் போட்டி ஜூலை 24ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 9ஆம் திகதி வரை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக ஒலிம்பிக் போட்டி நடத்தப்படுமா? என்று சந்தேகம் நிலவி வருகிறது. ஆனால் சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டி குறிப்பிட்ட திகதியில் நடைபெறும் என்று தொடர்ந்து கூறி வருகிறது.

ஒலிம்பிக் கவுன்சிலின் இந்த முடிவுக்கு வீர, வீராங்கனைகள் தரப்பில் இருந்து எதிர்ப்பு கிளம்பி உள்ளது. ஒலிம்பிக் போட்டியை தள்ளி வைக்க வேண்டும் என்று வீர, வீராங்கனைகள் சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலை வலியுறுத்தி உள்ளனர்.

கிரீஸ் போல்வால்ட் வீராங்கனை கேத்ரினா ஸ்டெபானிடி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது:

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி வீர, வீராங்கனைகளின் உடல்நலத்தில் அக்கறை செலுத்தவில்லை. குழுப் போட்டிகளில் பல நாடுகளைச் சேர்ந்தவர்களும் ஒன்றாக பங்கேற்க வேண்டி இருக்கும். ஜிம்னாஸ்டிக் போன்ற விளையாட்டுகளில் பலர் தொடக் கூடிய பொருட்களை தொட இருக்கும். இதை ஒலிம்பிக் கவுன்சில் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார்.

வீரர், வீராங்கனைகளின் எதிர்ப்பு தொடர்பாக ஒலிம்பிக் கவுன்சில் தலைமை அதிகாரி தெரிவிக்கையில்;

வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் உடல் நலத்தில் நாங்கள் அக்கறை கொண்டு இருக்கிறோம். அதே நேரத்தில் ஒலிம்பிக் போட்டியை திட்டமிட்டப்படி நடத்த வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம்- என்றார்.






# ஐபிஎல் போட்டி நடந்தால் பங்கேற்பேன் – வோர்னர்

ஏப்ரல் 15ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ள ஐபிஎல் தொடரை பிசிசிஐ நடத்தினால் டேவிட் வோர்னர் பங்கேற்பார் என அவரது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.


ஐபிஎல் 2020 சீசன் வருகிற 29ஆம் திகதி ஆரம்பமாவதாக இருந்தது. கொரோனா வைரஸ் தொற்று பீதியால் ஏப்ரல் 15ஆம் திகதி வரை தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எந்தவொரு கிரிக்கெட் போட்டிகளும் தற்போது நடைபெறவில்லை. இதனால் வீரர்கள் வீட்டுக்குள் முடங்கி கிடக்கின்றனர்.


இந்த நிலையில் ஐபிஎல் போட்டியை நடத்தினால் பங்கேற்பேன் என்று டேவிட் வோர்னர் தெரிவித்துள்ளார்.

டேவிட் வோர்னர் சார்பில் அவரது முகாமையாளர் தெரிவிக்கையில்; பிசிசிஐ இந்த சீசனை நடத்துவதில் உறுதியாக இருந்தால், வோர்னர் விளையாடுவார். இதற்கிடையில் ஆஸ்திரேலிய அரசு நான்காம் நிலை பயணத்தடையை விதித்துள்ளது. நான்காம் நிலை என்பது எந்தவொரு நபரும் வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாது என்பதுதான்.

ஒருவேளை பிசிசிஐ ஐபிஎல் போட்டிகளை நடத்தினால் டேவிட் வோர்னர் பங்கேற்பார். விடயங்கள் வியத்தகு முறையில் மாறும். அதற்கு சில மணி நேர இடைவெளி போதுமானது. பதில் என்பது உங்களது எண்ணத்தை மாற்றுவதுதான்- என்றார்.

ஐபிஎல் போட்டியில் விளையாட 17 ஆஸ்திரேலிய வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இதில் டேவிட் வோர்னர், பேட் கம்மின்ஸ், ஸ்மித் போன்றோர் முக்கியமானவர்கள்.






# கூடைப்பந்து, கால்பந்து வீரர்களையும் விட்டு வைக்காத கொரோனா வைரஸ்

அமெரிக்காவைச் சேர்ந்த முன்னணி கூடைப்பந்து வீரர் கெவின் டுரண்ட், பிரான்ஸ் கால்பந்து வீரர் பிளஸ் மட்டுடி ஆகியோர் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸின் தாக்கம் அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் வேகமாக பரவி வருவதுடன், பலத்த பாதிப்பையும் ஏற்படுத்தி வருகிறது. இந்த வைரஸின் தாக்கம் விளையாட்டு வீரர்களையும் விட்டுவைக்கவில்லை. சர்வதேச விளையாட்டு போட்டிகள் பெரும்பாலும் நிறுத்தப்படுவதால் வீடுகளில் முடங்கி கிடக்கும் வீரர்களில் சிலருக்கு கொரோனா வைரஸ் தாக்குதல் இருப்பது வெளிஉலகுக்கு தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவில் புகழ்பெற்ற என்.பி.ஏ. கூடைப்பந்து போட்டி கொரோனா வைரஸ் அச்சுறுத்தலால் தள்ளிவைக்கப்பட்டு இருக்கும் நிலையில் இந்த போட்டித் தொடரில் புரூக்ளின் நெட்ஸ் அணிக்காக விளையாடிய நட்சத்திர வீரர் கெவின் டுரண்ட் உட்பட அந்த அணியில் இடம் பிடித்திருந்த 4 வீரர்களுக்கு கொரோனா நோய் பாதிப்பு இருப்பது மருத்துவ பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டு இருப்பதாக அந்த அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. புரூக்ளின் நெட்ஸ் அணியின் வீரர்கள் மற்றும் அந்த அணியுடன் சமீபத்தில் விளையாடிய எதிரணியில் இடம்பெற்ற வீரர்கள் மற்றும் வீரர்களுடன் தொடர்பில் இருந்த நபர்களும் கவனமாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கொரோனாவால் பாதிக்கப்பட்ட 31 வயதான கெவின் டுரண்ட் உள்ளிட்ட 4 வீரர்களும் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டு உள்ளனர். அந்த அணியின் மற்ற வீரர்களும் தங்களை தானே தனிமைப்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் இத்தாலியைச் சேர்ந்த கால்பந்து கழகமான யுவென்டஸ் அணிக்காக விளையாடி வரும் வீரர் பிளஸ் மட்டுடியும் கொரோனா பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார். 2018ஆம் ஆண்டு உலக கோப்பையை வென்ற பிரான்ஸ் அணியில் இடம் பிடித்து இருந்த 32 வயதான பிளேஸ் மாட்டுடிக்கு சமீபத்தில் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் கொரோனா தாக்கம் இருப்பது தெரியவந்தது.

ஏற்கனவே யுவென்டஸ் அணி வீரர் டேனியல் ருகானிக்கு (இத்தாலி) முதலில் கொரோனா பாதிப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது அவருக்கு நோய்க்கான அறிகுறி எதுவும் இல்லை என்று மறுக்கப்பட்டுள்ளது.

இரணைமடு திருவருள் மிகு
கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்

21.03.2020 நடைபெற இருந்த பொதுக்கூட்டம் தற்காலத்து அசாதாரண சூழ்நிலை காரணமாக பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

-ஆலய அறங்காவலர்சபை-

ஒருவழி மூடப்படின்...!
புதுவழி திறக்கப்படும்....!

SKYPE Accounting
D.Sam

தினந்தோறும் இரவு
12 மணியிலிருந்து..

ஏற்கனவே SKYPE மூலம் கற்றுவரும் மாணவர்களுக்கு மேலாக ஆர்வமுள்ள மாணவர்கள் 077 848 0604 என்ற SKYPE இலக்கத்திற்கு பின்வரும் விடயங்களை அனுப்பி வைக்கவும்.....

1. பெயர்
2. விலாசம்
3. பாடசாலை
4.தரம் (A/L)

DMI
JAFFNA

## கொரோனா வைரஸ் பாதிப்புக்கு

# ஜேர்மன் கால்பந்து வீரர்கள் 2.5 மில்லியன் நிதியுதவி

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினால் ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடியை எதிர்த்துப் போராட 2.5 மில்லியன் யூரோக்களை நன்கொடையாக வழங்குவதாக ஜேர்மன் தேசிய அணி கால்பந்து வீரர்கள் அறிவித்துள்ளனர்.

ஜேர்மனியின் கால்பந்து வீரர்கள் கோவிட் வைரஸ் நோய்த் தொற்று பாதிப்புகள், மரணங்களைக் கட்டுப்படுத்த நிதி உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர். அது மட்டுமின்றி வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்த தன்னார்வலர்க்கும் அவர்கள் அழைப்புவிடுத்துள்ளனர்.



இதுகுறித்து ஜேர்மன் அணித் தலைவர் மானுவல் நியூயர் இன்ஸ்டாகிராமில் வெளியிட்ட வீடியோ வில் கூறுகையில், இதுபோன்ற நேரங்களில் நாம் ஒருவருக்கொருவர் அக்கறை கொள்ள வேண்டும். தேசிய அணியில் நாங்கள் இதுகுறித்து யோசித்தோம், கொரோனாவை கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்காக 2.5 மில்லியன் யூரோ நன்கொடை வழங்க முடிவு செய்துள்ளோம்- என்றார்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.